# வினாக்களும்

# சரதாவின்



# விடைகளும்

# வினாக்களும்
# சுரதாவின் விடைகளும்

உவமைக் கவிஞர்
சுரதா

சுரதா பதிப்பகம்
56அ, இலட்சுமணசுவாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600078
தொலைபேசி எண் : 428508

முதற்பதிப்பு : ஆகஸ்டு, 1991
உரிமை : ஆசிரியருக்கு

பக்கம் : VIII + 176 = 184

விலை: ரூ. 23-00

அச்சிட்டோர் :

ஸ்ரீகோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-600005
தொலைபேசி எண் : 844554

# இது ஒரு மூக்கு நூல்
# இலக்கிய மூச்சு நூல்

"கற்றில னாயினும் கேட்க....' என்னும் குறள்வரி வாயிலாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வினா— விடை முறைக்கு வித்திட்ட உலகின் முன்னோடிப் பேரறிஞர் நம் திருவள்ளுவரே!

ஒருவரை வேலையில் அமர்த்த அவரது பொது அறிவை மதிப்பீடு செய்யும் வினா—விடை என்னும் 'இன்டர்வியூ' (INTERVIEW) முறையை ஆங்கிலேயர் அறிமுகப் படுத்தினர்.

அதனை 'நேர்காணல்' என்னும் தனித்தமிழ்ச் சொல்லால் முதன்முதல் குறிப்பிட்டவர் வடலூர் வள்ளலார் இராமலிங்கஅடிகள். வடமொழியே சிறந்தது என்று வாதிட வந்த கோடகநல்லூர் சுந்தரசாமி என்பாரிடம் தமிழே சிறந்தது என்று ஏழு நாள்கள் வாதிட்டு வென்றவர் வள்ளலார். அந்த வாதங்களே நூல் வடிவம் பெற்றிருந்தால் தமிழ் மொழியின் தற்காப்புக்காக நடைபெறும் மொழிப் போருக்கு வலிமையான வாளும் கேடயமும் ஆகியிருக்கும்.

முதல் 'நேர்காணல்' என்பது-காசிப்பண்டாரத்துக்கும் கிறித்தவப் பாதிரியாருக்கும் 1857-ல் நடை பெற்ற உரையாடல் ஆகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் பகுத்தறிவுப் பகலவனாய் ஒளிர்ந்த பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களே மேடைப் பேச்சில் முதன் முதல் வினா—விடை

முறையை அறிமுகப்படுத்தி மணிக்கணக்கில் மக்கள் மனத்திலே சிந்தனைச் சுடரைக் கொழுந்துவிடச் செய்தவர்.

பத்திரிகை உலகைப் பொறுத்தவரை வடஇந்தியரான பாபுராவ் பட்டேல் 'பிலிம் இந்தியா' என்னும் தமது இதழில் முதன் முதல் கேள்வி—பதில் பகுதியைத் தொடங்கி பண்டித நேரு போன்ற உலகத் தலைவர்களையே வியக்க வைத்தார். அவரது அடிச்சுவட்டில் முதன் முதல் தமிழ் ஏட்டுலகில் தனிச்செல்வாக்கை வளர்த்துக் கொண்டவர் 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன். இன்று தமிழ்நாட்டின் எல்லா ஏடுகளுமே அரசியல் தலைவர்கள், திரைப்படக் கலைஞர்கள் ஆகியோரிடம் வினாக்கள் எழுப்பி விடைகளைப் பேட்டிகளாக வெளியிடுவதைப் பார்க்கிறோம்.

ஊறுகாய் இல்லாத மோர்ச் சோறு வாயின் உள்ளே இறங்காது என்பது போல, எந்த வகையிலாவது வினா—விடைப் பகுதி இல்லாத ஏடும் வாசகர்களின் வரவேற்பைப் பெறாது என்பதே நடைமுறை உண்மை.

நானே பல ஏடுகளுக்கு 150க்கும் மேற்பட்ட பேட்டிகள் தந்திருக்கின்றேன். என்னிடம் முதன்முதல் பேட்டி கண்டவர் புகழ் பூத்த தமிழ் நாவலாசிரியர் ஜெகசிற்பியன். 15-5-1952 'சிரஞ்சீவி' மாத இதழில் அது வெளியாயிற்று. ஆனந்த விகடன், கல்கி, தினத்தந்தி, ராணி, குமுதம், குங்குமம், மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் வெளியிட்ட 'போர்வாள்' முதலானவை என் பேட்டிகளை ஏந்தி வந்தவற்றுள் குறிப்பிடத் தக்கவை. மலேசியாவின் தமிழ்நேசன், தினமணி, வானம்பாடி, சிங்கப்பூரின் தமிழ்முரசு ஆகிய ஏடுகளும் கூட என் பேட்டிகளை வெளியிட்டுள்ளன.

தமிழ் நாட்டிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றுக்கும் பேட்டிகள் கொடுத்திருக்கிறேன். சிறந்த எழுத்தாளர்-தயாரிப்பாளர் எம். எஸ். பெருமாள் முயற்சியால் 1988-ல் நான் அளித்த

தமிழ்ப் பேட்டி ஆங்கில விளக்கவுரையுடன் இந்தியா முழுவதும் ஒளிபரப்பு ஆயிற்று. தமிழகக் கவிஞர்களில்—பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில்—அத்தகைய ஒரு மணிநேரப் பேட்டிக்கான வாய்ப்பு வழங்கப்பட்ட முதல் கவிஞன் இந்தச் சுரதாவே? அந்தப் பேட்டியில் முக்கியப் பங்கேற்றவர்: நான் பயின்ற தஞ்சை மாவட்டம் உரத்தநாடு உயர்நிலைப் பள்ளியில் படித்தவரும் பலதுறை இலக்கியப் படைப்பாளியுமான கவிஞர் அ.மறைமலையான். அப்போது உறுதுணை புரிந்தவர் வானொலி நாடக ஆசிரியர் பட்டுக்கோட்டை குமாரவேல்.

இதுகாறும் நான் கொடுத்த பேட்டிகளில் ஐம்பதை மட்டுமே தேர்ந்தெடுத்து 'வினாக்களும் சுரதாவின் விடைகளும்' எனும் இந்நூலில் இணைத்திருக்கிறேன். எஞ்சியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட என் பேட்டிகளை அடுத்தடுத்து 'சுரதா பதிப்பகம்' நூல்களாக வெளியிடும்.

தன் வரலாற்றுக்கு ஒரு முன் வரலாறு இத்தகைய வினா-விடை நூல் என்பது என் கருத்து. ஒருவரது அறிவை அனுபவத்தை எடை போட்டுக் காட்டும் துலாக்கோல் ஆகவும் இது துலங்கும்.

முகத்திலே முந்திக்கொண்டு இருப்பது மூக்கு. அப்படித் தான் ஓர் அறிஞனின் அறிவு வரலாற்றுக்கு அடிப்படை அறிமுகம் அவனுடைய பேட்டிகள். அந்தப் பேட்டிகள் அடங்கிய நூலை, ஒரு மூக்கு நூல்—இலக்கிய மூச்சு நூல்—எனவும் கூறலாம்.

இப்படிப் பேட்டிகளையே நூலாக்கலாம் என்று முதன் முதலாக நான் சொன்ன கருத்தை நிறைவேற்றியவர் கவிஞர் நாரா. நாச்சியப்பன். அவரது நூலைப் பார்த்ததும் என் பேட்டிகளும் ஏன் நூலாக மலரக் கூடாது என்னும் வினாவினை என் மனைவி சுலோச்சனா தொடுத்தார். கவிமாமணி அ. மறைமலையான், சேலம் கவிஞர் எழுஞாயிறு, கவிமாமணி சாஸ்திரி வெங்கட்ராமன், அன்னையன்பன் போன்ற நண்பர்களும் அதே வினா

எழுப்பினர். அவர்களுக்கு விடையாக வருவதே இந்நூல்.

இதே போன்று இதுவரை ஏறத்தாழ நூறு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றின் பட்டியலையும் இணைத்துள்ளேன்.

இந்தச் சுரதா எத்தகைய துணிச்சலான புதுமைக் கருத்துகளுக்குச் சொந்தக்காரன் என்பது இந்நூலில் வரும் என் விடைகளைப் படித்தாலே விளங்கும். நான் இறந்து கிடக்கும் நிலையில் நான் எழுதிய பாடல்களையே ஒலிபரப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். என் முதல் நூலின் தலைப்பே 'சாவின் முத்தம்'! இப்படிச் சாவைச் சந்திக்கும் துணிவுள்ள கவிஞனாக என்னைத் தவிர, ஒரு ஷேக்ஸ்பியரையோ, ஷெல்லியையோ, காளிதாசனையோ, கபீர்தாசையோ கூற முடியுமா? 'மங்கலம்' 'அமங்கலம்' என்றெல்லாம் பார்க்காத உண்மையான பகுத்தறிவுப் பாவலன் இந்தச் சுரதா!

எதிர்கால இளைஞர்கள் தங்கள் எண்ணக் கழனியில் எழுச்சிக் கருத்துப் பயிர்கள் செழிக்க இத்தகைய நூல்கள் இலக்கிய உரமாகும் என்பது உறுதி.

இந்நூல் அழகுற அச்சிட்டுத்தந்த ஸ்ரீகோமதி அச்சக உரிமையாளர் திரு. S. சரவணகுமார், செல்வன் மகேஷ்குமார், மெய்ப்புத் திருத்தி உதவிய கவிஞர் நெ.அ. பூபதி, ஓவியர் அமுதோன் ஆகியோர்க்கும் நன்றி.

அன்புள்ள,
சுரதா

56-அ, டாக்டர் இலட்சுமண சாமி சாலை
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை-600078
தொலைபேசி எண் : 428508
1-8-1991.

# தமிழ் வித்துவான் தாண்டவராயரின் வினா விடை முதல் தன்மானக் கவிஞர் சுரதாவின் வினா விடை வரை (1820—1991)

1820 — இலக்கண வினா விடை
—வித்துவான் தாண்டவராய முதலியார்

1828 — இலக்கணச் சுருக்க வினா விடை
—திருத்தணிகை விசாகப்பெருமாளையர்

1846 — தமிழ் இலக்கண நூற் சுருக்க வினா விடை
—ஜி. யு. போப்பையர்

1857 — சத்திய சுவிசேஷ சபையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவருக்கும், சிவ சமயத்தைச் சேர்ந்த ஒரு காசிப் பண்டாரத்திற்கும் நடந்த சம்பாஷணைகள்

1865 — இலக்கண வினா விடை
—யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்

1865 — பரிமத்தேசு தூஷணை மறுத்தலாகிய தர்க்கக் கும்மி
—புதுவை அந்தோணி நாதர்

1866 — பஞ்சபத மகாவாக்கியம் (வினா-விடை)
—மொழிபெயர்ப்பு: சிதம்பரம் தௌட சுவாமிகள்

1868 — யாப்பிலக்கண வினா விடைச் சுருக்கம்
—சைதாபுரம் காசி விசுவநாத முதலியார்

1871 — விவாக விதிவிளக்க வினா விடை
—தரங்காபுரம் த. சண்முகக் கவிராயர்

1878 — தனலட்சுமிக்கும் தைரிய லட்சுமிக்கும் தர்க்கம்
—ராஜரத்தின முதலி

1879 — சைவ சமய விளக்க வினா விடை
—காஞ்சிபுரம் சபாபதி முதலியார்

1880 — மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்கு வாதம்
—சீனிவாச ஐயங்கார்

1891 — காங்கிரஸ் வினா விடை
—சென்னை மு. வீரராகவாசாரியார்

1892 — பதிப்பிலக்கண வினா விடை
—முனுசாமி நாயுடு

1894 — புருடார்த்த தீபிகை என்னும் பால சம்வாத வினா விடை
—புதுவை ஏ. வே. இராமாநுஜ நாவலர்

1896 — இலக்கணச் சுருக்கம்
—மழவை மகாலிங்க ஐயர்

1897 — சர்வ மத சித்தாந்த விளக்க வினா விடை
—ஈ. ஆர். சச்சிதானந்த சுவாமிகள்

1900 — வினா விடை மாலை
—பாலகிருஷ்ண முதலியார்

1901 — ஸ்ரீ தத்துவ போதம் (வினா விடை)
—ஸ்ரீ சங்கர பகவற்பாதாசாரியர்
மொழிபெயர்ப்பு: தஞ்சை மாநகரம் குப்புசாமி ராஜு

1903 — வேதாந்தத்தைக் குறித்த வியாசம்
—ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள்

1904 — சோதிட சூத்திர விளக்க வினா விடை
—செஞ்சி மாநகரம் ஏகாம்பர சோதிடர்

1907 — மகாபாரத வினா விடை
—கஸ்தூரி ரங்கையர்

1908 — கணிகா ஞாநி ஸம்வாதம் (கவிதை நூல்)
—நாகை சக்கரபாணி

1911 — ராமாயண வினா விடைக் கும்மி
—பை. அன்னம்மாள்

1913 — ஜாதி வித்தியாசத் தடை விடை
—தில்லை வாணன்

1913 — வேலூர் தீர்ப்பு
(புதுக்கோட்டை ப்ரம்ஹஸ்ரீ வெங்கட சுப்பா சாரியார், சித்தூர் ஜில்லா ஆற்காடு தாலுகா திமிரியில், பஞ்சாங்கம் கிருஷ்ணமாசாரி யாரோடு செய்த வாக்கு வாதம்.)

1914 — ஒழுக்க விளக்கம் வினா விடை
—தாராபுரம் சி. வி. கிருஷ்ண ராஜு

1915 — பெண்கள் நீதி வீளக்க வினா விடை
—எம். குப்புசாமி நாயகர்

1917 — தேவ லோகக் கிரிமினல் கேஸ்
—கோட்டாறு கா. ப. செய்கு தம்பிப் பாவலர்

1917 — சச்சிதானந்த சிவம்
—சுப்பிரமணிய சிவா
(ஆசிரியர் மாணவர் உரையாடும் முறையில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.)

1919 — பகவத் கீதை வினா விடை
—நித்யாநந்த முதலி, எம். ஏ.,

1920 — ராஜ ரீக சீர்திருத்த வினா விடை
— ஏ ரங்கஸ்வாமி ஐயர்

1921 — விவசாய வினா விடை
—சென்னை சி. வி. ஆறுமுக முதலி

1921 — சித்தர்கள் மகத்துவ வினா விடைக் கும்மி
—கே. வி. வீரராகவலுதாஸ்

1921 -- சைவ சமய விளக்க வினா விடையும்
ஆசௌச வினா விடையும்
— சபாபதி முதலி அண்டு ஏராம்பய்யர், எஸ்.

1921 — காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை
தேத்தண்ணீர் மத்தியஸ்தம்
—கும்பகோணம் இராமச்சந்திரன்

1922 — கிராம முன்சீப் சிறப்புத் தேர்வு வினாவிடை
— செல்லையா பிள்ளை

1922 — புத்த மார்க்க வினா விடை
—கே. அயோத்திதாஸ்

1923 — பரமார்த்த போத வசன வினா விடை
— கோ. வடிவேலு செட்டி

1924 — சிற்றிலக்கண வினா விடை
—சீகாழி எஸ். அருணாசல தேசிகர்

1925 — பஞ்ச தசப்பிரகரணம்
—ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகள்

1929 — எரியாத கட்சி கேள்வி லாவணி
—தஞ்சை வி. எஸ். பாப்புதாஸ்

1929 — சீமைத்துணி கதர்த்துணி சண்டை
ஜப்பான் துணி சமாதானம்
—பழனி எம். எஸ். எஸ். வேலுசாமிக் கவிராயர்

1929 — அதியுல்லாச சல்லாப லாவணி
—நாகை வெளி காயாரோகணம் பிள்ளை

1931 — ஆஸ்திக நாஸ்திக ஸம்வாதம்
—டி. முத்துசாமி

1932 — மதாராய்ச்சிக் குறிப்புகள் (கேள்விகள்—விடைகள்)
—எம். கே. கேசவனுண்ணி நாயர் என்னும் ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி

1933 — சிற்றிலக்கண வினா விடை
—கா. நமச்சிவாய முதலியார்

1935 — நாத்திக லாவணியும் சுயமரியாதைத் தாலாட்டும்
—திண்டுக்கல் எம். ஆர். மத்திரன்

1936 — ஜீவ காருண்ய போத வினாவிடை (நாயகி நாயக சம்பாஷணை)
—சுவாமி அருணகிரி நாதர்

1945 — சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள்
—மொழி பெயர்ப்பு: சுவாமி விபுலானந்தர்

1948 — சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்
—சித்தவைத்திய அ. சி. சுப்பையா (சிங்கப்பூர்)

1959 — அது யாருக்குத் தெரியும்?
—சாது மாணிக்க சீவகன்

1960 — ஒயில் கும்மிப் பாட்டு
—கும்பகோணம் கே. குருசாமிதாஸ்

1961 — சுதந்திரத் தமிழ்நாடு (வினா—விடை)
—சி. பா. ஆதித்தனார்

1966 — தடைகளும் விடைகளும்
—முரு. பழ. இரத்தினஞ் செட்டியார்

1967 — எம்.ஜி.ஆர்—எம்.ஆர். ராதா
வழக்கு விசாரணை
தொகுத்தவர் : ஏ.எஸ். மூர்த்தி

1967 — கழகம் பிறந்தது ஏன்?
(திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய
கேள்வி—பதில்)
—மா. செங்குட்டுவன்

1973 — அன்பு, அருணா தமிழ் நண்பன்
—புலவர் மு. அன்பரசன்,
புலவர் அருணா பொன்னுசாமி

1978 — தமிழ்வாணனின் தலைசிறந்த
அரசியல் கேள்வி—பதில்கள்
—தமிழ்வாணன்

1981 — கேட்டலும் கிளத்தலும்
—பாரதிதாசன்

1984 — கேள்விகளால் ஒரு வேள்வி
—வைரமுத்து

1984 — பொது அறிவு வினாடி வினா
—பட்டுக்கோட்டை பி.எல். ராஜேந்திரன்

1984 — 'மனைவி'
ஜெமினி கணேசன்
உஷாசுப்பிரமணியின் விமர்சனம்
அடியார் பதில்கள்

1985 — பெரியாரியம்
(கொள்கை விளக்க வினா—விடை)
—குடந்தை குகன்

1987 — விடைகள் ஆயிரம்
—கி.வா. ஜகந்நாதன்

1987 — என்ன? ஏன்? எப்படி?
—நாரா. நாச்சியப்பன்

1987 — ஆயுத பேரத்தில் ஊழலா?
ஜெத் மாலியின் கேள்விகளுக்குப் பதில்கள்
—எம்.பி. நாராயணசாமி

1988 — கேள்விகளும் கண்ணதாசன் பதில்களும்
— கண்ணதாசன்

1990 — திறந்த புத்தகம்
—மு.மேத்தா

1990 — ஐந்திலக்கண வினா விடை
—புலவர் கபிலவாணன்

1990 — கேட்டதும் கிடைத்ததும்
—தசாவதானி இரா. கனக சுப்புரத்தினம்

1991 — உங்கள் பாக்யராஜின் கேள்வி—பதில்கள்
—கே. பாக்யராஜ்

1991 — சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு
ஐயமும் தெளிவும்
—திருச்சி வே. ஆனைமுத்து

1991 — வினாக்களும் சுரதாவின் விடைகளும்
—சுரதா

தொகுத்தவர் : உவமைக் கவிஞர் சுரதா

□□□

# என்னைப் பேட்டி கண்டவர்கள்

| | | |
|---|---|---|
| 15-5-1952 | சிரஞ்சீவி | ஜெகசிற்பியன் |
| 10-3-1958 | குமுதம் | அருண் |
| 1-3-1967 | உலகம் | எழில் முதல்வன்,<br>காஞ்சி அமிழ்தன் |
| 19-9-1969 | கடற்கரைப் பேட்டி | முருகுசுந்தரம்,<br>அப்துல் ரகுமான் |
| 5-2-1970 | குமுதம் | பால்யூ |
| 11-4-1971 | கல்கி | பி.வி. கிரி |
| 25-7-1971 | ஆனந்த விகடன் | சுந்தரம் |
| ஜனவரி 1973 | நான்கு பக்கம் | புலவர் உசேன் |
| 15-4-1974 | தமிழ் முரசு | சே.ப. குட்டியப்பன் |
| அக்டோபர்-1974 | மனம் | த. பழமலை, எம்.ஏ., |
| 19-3-1978 | குங்குமம் | பாவை |
| 4-5-1978 | தென்னகம் | மு. கோ. வசந்தன் |
| 13-5-1978 | மாலைமுரசு | கருணைதாசன் |
| ஜூலை-1979 | புதிய சமுதாயம் | பாதாசன் |
| 1-6-1979 | தமிழ் நேசன் | பழ. எ. அன்பழகன் |

| | | |
|---|---|---|
| 3-6-1979 | தமிழ் மலர் | பழ. எ. அன்பழகன் |
| 21-7-1979 | வானம்பாடி | க. இளங்கோவன் (சிங்கை) |
| 21-10-1979 | குங்குமம் | கிரிஜா |
| 7-3-1982 | தாய் | பாபநாசம் குறள்பித்தன் |
| 1-7-1983 | சேலம்மாலைமுரசு | மாலை முரசு நிருபர் |
| 10-7-1983 | தாய் | பாபநாசம் குறள்பித்தன் |
| 27-7-1983 | தேவி | பாகுபி |
| 12-8-1983 | மூக்குத்தி | பாரதி சுகுமாரன் |
| 21-8-1983 | தாய் | பாபநாசம் குறள்பித்தன் |
| செப்டம்பர் 1983 | வண்ணமயில் | பாரதிசுகுமாரன் |
| மார்ச்சு-1985 | வரலாற்றின் குரல் | தீ. வீரபாண்டியன் |
| 21-8-1985 | தேவி | எஸ்.விஜயன், ஞானபாரதி |
| ஏப்ரல்-27 | | |
| மே-3-1986 | இதயம் பேசுகிறது | ம. முருகன் |
| அக்டோபர் 1986 | பேசும் படம் | எஸ். விஜயன் |
| 23-11-1986 | தாய் | பு.வி. உமா சந்திரன் |
| 1-2-1987 | சினிமா எக்ஸ்பிரஸ் | திரைஞானி |
| 14-6-1987 | ஆனந்த விகடன் | கே. அசோகன் |
| 17-6-1987 | ஜூனியர் விகடன் | கே. அசோகன் |
| 6-12-1987 | தினமணி(மலேசியா) | பழ. எ. அன்பழகன் |

| | | |
|---|---|---|
| 6-12-1987 | தமிழ்ஓசை(மலேசியா) | அக்கினி |
| 1-4-1989 | சுபமங்களா | நிர்மலா சுரேஷ் |
| 20-7-1989 | குமுதம் | துரை. ராமசந்திரன் |
| 15-10-1989 | நாரதர் | நாரதர் நிருபர் |
| 19-10-1989 | குமுதம் | ராம் சந்த் |
| 10-11-1989 | குங்குமம் | சி. கண்ணன் |
| 23-11-1989 | குமுதம் | துரை. ராமச்சந்திரன் |
| 31-12-1989 | தாய் | பாபநாசம் குறள்பித்தன் |
| 4-2-1990 | நம்வாழ்வு | எம். டேவிட் மைக்கேல் |
| 15-8-1990 | சுபமங்களா | நாகராஜகுமார் |
| ஏப்ரல்-1990 | திரைச்சிற்பி ரஜினி | இ. சபீதா ஜோசப் |
| 13-5-1990 | ஆனந்த விகடன் | எஸ். ராமன் |
| 16-12-1990 | ராணி | ராணி நிருபர் |
| 16-12-1990 | தமிழரசு | பி.வி. கிரி |
| 28-4-1991 | தாய் | அர குணசீலன் |
| 27-5-1991 | மங்களம் | அனலேந்தி |

□□□

# இன்றைய நாகரிகத்தை உதடு வளர்க்கிறது!

[இந்தத் தொடரில் கவியரசர் பாரதிதாசன், ஜி. டி. நாயுடு, நாமக்கல் கவி ராமலிங்கம் பிள்ளை, அரு. ராமநாதன், தில்லை-வில்லாளன், அகிலன், இளங்கோவன், ஆர்.வி., வேலவன், சுகி, கே. ஸ்ரீ., வாசவன், மாயாவி, கா. ஸ்ரீ. ஸ்ரீ. சாமி பழனியப்பன், வாணிதாசன், கி. வா. ஜகந்நாதன், முடியரசன், மு. வரதராசன், எஸ். எஸ். மாரிசாமி, ஆகியோர் பதில் சொல்வார்கள், என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.] —ஜெகசிற்பியன்.

கேள்வி கேட்பவர் :
ஜெகசிற்பியன்

பதில் சொல்பவர் :
சுரதா

கேள்வி : தமிழிலக்கியத்தின் எதிர்காலம் எத்தன்மையுடையதாயிருக்கும்?

பதில் : அந்துப் பூச்சி அரித்துவிட்ட அரிசியில்லாத நெல்லைப்போல் எண்ணங்கள் இல்லாமல் வெறும் எழுத்துக் கூட்டமாக இருந்துவரும் தற்கால இலக்கியம், சீக்கிரத்தில் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு நோபல் பரிசு வாங்கக் கூடிய யோக்கியதைக்கு வந்துவிடும்!

கேள்வி : மத அடிப்படையில் எழுந்த காவியங்களின் மூலம் தமிழகத்தின் சரித்திரத்தை ஆராய்ந்து முடிவு கூறப்படுகிறதே; இது சரிதானா?... இதனால் சரியான சரித்திரத் தெளிவு கிடைக்குமா?

பதில் : அவ்வளவு சரியல்ல. தமிழ் நாட்டின் சரித்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய ஆதாரம் அதிகம் இல்லாததால் இந்த மாதிரி காவியங்களில் இருக்கும் கொஞ்ச நஞ்ச சரித்திர நினைவுகளை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இதனால் சரியான சரித்திரத் தெளிவு கிடைத்து விடாது.

கேள்வி : கம்ப ராமாயணம், பாஞ்சாலி சபதம், பாண்டியன் பரிசு ஆகிய இம்மூன்று காவியங்களும் இன்றையத் தமிழினத்துக்கு எந்தெந்த முறையில் பயன்படுமென எண்ணுகிறீர்?

பதில் : கம்பராமாயணம்...முட்டாள்கள் அதிகமாகிவிட்டதால் தலையணையாகப் பயன்படுகிறது!
பாஞ்சாலி சபதம்...ஆண் இனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட ஒரு கட்சியை ஏற்படுத்தத் தூண்டுகிறது! பாண்டியன் பரிசு... இன உணர்ச்சியை அதிகப்படுத்திக் கொள்ள உதவுகிறது!

கேள்வி : வளர்ந்து வரும் சினிமா கலையின் சாதக பாதகமென்ன?

பதில் : அழகை நன்றாக விளம்பரப்படுத்திக் கொண்டு வருகிறது. அதே நேரத்திலே சினிமா, ஒழுக்கத்தைக் கலைக்கவும் கவலைப்படுவதில்லை!

கேள்வி : பண்டைய நாகரிகத்திற்கும்,இன்றைய நாகரிகத்திற்கும் என்ன வேறுபாடு? தத்துவ ரீதியில் இதற்குப் பதில் சொல்லுங்கள்.

பதில் : பண்டைய நாகரிகத்தை உள்ளம் வளர்த்தது. இன்றைய நாகரிகத்தை உதடு வளர்க்கிறது.

கேள்வி : உண்மை எழுத்தாளனுக்கும் உயர்ந்த கவிஞனுக்கும்—உயிரா யிருக்கும் போதே பண முடிப்பு கொடுப்பது சரிதானா?

பதில் : சரிதான். வண்டு செத்துவிட்ட பிறகு அதன்மீது தேனைக் குடம் குடமாக ஊற்றிப் பிரயோசனம்?

கேள்வி : மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கை வேண்டுமா?

பதில் : வேண்டியதே யில்லை.

கேள்வி : ஏன்?

பதில் : ஒருவனை ஒழுங்குபடுத்த மனச்சாட்சியும் தண்டிப்பதற்குச் சட்டங்களும் இருக்கும் போது வீணாகக் கடவுள் நம்பிக்கை எதற்கு?

சுரதாவைச் சந்தித்தவர் : ஜெகசிற்பியன்
இதழ் : சிரஞ்சீவி, 15-5-1952

## இப்படித்தான் இயற்றினேன்!

இருபது ஆண்டுகட்கு முன்பிருந்தே, நான் கவிதைகள் எழுதி வருகிறேன். என்றாலும், எட்டாண்டுகட்கு முன்புதான், அதாவது 1950-இல் தான் திரைப்படத்திற்குப் பாடல் எழுதும் வாய்ப்பு ஏற்பட்டது எனக்கு.

1951-இல், 'அமர கவி' என்னும் படத்திற்கு நான் வசனம் எழுதிக் கொண்டிருந்த சமயம், அப்படத்தின் டைரக்டர், திரு. எஃப். நாகூர் 'சந்திர வங்கா' என்னும் தெலுங்குப் படத்தைத் தமிழில் 'டப்பிங்' செய்து வந்தார். அவர் தாம், முதன் முதலில் என்னை அப்படத்திற்குப் பாடல் எழுதச் சொன்னவர். எழுதினேன். திரு. டி. ஏ. கல்யாணம் இசையமைக்க, திருமதி ஜிக்கி பாடினார். ஆனால் படம் வெளிவரவில்லை.

அதற்குப் பிறகு, 'அமரகவி'க்குப் பாடல் எழுதினேன். அப்படத்தில் ஏழிசை மன்னர் திரு. எம். கே. தியாகராஜ பாகவதரும், திருமதி லீலாவும் சேர்ந்து பாடிய

'யானைத் தந்தம் போலே
பிறை நிலா'

என்ற பாடலுக்கும்,

'வெற்றிலை போடாமலே வாய் சிவந்த
பச்சைப் பசுங்கிளிகள்'

என்னும் விருத்தத்திற்கும், நல்ல பாராட்டுக் கிடைத்தது.

பின்னர், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், திருமதி பி. எஸ். சரோஜாவும் நடித்த 'ஜெனோவா' என்னும் படத்திற்குப் பாடல்கள் எழுதினேன். எழுதப் பெற்ற ஒரு பாடலின் ஏழாவது வரியில்,

'பெருந் தீ மீதிலே
ஈ மொய்ப்பதுண்டோ?'

என்ற பழைய கருத்தை நினைவுபடுத்திவிட்டு, இதற்கு அடுத்த வரியாக,

'நீல வான் மீதிலே
நிழல் படுவதுண்டோ?'

என்று எழுதியிருந்தேன். 'நீல வான் மீதிலே நிழல் படுவதுண்டோ?' என்னும் கருத்தைப் பெரிதும் பாராட்டிய தோடு, அதற்கு அன்பளிப்பாக ஐந்நூறு ரூபாயும் தந்தார், அந்தப் படத்தின் அதிபர்களுள் ஒருவரான திரு. ஈப்பன் என்பவர்.

பற்களைப் போன்று, மிகவும் எண்ணிக்கைக் குறைவாகவேதான் நான் பாடல்கள் இயற்றியுள்ளேன். தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் படத்தில் பாடப்பட்டு வரும் 'அமுதும் தேனும் எதற்கு?' என்ற பாடல், நான் இயற்றியதுதான். அந்தப் பாடலுக்கு, திரு. கே. வி. மகாதேவன் இசையமைக்க, இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் 'மிகவும் இனிமையாகப் பாடியுள்ளார்.

பாடலைப் பாராட்டுகின்றனர். என்றாலும், என்னைப் பொறுத்தமட்டில் இதற்கு முன் நான் எழுதியிருக்கும் பாடல்கள் பட்டுப் பாவாடை போன்றவை; இந்தப் பாடலோ அதற்கு ஒரு நாடா போன்றதுதான்!

நெற்றிச் சுருக்கமும், நரையும், நிறைந்தநிகழ்ச்சிகளும் உடையவர்கள், வாழ்க்கை வரலாறு எழுதினால்,

அதன்மூலம் பலருக்குப் பயனும் உண்டு; படிப்பினையும் ஏற்படும். ஆனால் நான் என்னைக் குறித்துக் கூறுவதில் அதிக அர்த்தமில்லை. என்றாலும் குமுதம் கேட்கிறது, கொஞ்சம் கூறுகிறேன்:

என்னைப் பற்றி ஒரே வாக்கியத்தில் விளக்க வேண்டுமானால், நான் சந்தர்ப்பங்களால் தோற்றுக்கொண்டிருப்பவன், குறைந்தது ஆயிரம் புத்தகங்களில் நித்திரை செய்யும் எண்ணங்களை எல்லாம் வடித்து, என் இதயத்திலே வைத்துக் கொண்டிருப்பவன்.

நந்தனார் கீர்த்தனை எழுதிய கோபாலகிருஷ்ண பாரதியாரின் பிறப்பிடம் நரிமணம் என்னும் சிற்றூர். அந்தச் சிற்றூரைத் தொட்டுக்கொண்டிருக்கும் மற்றொரு சிற்றூராகிய பழையனூர்தான் என் பிறப்பிடம். காவிரியின் நீரால் ஈரமாகும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான்.

கடவுளைக் காரணமாக வைத்து இராசகோபாலன் என்று பெற்றோர் எனக்குப் பெயரிட்டனர். நானோ, கனக சுப்புரத்தினத்தைக் (பாரதிதாசனை) காரணமாக வைத்து, 'சுரதா' என்று பெயர் மாற்றிக் கொண்டவன். (சுப்புரத்தினதாசன் என்பதன் சுருக்கமே சுரதா.)

நான், 1945-இல் திரையுலகுக்கு வந்தேன், இதுவரை பத்துப் படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறேன். ஆனால் வெளிவந்தவை, மங்கையர்க்கரசி, அமரகவி, ஜெனோவா ஆகிய இம்மூன்று படங்களே.

அற்பம் என்பதாக உலகில் எதுவுமே கிடையாது என்கிறானே ஜான்சன், அவனைப் போலவே, எதனையும் தாழ்வாக எண்ணும் நெஞ்சுப் பயிற்சியை விரும்பாதவன் நான். அதனாலேதான் சினிமாப் பாடல்களையும் குறைத்து மதிப்பிடுவதை நான் சம்மதிப்பதில்லை. திரைப் பாடல்களைப் பற்றிச் சிலர் குறைவாக மதிப்பதில் நியாயம் இருக்கிறதாக நினைக்கின்றனர். இன்றிருக்கும்

பாடல்களின் நிலையை ஒட்டி, அவ்வாறு நினைத்தாலும், 'கோப்பைக்குள் புயல் வீசுவது போன்ற சிறிய விஷயம் இது' என்று சினிமாப் பாடல்களைப் பற்றித் தீர்மானித்து விடுவது தவறான முடிவாகும்.

மாடுகள் வழக்கத்தால் செக்குச் சுற்றி வருவது போல இருந்து வரும் பாடல்களின் போக்கு மாற வேண்டும். அல்லது தகுதி வாய்ந்தவர்கள் அதனை மாற்ற வேண்டும்.

வார்த்தைக் கூட்டங்களுக்கும், வெறும் வர்ணனைகளுக்கும் இடங்கொடுப்பதைக் குறைத்து, பாடல்களில் எண்ணங்களைக் கட்டிப் போடவேண்டும். அப்போதுதான் ஓர் இலக்கியப் புத்தகத்தின் மேல், சினிமாப் புத்தகமும் சாய்ந்து கொள்ளும் அந்தஸ்தைப் பெற முடியும்.

புதியவர்களுக்குப் பாடல் எழுதும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும்; பாட்டெழுதும் திறமை நம் நாட்டுப் பெண்களில் பலருக்கு இருப்பதால், அவர்களையும் இத் துறையில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, மதுரை தியாகராயர் கல்லூரி; மதுரைத் தமிழ்ச் சங்கம்; கரந்தைத் தமிழ்ச் சங்கம்; அண்ணாமலைப் பல்கலைக் கழகம்; சென்னைத் தமிழ் மாணவர் மன்றம் போன்ற இடங்களில் இருந்து, திரைப்பாடல் எழுதுவதற்குத் தமிழ் மாணவர்களைத் தேர்ந்தெடுத்துப் பாடலுக்கும், நம் நாட்டுக்கும் புதிய சக்தியை ஊட்ட வேண்டும்!

ஒரு படம் வெளி வந்தால், உடனே அந்தப் படத்தின் பாடல்களைப் பற்றித் தமிழ் பயிலும் மாணவர்களும், முதிர்ந்த புலவர்களும், பழுதுபடாத விளக்கம் எழுதிச் சிறு புத்தகமாக வெளியிடும் பணியில் ஈடுபடுவார்களானால், அதன் மூலம் மக்களுக்கு விமரிசன வளர்ச்சி ஏற்படும். கேலி வரிகளும், போலிப் பாடல்களும், நஞ்சு உண்டு உறங்கியவனைப் போல் ஆவதற்கும் வழி ஏற்படும்.

இந்த அதிவீரராம பாண்டியன் காரியத்தை அவசியம் செய்தாக வேண்டும், நாட்டிலே உள்ள நல்லவர்கள் தமிழின் நலம் கருதி.

'இசையமைப்புக்குப் பாடல் எழுதுவதா? எழுதிய பாடலுக்கு இசை அமைப்பதா?' என்று கேட்டால் இசையமைப்பு சிறப்பாக இருந்தால், அதற்குப் பாடல் அமைப்பதும், பாடல் சிறந்து விளங்கினால், அதற்கு இசை அமைப்பதும் நல்லது.

படாதிபதிகளும், இசையமைப்பாளர்களும் தமிழிசையைப் பரப்புவதற்குப் பாடுபடவேண்டும், பிற நாட்டு இசையை நாம் புறக்கணிக்க வேண்டியதில்லை. ஊமைக் காற்று இசையாக மாறி, எங்கிருந்து வந்தாலும், அதனை வரவேற்பதில் தவறில்லை. ஆனால், கோவலன் மனப்பான்மை கொண்டு, பிறநாட்டுச் சங்கீதத்திடம் நம் காதுகளை மட்டும் விற்றுவிடக் கூடாது.

சுரதாவைச் சந்தித்தவர் : 'அருண்'
இதழ் : குமுதம், 10-3-1958

## மகாகவி தரிசனம்

பாரதிதாசனுக்குப் பின் இன்று தன்னேரில்லாத தனிப்பெரும் கவிஞராகத் திகழ்பவர் கவிஞர் சுரதா அவர்களே ஆவார். அவரது படைப்பாற்றலையும் மேதைமையையும் உணர்ந்த தமிழகம் அவரை உவமைக் கவிஞர் என்று சிறப்பித்துப் போற்றுவது பொருத்தமேயாகும். தண்ணீர்க் காவிரி தவழும் தஞ்சை மாவட்டத்தில் பழையனூரில் திரு. திருவேங்கடம் அவர்கட்கும் திருமதி செண்பகம் அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்தவர் கவிஞர். **1921**-ம் ஆண்டு தோன்றிய அவர் இதுவரை செய்திருக்கும் சாதனை அளவில் குறைவாக இருந்தாலும் தரத்தில் நிறைவுடையவை. கவிஞரின் 'தேன் மழை' 'அமுதும் தேனும்' என்ற நூல்கள் உலக இலக்கிய வரிசையில் தலையாய இடம் பெறத் தக்கவை. தமிழ் நாட்டில், 'இலக்கியம்', 'காவியம்', 'ஊர்வலம்' என்ற கவிதை ஏடுகளை வெற்றிகரமாக நடத்திப் பல கவிஞர்களை உருவாக்கிவிட்ட பெருமையும் அவருக்கு உண்டு. கவிதையில் வார ஏட்டை இரண்டாண்டுகள் வெற்றிகரமாக நடத்திய நக்கீர தைரியமும் இவருக்குத்தான் இருந்தது. இத்தகைய கவிஞரை 'உலகம்' பேட்டி காண விழைந்தது. கவிஞரோடு செய்து கொண்ட கருத்துப் பரிமாற்றத்தை வாசகர்கட்கு வழங்க வேண்டாமா?

கடந்த கிழமை வெள்ளியன்று அதிகாலை சுமார் ஏழு முப்பது மணிக்கு ராஜா அண்ணாமலைபுரத்தில் இருக்கும்

கவிஞரின் வீட்டுக்கு நானும் 'உலகம்' ஆசிரியரும் சென்றோம். வி. சி. கார்டன் தெருவில் ஒரு சந்தின் உட்புறமாக உள்ள சிறிய வீட்டில் இரண்டே அறைகள் கொண்ட ஒரு பகுதியில் நாங்கள் உள்ளே நுழைந்தோம். சுற்றுப் புறத்தையும் அந்த எளிமையின் உருவகமாக இருந்த வீட்டையும் பார்த்தபோது எங்கள் உள்ளம் வருந்தியது. கற்றறிந்த கவிஞர்களைக் கண்ணினும் மேலாகப் போற்றி வந்த இந்த நாடு. இந்த நூற்றாண்டில் ஒரு மகாகவியை இங்ஙனம் வாழ வைத்திருக்கிறதே! என்று நினைத்தபோது இந்தக் கேடு கெட்ட தமிழ் நாட்டையே சபிக்கத் தோன்றியது எங்களுக்கு.

அமிழ்தனும் நானும் உள்ளே சென்றபோது புத்தகக் குவியல்களுக்கு இடையே உட்கார்ந்து எதையோ எழுதிக் கொண்டிருந்த அவர் எங்களை நிமிர்ந்து நோக்கிவிட்டு "வாங்க...வாங்க..." என்றார். உள்ளே சென்று கட்டிலில் அமர்ந்தோம். சின்னஞ்சிறிய அந்த அறையில் எங்கு பார்த்தாலும் ஒரே புத்தக அடுக்காக இருந்தது. ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அப்புத்தகங்களைக் கவிஞர் வாங்கிச் சேர்த்து வைத்திருந்தது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

இடையிலே கட்டம் போட்ட லுங்கியும், மேலே கலர்த் துண்டுமாகக் காட்சியளித்தார் கவிஞர். சிந்தனை தேங்கிய அவரது முகமும், எதையோ ஒரு மாபெரும் லட்சியத்தை இலக்கு வைத்து நோக்கிக் கொண்டிருப்பது போன்ற பார்வையும் எங்களைக் கவர்ந்தன. எவர்சில்வர் டப்பியி லிருந்த பொடியை எடுத்து இரண்டு மூன்று சிட்டிகை பல மாக இழுத்துக் கொண்டு 'என்னசேதி...எப்படி இருக்கீங்க. நலம் தானே?" என்றார். பின் கவிஞரோடு சில பொதுவான விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அதற்குள் கவிஞரின் மகன் கல்லாடன் எங்களுக்குச் சுவை மிக்க காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தான். காப்பியின்

சுவையையும் கவிஞரது பேச்சின் சுவையையும் ஒரு சேர அனுபவித்து மகிழ்ந்த நாங்கள் கொஞ்ச நேரம் கழித்து பேட்டியைத் துவங்கினோம்.

நான் கேட்டேன்: "உங்களது வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பலர் விழைகிறார்களே! ஏதேனும் சில குறிப்புக்களைக் கொடுக்கலாமா?"

"சரி சரி, அதுக்கென்ன, சொன்னாப் போச்சி..." என்று சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

'நான் ராஜா மடம், ஒரத்த நாட்டிலே தான் படிச்சேன்...எங்கப்பா மந்திரவாதி, நல்ல குடிகாரர். 1943-ல் பாரதிதாசன் கிட்டே வந்து இருந்தேன். புரட்சிக் கவி என்ற கவிதை நாடகத்திலே நான் அமைச்சனா நடிச்சேன்....கவிஞர் கிட்டே இரண்டு வருஷம் இருந்தேன். மாதச் சம்பளம் இருபது ரூபாய். பிறகு 1945-ல் சென்னைக்கு வந்தேன். கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்தாசையினாலும், காலஞ்சென்ற நடிகர் சின்னப்பாவின் ஆதரவாலும் சினிமாவுக்கு வந்தேன். 1952-ல் திருமணம். மனைவி பேரு சுலோச்சனா...அக்கா மகள்தான்..."

நான் இடையே குறுக்கிட்டு "நீங்க எழுதின முதல் கவிதை எது? எப்பொழுது பத்திரிக்கையில் எழுத ஆரம்பித்தீர்கள்?" என்றேன்.

கவிஞர் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, "முதல் கவிதையா!...எனக்கு ஞாபகம் இல்லே...அதில் மட்டும் ஏதோ ஒரு நல்ல உவமை சொல்லியிருந்ததா ஞாபகம்.... நான் எந்தப் பத்திரிக்கையிலும் அதிகமா எழுதினதில்லை. புதுக்கோட்டையிலே க. நாராயணன் என்பார் 'தாய்நாடு' என்று ஒரு பத்திரிக்கை நடத்தினார். அதில் துணை யாசிரியரா இருந்தப்போ ஏதோ எழுதினேன். திரிலோக சீதாராம் நடத்துற "சிவாஜி" யிலும் எழுதினேன். முதல் சிறு கதையை நாரண — துரைக்கண்ணன் தான் போட்டார். அப்புறம் முரசொலியிலே எழுதினேன்" என்றார்.

கவிஞர் சிறுகதை கூட எழுதுவாரா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. ''ஏது, நீங்க சிறுகதை எழுதி இருக்கீங்களா?'' என்றேன்.

''ஓ...எஸ்...எழுதியிருக்கேனே...இப்பகூட எழுதணும் கிற திட்டம் உண்டு. இருக்கட்டும்; அதையும் பார்த்திடலாம். இந்தப் பயல்களை எல்லாம் குளோஸ் பண்ணிடலாம்'' என்றார்.

''சரி. பத்திரிக்கை நடத்தினீர்களே! அதில் தாங்கள் பெற்ற அனுபவம் யாது?''

''ஆர்வத்தினால்தான் நடத்தினேன். அது மிகப் பெரிய சாதனை. என்னைப் பொறுத்தவரை என் எழுத்தில் எனக்குத் தோல்வி இல்லை.''

கவிஞரின் பேச்சில் அவருக்கே உரிய தன்னம்பிக்கையும், அலட்சிய பாவமும் மின்னலிட்டு மறைந்தன. சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து ஒரு முறை பொடி போட்டுக் கொண்டார் அவர்.

''பாரதி, பாரதிதாசனைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார் அமிழ்தன்.

''பாரதியா? கவிஞன்தான். அரசியல் செல்வாக்கினாலே கொஞ்சம் தகுதிக்கு அதிகமாகவே புகழ் வந்துட்டுது. அவன் கொஞ்ச நாள் அதிகம் இருந்திருந்தா அவனுடைய புகழ் தேய்ந்திருக்கும். பாரதிதாசனுக்கு இருந்த கல்வி பாரதிக்கு இல்லே. இதை சுத்தானந்த பாரதியே என்கிட்டே சொல்லியிருக்கார். இந்த நூற்றாண்டிலே சிறந்தவர் பாரதிதாசன்தான். இவருக்குச் சமமா யாரும் இல்லை.

''பாரதிக்குப் பிறகு தமிழ்க் கவிதையே வளரவில்லை என்று சிலர் புலம்பிக் கொண்டிருக்கிறார்களே!'' என்றார் அமிழ்தன்.

இதைக் கேட்டதும் கவிஞரின் முகம் சிவந்தது. நெருப்புத் துண்டுகளாக கண்கள் மின்னின. ஒரு கவிஞனுக்கே உரிய செம்மாந்த நடையில், ''யாரது? எவன் சொன்னான்? உயிரோடு உதாரணமா நான் இருக்கிற போது எவன் என்ன சொல்ல முடியும். அவன் கிடக்கிறான் ......'' என்றார்.

கவிஞரின் சினத்தை—தார்மீகமான கோபத்தை திசை திருப்பிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் ''கவிதை பற்றிய உங்கள் கோட்பாடு என்ன?'' என்று கேட்டேன் நான்.

''கவிதை எழுதக் கற்பனையும் தேவையில்லை; கடவுளின் அருளும் தேவையில்லை; இதுதான் என் முடிவு. என்னைப் பொறுத்தவரை கவிதை என்பது ஒரு 'சயன்ஸ்' நன்றாகப் படித்தால் எழுதலாம். அரசாங்கம் மட்டும் என்னை ஆதரிக்குமானால் நான் ''நோபல் பரிசே'' வாங்கிக் காட்டுவேன். இதுவரை வாங்கியிருக்கிறவனையெல்லாம் கீழே போட்டு மிதிச்சிட்டு மேலே வந்துடுவேன். காரணம் எனக்கு கற்பனை கிடையாது, அதனாலேதான்.''

''உங்கள் கவிதைகளில் 'காம உணர்ச்சி அதிகமாக இருக்கிறதென்று சிலர் குறை சொல்கிறார்களே?''

''சரி, குறையின்னெ வச்சிக்குங்க. இது குறைன்னு சொன்னா, அந்தக் குற்றம் என் ஒருவனுக்கு மட்டும் தானே? தேவாரம் என்ன? திருவாசகம என்ன? அதிலே இல்லையா? ''ஈர்க்கிடை போகா ஏரிள வன 'முலை'' என்று பாடினானே, மாணிக்கவாசகன்......அவன் என்ன?....... எடுத்துக் கொண்ட விஷயத்தைச் சரியாப் பாடணும்....அது தானே வேண்டியது?''

''சரிங்க....இப்ப சில பேரு 'புதுக் கவிதை' என்ற பேரிலே இலக்கணமே இல்லாமல் பாடுகிறார்களே,—அது சரியா?''

"இதிலேயெல்லாம் அர்த்தமில்லை. கண்ணுக்குப் புருவம் தேவை. கவிதைக்கு இலக்கணம் தேவை. இதெல்லாம் ஈசல் சிறகு மாதிரி; உதிர்ந்து போய்விடும்."

"இன்றைய இளங்கவிஞர்கட்கு தாங்கள் கூறும் யோசனை என்ன?"

"சில பேர் நன்றாகத்தான் பாடுகிறார்கள். புலவர் பொன்னி வளவன், வல்லம் வேங்கடபதி, எழில் முதல்வன், மின்னூர் சீனிவாசன், முருகு சுந்தரம், புலவர் உசேன் போன்றவர்கள் பாதிப் பாரதிதாசர்கள். இன்னும் நன்ருகப் படித்து, மரபை அறிந்து, புதுமையைப் படைக்க வேண்டும். இருப்பதை மட்டும் சொல்லாமல் இன்னும் பலவற்றைக் "கிரியேட்" பண்ணணும். கிரியேஷன் இல்லேன்னா எல்லாம் அடி பட்டுடும், விழுந்துடும். அவ்வளவுதான்."

இதற்குள் அமிழ்தன் குறுக்கிட்டு, "நீங்கள் ஏன் சுரதா என்று பெயர் வைத்துக் கொண்டீர்கள்" என்று கேட்டார்.

"பாரதிதாசனிடத்திலே எனக்கு ஈடுபாடுஉண்டு. அதனாலே சுப்புரத்ன தாசன்னு வச்சிக்கிட்டேன். ஒரு சமயம் லெட்டர் எழுதறப்போ கையெழுத்துப் போட எடமில்லே. சு.ர.தா. என்று சுருக்கமாக இடையிலே புள்ளிவைத்து எழுதினேன். பிறகு யோசித்துவிட்டு, இடையிலே இந்த ஆணி எதுக்காகன்னுட்டுப் புடுங்கிட்டேன். இதுதான் சுரதாங்கிற பெயர் வரலாறு" என்றார்.

"சரி .....உங்களை உவமைக்கவி என்று முதன் முதலில் அழைத்தது யார்?"

எழுத்தாளர் ஜெகசிற்பியன் இல்லே...அவருதான் 45.46 –லே சிரஞ்சீவின்னு பத்திரிகை ஒண்ணு நடத்தினார். அவருதான் 'உவமைக்கவிஞர்' என்று தன் பத்திரிக்கையிலே போட்டார். அப்புறம் எல்லாரும் சொன்னாங்க... ஜெகசிற்பியன் பெரிய ஆளு. சிந்தனை செய்வதில்மன்னன். நல்ல மனிதன்...."

"தமிழில் இன்றைய தினம் திறனாய்வு வளர்ந்திருக்கிறது என்று கருதுகிறீர்களா?"

"வளர்ந்திருக்கிறது. நானே ஒரு திறனாய்வாளன்தான். அதுனாலேதான் என்னை நானே சரியாப் பாராட்டிக் கொள்கிறேன். பேராசிரியர் அ.ச.ஞா. திரு பி. சி. கணேசன் போன்றவர்கள் திறனாய்வுத் துறையில் குறிப்பிடத் தக்கவர்கள். ஔவை. நடராசனிடத்தில் நல்ல திறனாய்வுப் பார்வை இருக்கிறது. அவரெல்லாம் இந்தத் துறைக்கு வந்தா நல்லது..."

"இலக்கியத் துறையில் உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?"

"நான் பல சாதனைகளைப் புரிந்தவன். கவிதையிலே வார ஏட்டை முதன் முதலில் நடத்தியவன்; "கவிஞர் பெருமன்றம்" என்ற அமைப்பை முதன் முதல் நிறுவியவன்; என்னைப் பின்பற்றி எழுத ஒரு பெரிய கூட்டத்தையே உருவாக்கிக் கொண்டவன்; முதன் முதல் திரைக்கதை வசனத்தைப் புத்தகமாக வெளியிட்டவன். இப்படி பலவற்றைச் சொல்லலாம். எனக்குக் குறைந்தது தொண்ணூறு ஆண்டுகளாவது வாழவேண்டும் என்று ஆசை; நிச்சயம் வாழ்வேன். அதற்குள் பாரதிதாசன், பெரியார், காமராஜ் ஆகியோரின் வாழ்க்கையைக் காவியமாகப் பாடிவிட வேண்டும் என்றுஆசை. கூடிய சீக்கிரம் 'சுரதா' என்ற பெயரிலேயே கவிதை ஏடு ஒன்றைத் துவக்கப் போகிறேன். வருடப் பிறப்பன்று வரலாம்."

கவிஞர், 'காமராஜ்' என்ற பெயரைக் குறிப்பிட்டதும் எங்களது சிந்தனை அரசியலின் பக்கம் திரும்பியது. அமிழ்தன் கேட்டார்: "காமராஜ், பக்தவத்சலம் ஆகியோரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"காமராஜ்— குறைவான குற்றமுடைய ஒரு அரசியல் தலைவர். இந்திய அரசியலில் அவர் பெற்றிருக்கும்

இடத்தை இனி ஒருவர் பெறமுடியாது'' என்று கூறிவிட்டுக் காமராஜைப் பற்றி அவர் எழுதியிருந்த கவிதை ஒன்றைப் பாடிக்காட்டினார்.

''அரசியலில் அக்பரைப்போல்,
கெட்டிக்காரர்;
அனுபவத்தில் ஈரோட்டுப்
பெரியார் போன்றார்;
புரிந்து கொள்ளா திருக்கையிலும்
பேச மாட்டார்;
புரிந்துகொள்ளும் போது மிவர்
பேச மாட்டார்!
புரிந்து கொண்டும் பேசாமல்
இருக்க மாட்டார்;
புவியில் இவர் பெயர்பரவா
இடமே இல்லை;
விரிந்தபுகழ் உடையோர்க்கும்
கதிரோனுக்கும்
விண்ணுக்கும் விளம்பரங்கள்
தேவையுண்டா?

கவிஞர் பாடி நிறுத்தியதும், அக்கவிதையில் நெஞ்சைப் பறிகொடுத்தவர்களாய் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். கவிஞர் கனைத்துக் கொண்டே மேலும் தொடர்ந்தார், 'பக்தவத்சலம் பண்பாடு மிக்கவர்; ஆழ்ந்த அனுபவம் உடையவர்; அவருடைய போக்கு சரியான போக்கு. அவரால் அவரது பதவிக்குப் பெருமை. இந்தப்பெருமை மரபு வழியாகவந்தது'... என்றுசிந்தித்துக்கொண்டேசொன்னார்.

நாங்கள் அரசியலை இத்துடன் நிறுத்திக் கொண்டோம். ''உலகம் பத்திரிகை பற்றித் தங்கள் கருத்து யாது?'' என்று கேட்டேன்.

''உலகம் தரமான இலக்கிய ஏடு: காஞ்சி அமிழ்தன் எழுத்தாளர்களை உருவாக்கி விடுவதில் மற்றும் ஒரு நாரண-துரைக்கண்ணனாக இருக்கிறார் அமுது என்பது தவறு; அமிழ்து என்பதுதான் சரி. அமிழ்தன் என்று அவர் பெயர் வைத்திருப்பதே அவரது கல்வியைக் காட்டுகிறது. அவரை நான் முதலில் முழுவதாக அறியவில்லை. எனினும் அறிந்திருக்கிறேன். அவர்சிறந்தகவிஞர். அவருடைய'பெருந் தமிழர் பக்தவத்சலம்'' மிக அருமையான நூல். வாழ்க்கை வரலாறு எப்படி இருக்கவேண்டும் என்று அறிவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் நூல். என்னிடத்தில் மட்டும் பொறுப்பு இருக்குமேயானால் சாஹித்ய அகாடமி பரிசை அந்நூலுக்குத்தான் கொடுப்பேன். ஆசிரியர் அமிழ்தன் இன்னும் பரபரப்பை உண்டாக்கும் வகையில் 'உலகத்தை' விளம்பரம் செய்யவேண்டும். இனிமேல் உலகத்தின் எதிர் காலம் மிகச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். உலகத்தின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் என் தொண்டு—என்றும் உண்டு'' என்று கூறி முடித்தார்.

நான் பேட்டியை முடித்துக் கொள்கின்ற பாவனையில் 'உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டோம்'' என்றேன். அமிழ்தனும் இருக்கையை விட்டு எழுந்தார். ''அதெல்லாம் ஒன்றுமில்லே.. மிக்க மகிழ்ச்சி'' என்று கூறிக் கவிஞரும் எழுந்தார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம். கவிஞர் வழி அனுப்பி வைத்தார். அந்த வீட்டை விட்டுப் பிரிந்த போது ஒரு கவிதைக் கோயிலைத் தரிசித்து மகிழ்ந்த நிறைவு எங்கள் நெஞ்சில் பொங்கி வழிந்தது. ''மகாகவி சுரதா வாழ்க'' என்று எங்கள் நெஞ்சம் வாழ்த்தின.

சுரதாவைச் சந்தித்தவர்கள்: எழில் முதல்வன்,
காஞ்சி அமிழ்தன்
இதழ்: உலகம், 1-3-1967

## நான் யாரையும் பின்பற்றி எழுதுவதில்லை.

சுரதாவின் பேச்சும் எழுத்தும் சுவையானவை. ஏன்? சுரதாவே மிகச் சுவையானவர். அவரோடு பேசிக் கொண்டிருப்பது காதலியோடு பேசிக் கொண்டிருப்பது போலிருக்கும்; நேரம் போவதே தெரியாது.

ஒரு நாள் மாலை, நானும் கவிஞர் அப்துல் ரகுமானும் சுரதாவை மெரீனாக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்து, அவரைப் பற்றியும் அவருடைய படைப்புகள் பற்றியும் இரண்டு மணி நேரம் ஓயாமல் கேள்விகள் கேட்டோம். அவரும் சலிப்பில்லாமல் பதில் கூறினார்.

சுரதாவைப் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னால், அவரோடு நாங்கள் மேற்கொண்ட உரையாடலை வெளியிட்டால், படிப்பவர்கள் அவரைப் புரிந்து கொண்டு அவரைப் பற்றிய ஆய்வினைப் படிக்க வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தோடு கேள்வி—பதில் வடிவிலே அதை இங்கு வெளியிட்டிருக்கிறேன்.

கேள்வி : நீங்கள் பிறந்த ஊர் எது?

பதில் : தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தை அடுத்துள்ள பழையனூர் என்னும் சிற்றூர்.

கேள்வி : கவிதை விருப்பம் இளமையில் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பதில் : ஒப்பாரி, வள்ளுவன் கூறும் ஜோதிடப் பாடல், குறி சொல்லும் குறத்திப்பாடல், ஏணிஏற்றம் ஆகிய வற்றைச் சிறுவயதில் விரும்பிக்கேட்கும் பழக்கம்

உண்டு. பள்ளியில் படிக்கும்போதே பாட்டெழுதுவேன். நான் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடலை, எம் பள்ளி மாணவர்கள் பாடுவார்கள், அப்போது எனக்கு வயது பதினான்கு.

கேள்வி : நீங்கள் இளமையில் யாரிடமாவது பாடம் கேட்டதுண்டா?

பதில் : நந்திக் கலம்பக உரையாசிரியர் அருணாசல தேசிகரிடம் கொஞ்ச நாள் இலக்கண இலக்கியப் பாடம் கேட்டதுண்டு. நான் ஒரத்தநாடு பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். பேராசிரியர் இலக்குவனாரும் எனக்கு முன் அப்பள்ளியில் படித்தவர்தாம்.

கேள்வி : இளமையில் உங்களைக் கவர்ந்த கவிஞர்கள் யார் யார்?

பதில் : நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சுத்தானந்த பாரதியின் பாடல்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வரும். முதலில் அவரைப் பின்பற்றி எழுதினேன். பழையனூரில் டீக்கடை வைத்திருந்த அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதைகளை எனக்கு அறிமுகப் படுத்தினார். அவர், பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர். ஒரு நாள் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியை எனக்கு அவர் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அன்றிலிருந்து என் உள்ளத்தில் இடம் பிடித்திருந்த சுத்தானந்த பாரதி 'அவுட்.'

கேள்வி : பாவேந்தர் தொடர்பு எப்போது ஏற்பட்டது?

பதில் : 1941 ஜனவரி 14-ஆம் நாள். அன்று தைப் பொங்கல்.

கேள்வி : பத்திரிகையில் நீங்கள் கவிஞராக அறிமுகமானது எப்போது?

பதில் : என்னை முதன்முதலில் கவிஞராக அறிமுகப் படுத்தியவர் கவிஞர் திருலோக சீதாராம். தாம் நடத்தி வந்த 'சிவாஜி'யில் என் கவிதை களைத் தொடர்ந்து பத்து வாரம் வெளியிட்டு என்னை விளம்பரப் படுத்தினார். புதுக்கோட்டை யில் இருந்து வெளிவந்த 'தலைவன்' பத்திரிகையில் கொஞ்ச நாள் துணையாசிரியராகப் பணி யாற்றினேன்.

கேள்வி : பாவேந்தருக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி?

பதில் : பாவேந்தர் ஆற்றல் பரந்து பட்டது. அவருடைய தொடர்பு என்னைக் கவிஞனாக உயர்த்தியது. பாவேந்தரோடு நான்காண்டுகள் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பாவேந்தருடைய கவிதை நூல்களைப் படியெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த காரணத்தால், அவருடைய உத்திகளைப் புரிந்து கொண்டேன். எனது கவிதைத் துறைக்குப் பாவேந்தர் வழிகாட்டி. ஆனால் நான் அவரைப் பின் பற்றி எழுதவில்லை. ஒரு பெருங்கவிஞரைப் பின் பற்றி எழுதினால், நம்முடைய சொந்த வளர்ச்சி பத்தாண்டுகள் பின் தங்கி விடும்.

கேள்வி : யாரையும் பின்பற்றாமல் புதிய முறையில் எழுத வேண்டும் என்று நீங்கள் நினைக்கக் காரணம் என்ன?

பதில் : நான் ஒரு நாத்திகன். கவிதை ஒரு வரப்பிரசாதம் என்பதை நான் மறுக்கிறேன். கடுமையாக உழைத்துப் பழைய புலவர்களை வென்று காட்ட வேண்டும் என்ற ஆர்வம் என்னை இளமையில் உந்தித் தள்ளியது. எனக்கு இத்தகைய நம்பிக்கையும், மன உறுதியும் ஏற்பட்டதற்குக்

காரணம் பெரியாரின் கொள்கையில் எனக்கிருந்த ஈடுபாடுதான்.

கேள்வி : கவிதை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் : பிறவியிலேயே ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்பதெல்லாம் பித்தலாட்டம். ஒரு பொருளையோ, அல்லது நிகழ்ச்சியையோ பார்த்து உணர்ச்சிவசப் பட்டுப் பாடுதல் என்ற பழக்கமும் எனக்குக் கிடையாது. எந்தப் பொருளைப் பற்றியும் உட்கார்ந்து சிந்தித்துத்தான் எழுதுவேன். பிள்ளை பெற வேண்டும் என்பதற்காகப் புணர்வதில்லை; அதுபோலக் கவிதை ஆவேசத்துக்காக எப்பொருளையும் பார்ப்பதில்லை.

கேள்வி : கற்பனை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் : கவிதைக்குக்கற்பனை தேவையில்லை. கண்ணாடி, எதிரில் உள்ள உருவத்தைத்தான் காட்டும்; வேறு உருவத்தைக் காட்டுவதில்லை. உலகத்தை அப்படியே காட்டுவதுதான் கவிதை. ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுச் சிந்திப்பதுதான் கவிதைக் கொள்கை. நான் பச்சையப்பன் கல்லூரியில் பேசும் போது இக்கருத்தை வெளியிட்டேன். டாக்டர் மு. வ. இக்கருத்தைப் பாராட்டினார்.

கேள்வி : உங்கள் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம் என்ன?

பதில் : நுட்பமான சிந்தனை; ஒதுங்கிய சிந்தனை. ஒரு கவிஞன் சிறந்த சிந்தனையாளனாக இருக்க வேண்டும். நான் கவிதையில் எந்தக் கருத்தைச் சொன்னாலும், எனக்கு முன் வாழ்ந்த கவிஞர்கள் சொன்ன முறையிலிருந்து மாறிப் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்று நினைப்பேன். சற்று ஒதுங்கிச் சிந்திப்பேன். வெள்ளை முயலைப் பார்த்தவுடன், 'தும்பைப் பூப் போன்ற வெள்ளை

முயல்' என்றும், 'பஞ்சுடல் பசுங்கண் பாய்முயல்' என்றும் பொதுவாகப் பிற கவிஞர்கள் குறிப்பிடுவர். ஆனால் நான் ஒதுங்கிச் சிந்தித்துச் 'சலவை முயல்' என்று வேறுவிதமாகச் சொன்னேன். இதுதான் என வெற்றிக்குக் காரணம்.

கேள்வி : நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை? ஏன்?

பதில் : கல்லாடம், திருக்குறள், நாலடியார், தல புராணங்கள், 17-18 ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் எழுதிய சிறு பிரபந்தங்கள் ஆகியவற்றை விரும்பிப் படிப்பதுண்டு. கொள்கை அளவில் புராண நூல்களை நான் வெறுத்தாலும், அவற்றை எழுதிய கவிஞர்களின் ஆற்றலை மிகவும் மதிக்கிறேன். பேராற்றல் மிக்க கவிஞர் பலர் ஊர்பேர் தெரியாமல் அழிந்து போனார்கள்; அவர்களுக்காக வருத்தப் படுகிறேன். நான் படிக்கும் போது பாடலை அதிக மாகச் சுவைப்பதில்லை. அதில் பயன்படுத்தப் பட்டுள்ள கவிதை உத்திகளைத்தான் அதிகம் சுவைப்பேன்.

கேள்வி : கவிதை எப்படி இருக்க வேண்டும்?

பதில் : முத்தத்தைப் போல் சுவையாகவும், சுருக்கமாகவும் இருக்க வேண்டும். சிறிய கவிதைகள் எழுதிவெற்றி பெறப் பெரிய ஆற்றல் வேண்டும். சொற்சுருக்கம் எனக்குப் பிடிக்கும். தாழம் பூவை மடித்துத் தலையில் செருக வேண்டும்; அதுபோல சொற்களை மடித்துக்கவிதையில் செருகவேண்டும். சங்க இலக்கியத்தின் வெற்றியே சொற்சுருக்கத்தில் தான்! நல்ல கவிதைகளை எழுதுவதற்கு மிகவும் கடினமான உழைப்புத் தேவை. கவிதை எழுதுவதைவிட ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்.

கேள்வி : நீங்கள் உங்கள் பாடல் வரிகளைப் பதிப்புக்குப் பதிப்பு மாற்றி விடுகிறீர்களே! ஏன்?

பதில் : அது என் வளர்ச்சியின் அடையாளம். ஒரு பெண் பருவ முதிர்ச்சி அடைந்த பிறகு தாவணிக்கு மாறுவது போல.

**கேள்வி :** கதைக் கவிதைகளை நீங்கள் விரும்பி எழுதக் காரணம் என்ன?

பதில் : சொல்ல விரும்பும் கருத்தைக் கதைக்கவிதையாகச் சொன்னால்தான் படிப்பவர் உள்ளத்தில் நிலைக்கும்படி சொல்ல முடியும். எனவே என் சொல்விளக்கப் பாடல்களைக் கதைக் கவிதையில் தொடங்கிக் கருத்து விளக்கத்தோடு முடிக்கிறேன்.

கேள்வி : செக்ஸ் உங்கள் பாட்டில் அதிகம் ஏன்?

பதில் : அது நிலைபேறுபெற்ற 'சப்ஜெக்ட்' சிறந்த உத்தி. மேலும் பாமரன் முதல் படித்தவன் வரை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய பொருள் (Theme). இந்து, புராண இதிகாசங்களை மட்டும் புரிந்து கொள்வான்; கிறித்தவன், பைபிளை மட்டும் புரிந்து கொள்வான்; முகம்மதியன், குரானை மட்டும் புரிந்து கொள்வான். ஆண்டவனைப் புரிந்து கொள்வதிலும் இப்படிப் பாகுபாடு உண்டு. ஆனால் இவர்கள் எல்லாருமே காதலைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லையா? எனவே காதலுக்கு ஆண்டவனை விட கவர்ச்சி அதிகம். மேலும் நம் நாட்டுப் பக்தர்களுக்கு, ஆண்டவனையே படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்து, நாயக நாயகி பாவத்தில் பாடினால்தான் புரியும் காதல் ஆண்டவனுக்கும் அறிமுகமாக அமைகிறது.

கேள்வி : உங்கள் தகுதிக்குச் சுவரும் சுண்ணாம்பும் தேவைதானா?

பதில் : அதை ஒரு காரணத்துக்காக எழுதினேன். கவிதை ஒரு வீர வழிபாடு ஆகிவிட்டது. காதல்,

வீரம், பக்தி என்ற இம்மூன்று பொருளைப் பற்றி எழுதுவதுதான் கவிதை மரபாகத் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. அம்மரபை மட்டந்தட்ட எழுதப்பட்டதுதான் சுவரும் சுண்ணாம்பும்.

கேள்வி : கவிதையைப் பற்றி நீங்கள் கடைசியாகக் கூற விரும்புவது என்ன?

பதில் : ஒரு கவிஞன் எழுதுவதெல்லாம் கவிதையாகி விடுவதில்லை. சிலவே கவிதை அந்தஸ்து பெறுகின்றன; தன் படைப்புக்குக் கவிதை அந்தஸ்தைத் தேடித் தரக் கவிஞன் கடினமாக உழைக்க வேண்டும். மூக்கில் நுழைவதுதான் மூச்சு; முதுகைத் தடவிச் சென்றால் அது காற்றுத் தான்.

சென்னைக் கடற்கரையில் கவிஞர் சுரதாவுடன்
கவிஞர்கள் முருகுசுந்தரம், அப்துல் ரகுமான்
சந்திப்பு: 19-9-1969

## கவிஞர் சார்,
## பதில் சொல்லுங்கள்!

வாழ்க்கைக்குக் காதல் தேவைதானா?

எதற்கையா கண்ணடிக்கும் காதல்? காதல்
இல்லையென்றால் இனிக்காதா முத்தம்? இன்பச்
சதைப்பொழுது போக்குதற்கு வேண்டு மானால்
சல்லாப சந்திப்புக் காதல் தேவை!

கிரிக்கெட்டைப் பற்றி?

முதுமையிலே வரப்போகும்
கைகாலின் ஆட்டத்தை
முதலில் இங்கே,
புதுவிதமாய்க் காட்டுகின்ற
ஆட்டந்தான் கிரிக்கெட்டுப்
புரிந்து கொள்வீர்!

உங்கள் மனத்தை நெகிழ்வித்த சம்பவம் வாழ்க்கையில் என்ன?

முப்ப தாண்டுகட்கு முன்னர் ஓர்நாள்
பாவேந்தர் புதுவை பாரதி தாசனை
நேரில் சென்று சந்திக்க நினைத்தேன்.

பயணச் செலவுக்குப் பணமில்லை என்னிடம்
ஆதலால் பணத்திற் கலைந்தேன். ஒருசிலர்
கையையும், ஒருசிலர் பொய்யையும் விரித்தனர்.

புறப்பட்டுப் புதுவைக்குப் போக வேண்டுமே
என்ன செய்யலாம் என்று யோசித்தேன்.
கீர்த்தியொடு விளங்கும் கீவளூர் கோயிலில்
வெள்ளை அடிக்கும் வேலை கிடைத்தது.

மலைப்பிளவு வழியாய் வந்த அந்நியர்
கொள்ளை அடித்தனர் கோயிலில்! நானோ
வெள்ளை அடித்தேன் வெண்சுண் ணாம்புநீர்
என்றன் உடம்பில் எங்கும் வழிந்தது!

அப்பளம் தனில்வரும் கொப்புளம் போல
வலக்கரம் தன்னில் மலர்ந்தது கொப்புளம்!

ஆறுநாள் சுண்ணாம் படித்தேன். அதற்கோ
ஒன்றரை ரூபாய் உடனே கிடைத்தது.
புதுவையை நோக்கிப் புறப்பட்ட ரயிலில்
அன்றே ஏறினேன்! அடுத்தநாள் காலையில்
சுவைதரும் செந்தமிழ்ச் சிங்கமாம் அந்தக்
கவிதா மண்டலக் கவியைக்கண் டேனே!

சுரதாவைச் சந்தித்தவர்: பால்யூ
இதழ்: குமுதம், 5-2-1970

## கவிதை பிறந்தகதை

*ஒரு சிறு நிகழ்ச்சி கவிஞர் சுரதாவுக்குக் கவிதை பிறக்கவழி வகுத்தது. அது என்ன?*

புய நானூறு!

பாரதியாரின் மகள் சகுந்தலாவுக்கு வயது ஐந்து இருக்கும். ஒரு சமயம் அவள் தன் அன்னை சொல்லை மதிக்காதிருந்ததைப் பாரதியார் பார்த்தார். உடனே அவருக்குக் கவிதை பிறந்தது "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா - தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!" என்று தம் மகளுக்கு அறிவுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து 'பாப்பாவுக்குப் பாட்டு' என்ற தலைப்பில் கவிதை பிறந்தது.

இதுபோல, இக்காலக் கவிஞர் சுரதா அவர்களின் இல்லத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவமும் கவிதை பிறக்கக் காரணமாய் இருந்தது.

சுரதா ஏராளமான நூல்களை அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்திருக்கிறார். அவற்றைத் தம் வீட்டில் வைக்க இடமில்லாமல், ஓர் அறையின் நான்கு பக்கமும் தரையிலிருந்தே ஆள் உயரத்துக்கு அடுக்கி வைத்திருக்கிறார்.

இவ்வளவு புத்தகங்களுக்கிடையே, எந்தெந்தப் புத்தகம் எங்கெங்க இருக்கிறது என்பதை இவரால் தான் அறிந்து கொள்ள முடியும். சில சமயங்களில் தம்முடைய ஒரே மகன் கல்லாடனை அழைத்து "அதோ, அந்தக் கனத்த புத்தகத்தை எடு... இதோ இந்தப் பச்சை அட்டைப் புத்தகத்தை எடு" என்று சொல்வார். மகனும் அவ்வாறே கொடுப்பான்.

ஒரு சமயம் கல்லாடனை அழைத்து "அதோ அந்தப் பெரிய புத்தகத்தை எடுத்து வா" என்று சொன்னார். சிறுவன் அந்தப் புத்தகத்தை எடுத்து வந்து, "அப்பா, இதன் பெயர் என்ன?" என்று கேட்டானாம். உடனே கவிஞர் "புறநானூறு" என்று சொன்னாராம். "ஓ, புயநானூறா?" என்று மகன் திருப்பிச் சொன்னானாம்

அதற்குக் கவிஞர், "என்ன? புயநானூறா? புறநானூறு என்று சொல் பார்க்கலாம்!" என்றாராம். சிறுவன் கல்லாடனுக்கு 'றகரம்' வரவில்லை. மீண்டும் 'புயநானூறு' என்றே மழலையாகச் சொன்னான். கவிஞர் சிந்தித்தார். கவிதை பிறந்தது, 'புய நானூறு' என்று!

"வீரத்தை வெளிப்படுத்துவது புயம் (தோள்) தானே? புறநானூறும் வீரத்தை அன்றோ காட்டுகிறது? எனவே அதற்குப் 'புய நானூறு' என்றே தலைப்பு வைத்தேன்" என்கிறார் கவிஞர். இதோ அந்தக் கவிதையின் ஒரு பகுதி:

"என்மகன் கல்லாடன் என்பான் வந்தே
பெரும்போர் நூலின் பெயரைக் கேட்டனன்.
'புறநானூறிதன் பெயர் புரிந்துகொள்' என்றேன்.
'புயநா னூறா?' என்றான் புதல்வன்.
இவ்வாறு சொல்லவே என் மகன் சொல்லிய
புயநா னூறெனும் புதிய சொல் பற்றி
ஆராயத் தொடங்கினேன், ஆழ்ந்து சிந்தித்தேன்"

என்ற கவிஞர், மகன் கூறியதும் சரியே என்று அழகாக வாதாடுகிறார் பாருங்கள்:

"விழிகளும் புயங்களும் வீரத்தைக் காட்டிடும்
உறுப்புக்கள் ஆதலின் ஓங்கு புகழ் நூலாம்
புறநா னூற்றைப் புயநா னூறெனக்
கூறுவதாலே குற்றமில்லை
என்னும் முடிவோ டெழுந்தேன் எழுந்து
மழலைப் புலவனை விளையா
மழலைப் புதல்வனை வாரியணைத் தேனே!"

சுரதாவைச் சந்தித்தவர்: பி. வி. கிரி
இதழ்: கல்கி, 11-4-1971

## வரிக்கு ஐந்நூறு வாங்கினேன்

"எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் குறைவுதான். ஆனால், அதிலே எனக்குக் கிடைத்த வெற்றியோ கணிசமானதுதான். நான் யாரையும் தேடிப் போய்ப் பாட்டு எழுத சான்ஸ் கேட்டதில்லை. நான் அப்படி தேடிப் போயிருந்தா, இந்நேரம் மற்றவர்களையெல்லாம் சந்தேகத்துக்கிடமில்லாமல், இரண்டாந்தரமாக்கி யிருப்பேன்..." என்று ஒரு கட்டுக் கவிதைக் குவியல்களிலிருந்து நிமிர்ந்து பேசுகிறார் கவிஞர் சுரதா.

'அமுதும் தேனும் எதற்கு,நீ அருகினில் இருக்கையிலே எனக்கு...' என்று ஓர் இதமான பாடலை இயற்றி, இளம் காதல் நெஞ்சங்களைக் கிளுகிளுக்க வைத்தவர், இந்த சுப்புரத்தின தாசன் என்கிற சுரதாதான்!

சுமார் 30 படங்களுக்குப் பாடல்களும்; மங்கையர்க்கரசி, அமரகவி, ஜெனோவா, புதுவாழ்வு போன்ற படங்களுக்குக் கதை-வசனமும் எழுதிப் புகழ் பெற்றார் தான் அதிகமான படங்களில் பணியாற்றாவிட்டாலும், அதனால் தன் மரியாதையும், செல்வாக்கும் இன்றளவும் குறையவில்லை என்று வாதிடுகிறார் சுரதா.

1945-ல் பட உலகில் நுழைந்த இவர், முதன் முதலில் கதை வசனம் எழுதியது பி. யு. சின்னப்பா நடித்த 'மங்கையர்க்கரசி'க்கு. முதல் செட்டில் இவருடைய தர்பார் சீன் வசனத்தைப் படித்துப் பார்த்த சின்னப்பா,

இளைஞரான இவர்தான் 'மங்கையர்க்கரசி'க்கு வசனம் எழுத வேண்டும் என்று சொல்லி விட்டாராம்.

சுரதா வசனம் எழுத ஆரம்பித்த சமயத்தில் திரைபடத் துறையில் வசனகர்த்தா பஞ்சம் அதிகமாக இருந்தது. அப்போதெல்லாம் வசனம் எழுதுகிறவருக்கு அதிகச் செல்வாக்கு உண்டு. பாட்டு எழுதுகிறவர்களை யெல்லாம் 'வாத்தியார்' என்று அழைப்பார்களாம். அதோடு, பாட்டு எழுதுவது என்பது இரண்டாவது அம்சமாகத்தான் தயாரிப்பாளர்களுக்கு இருந்ததாம்.

''ஒரு படத்துக்காக ஒரு பாட்டு எழுதினேன். அதிலே 'தீ மீதினில் ஈ மொய்ப்பதுண்டோன்'னு ஒரு வரி வரும். அதை எழுதினப்புறம்தான் எனக்கே தோன்றியது, 'நெருப்புக்கிட்டே ஈக்கு என்ன வேலைன்'னு. சரின்னு அதுக்கு வேறே எழுதி மாற்றுவதற்காக மறுநாள் தயாரிப்பாளர்கிட்டே 'பர்மிஷன்' கேட்டேன். அவரும் சரின்னுட்டார். உடனே நான் அந்த வரியை 'நீல வானின் மீது நிழல் படிவதுண்டோ'ன்னு மாத்தினேன்'' என்று கூறி, தானே ரசிக்கிறார் சுரதா.

இந்த ஒரு வரியில் உள்ள இலக்கிய நயத்தைப் பார்த்து ஈப்பன் என்கிற அந்தப் படத் தயாரிப்பாளர் அந்த இடத்திலேயே 500 ரூபாய் 'செக்' ஒன்றைப் பரிசாகக் கொடுத்தாராம். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி யாருக்கும் இதற்கு முன்னும் நடந்ததில்லை; பின்னும் நடந்ததில்லை என்கிறார் இவர்.

''வெற்றிலை போடாமலே வாய் சிவந்த பச்சைப் பசும் கிளிகள்...'' என்ற ஒரு தொடரை மட்டும் கேட்ட மாத்திரத்திலேயே தியாகராஜ பாகவதர் இவரைத் தன்னுடைய 'புதுவாழ்வு' படத்திற்குக் கதை, வசனம், பாடல்கள் எழுதச் சொன்னாராம்!

சின்னப்பாவுக்கு வசனம் எழுதுவதும், பாகவதருக்குப் பாட்டு எழுதுவதும் அந்தக் காலத்தில் அரிய பெரிய செயல்கள். அதைச் செய்த பெருமை தன்னைத்தான் சார்ந்தது என்று சுரதா பெருமிதப்படுகிறார்.

'அந்தக் காலத்துப் பாடல்களை ஒப்பிடும்போது இப்போது இலக்கியத் திறமை கிடையாது' என்கிறார் இவர். 'அப்போதெல்லாம் டியூனுக்கு ஏற்றபடி பாடல்கள் எழுதப் பட்டன. இப்போது அப்படி எழுதச் சொன்னால் ஓடிப் போய் விடுவார்கள்' என்றார் சிரித்துக் கொண்டே

முதன் முதலாகக் கவிதை வடிவிலே 55-ம் ஆண்டு 'காவியம்' என்ற இதழைத் துவக்கியவர் இவர்தாம். சினிமா வசனத்தைப் புத்தகமாகப் போடும் வழக்கத்தை முதன் முதலாக 'மங்கையர்க்கரசி' மூலம் ஆரம்பித்து வைத்தவரும் இவரேதாம்.

சுமார் 3,000 கவிதைகளுக்கு மேல் இயற்றியிருக்கும் இவர், முதல்வர் கருணாநிதி அறக் கட்டளையில் இருந்து மாதந்தோறும் 100 ரூபாய் உதவிப் பணம் பெறுகிறார்.

"நான் வாழ்ந்து கெட்டவனில்லை. ஏனென்றால் நான் எப்போதுமே வாழவேயில்லை. 'சரிதான் போடா' என்று எல்லாவற்றையும் தூக்கி எறிபவன். தமிழ் நாட்டிலேயே எல்லாத்தையும் மறுக்கிற ஆள் நான் ஒருத்தன் தான்..." என்று கூறும் சுரதா, இந்த உதவிப் பணத்தை மட்டும் பெறுவது ஏன் என்பதைப் பற்றியும் குறிப்பிடுகிறார் :

"ஒரு எழுத்தாளனை மற்றொரு எழுத்தாளன் ஞாபகம் வைத்துக் கொண்டு உதவி செய்வது என்பது பெரிய காரியம். நான் பெறத் தகுதி உள்ளவன் என்று முதல்வர் காட்டிய இரக்க உணர்ச்சிக்கு நான் மரியாதை காட்டறேன். இவரை என்னாலே ஒரே ஒரு நிகழ்ச்சியோட தான் ஒப்புவமை சொல்ல முடியும். அதாவது மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தருமபுர ஆதீனப் புலவராயிருந்த போது, ஒரு சம்பவம் நடந்தது. சீர்காழி

வட்டத்தில் இருந்த 12 மிராசுதார்கள் ஒன்று சேர்ந்து, எந்த வகையிலாவது பிள்ளையவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று விரும்பினார். அதே மாதிரியே பிள்ளையவர்கள் உயிரோடு இருக்கும் வரை ஆளுக்கு ஒரு வண்டி நெல் மாதந்தோறும் அவர் வீட்டுக்கு அனுப்புவது என்று தீர்மானித்து, அதே மாதிரியே பங்கு போட்டுக் கொண்டு மரியாதை செய்தனராம். அதே போல எங்கள் அறிவை மதித்துப் பசியை ஆற்றியிருக்கும் கருணாநிதி அவர்களின் செயலோடு இதை ஒப்பிடுவதில் பெருமைப் படுகிறேன்'' என்று கூறுகிறார் சுரதா.

சுரதாவைச் சந்தித்தவர் : சுந்தரம்
இதழ் : ஆனந்த விகடன், 25-7-9171

★

## என்ன வித்தியாசம்?

சினிமா அனுபவங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது, கவிஞர் சுரதாவிடம், எம். கே. தியாகராஜ பாகவதருக்கும், பி. யூ. சின்னப்பாவுக்கும் என்ன வித்தியாசம்? என்று ஒருவர் கேட்டார். கவிஞரின் பதில்: ''எம் கே. தியாகராஜ பாகவதர் ஒரு ரூபா வைத்திருந்தால், ஒரு ஆப்பிள் பழம் வாங்கிச்சாப்பிடுவார். பி.யு.சின்னப்பா, ஒரு ரூபாய்க்கும் பூவன் பழங்களாக வாங்கிச் சாப்பிடுவார். இருவருக்கும் உள்ள வித்தியாசம் எல்லா அம்சங்களிலும் இதுதான்!''

சுரதாவைச் சந்தித்தவர் : புலவர் உசேன்
இதழ் : நான்கு பக்கம், ஜனவரி,—1973

## பெரியார் மாவட்டம் என்று பெயரிடவேண்டும்

கவிஞர் சுரதா நாமக்கல் வந்திருந்தார். அப்போது 'தமிழ் முரசு' நிருபரிடம் அவர் கூறியதாவது:—

தமிழ்நாட்டில் கவிதை எழுதும் ஆற்றல் படைத்தவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவித்து நாட்டுமக்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். என்னுடைய தலைமையில் மட்டும் ஏறத்தாழ 1000 பேர்கள் கவிதை பாடியுள்ளார்கள். அவர்களை ஒன்று திரட்டி "அரங்கத்தில் அறிமுகம்" என்ற பெயரில் புத்தகங்களாக வெளியிட ஏற்பாடு செய்து வருகிறேன்!

**சேகரிப்பு**

அதற்காக நாமக்கல், ஈரோடு, குமாரபாளையம், பவானி, அவினாசி, திருப்பூர் முதலிய ஊர்களுக்குச் சென்று, அங்குள்ள கவிஞர்களைக் கண்டு விவரம் சேகரித்துள்ளேன்.

மாதம் 10 கவிஞர்கள் வீதம், தொடர்ந்து அந்தப் புத்தகம் வெளிவர உள்ளது.

**தமிழர்களுக்கு!**

பிற மாநிலத்தார் தங்கள் மொழி இலக்கியத்திலும் மற்றவற்றிலும் சிறந்து விளங்குகிறார்கள். எல்லா வசதியும் இலக்கண இலக்கியச் சுவையும்கொண்ட தமிழர்கள்

மேலும் முன்னேற முடியாமல் இருக்கிறார்கள். வேலை வாய்ப்புகளிலும் மற்ற துறைகளிலும் தமிழ் நாட்டில் தமிழர்களுக்குத்தான் அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

பெரியார் மாவட்டம்

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க இருப்ப தாகக் கேள்விப்பட்டேன். ஈரோடு மாவட்டம் என்பதை பெரியார் மாவட்டம் என்று பெயரிட வேண்டும்.

தமிழக முதல்வர் கருணாநிதி சிறந்த ஆற்றல் படைத்தவர். அவர் நினைத்தால் பல காரியங்களை நிறைவேற்ற முடியும். பல நல்ல காரியங்களைச் செய்தவர்; செய்து வருபவர். ஈரோடு மாவட்டம் என்பதை பெரியார் மாவட்டம் என்று மாற்றியமைக்க முயற்சி செய்வார்; செய்ய வேண்டும் என்ற என் கருத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுரதாவைச் சந்தித்தவர் : சே.ப. குட்டியப்பன்
இதழ் : தமிழ் முரசு, 15-4-1974

# புகழ் என்பது விளம்பரம்

பழமலை : என்னை நினைவிருக்கிறதா?

சுரதா : இல்லை! உங்கள் ஊர்?

பழமலை : விருத்தாசலம்.

சுரதா : கல்லூரியில் பேசப் போயிருந்தேனே-

கேள்வி : சுரதா என்பதற்கு விரிவு தெரியும் (சுப்புரத்தின தாசன்-சுப்புரத்தினம் என்பது பாரதிதாசனின் இயற் பெயர்) தங்கள் பெயர் என்ன?

பதில் : இராச கோபாலன்.

கேள்வி : தாங்கள் எது வரை படித்திருக்கிறீர்கள்?

பதில் : பழைய காலத்துப் பத்தாவது வரையில். ஆங்கிலம் ஏதோ படிப்பேன்.

கேள்வி : தாங்கள் பாட்டெழுத இளமையில் தூண்டுதலாக இருந்தவர் யார்?

பதில் : ஒரு பார்ப்பான்தான் கிருசுணமாச்சாரி என்ற ஒரு தமிழ்ப் பண்டிட்டு.

கேள்வி : தாங்கள் ஒரு பாட்டை எப்படி எழுதுகிறீர்கள்?

பதில் : புணர்வது எப்படி என்றுகேட்டால்-அப்படித்தான்.

கேள்வி : அது சரி! கண்ணதாசன் எப்படி எழுதுகிறார்?

பதில் : நல்ல ஓட்டம் இருக்கிறது. எளிய சொற்களால் எழுதுகிறார். அவருக்கு விளம்பரம்] செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்.

கேள்வி : உங்கள் கவிதைகள் எல்லாவற்றையும் தொகுத்து வெளியிட வேண்டும்.

பதில் : வெளியிடுங்கள். பணத்திற்கு நான் எங்கே போவேன்?

கேள்வி : உரை நடைக் கவிதையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : பெண் என்றால் புடவை கட்ட வேண்டும். வேட்டி கட்டினால் ஒரு மாதிரி இருக்கும். மரபு இல்லாத தால் புதுமையாகத் தோன்றும்; அவ்வளவு தான்.

கேள்வி : உரைநடை எத்துணை வளர்ந்தாலும், பாட்டு நடை இருக்கும். அல்லவா?

பதில் : மனிதன் எதையும் சுருக்கமாகச் சொல்லவும் கேட்கவும் விரும்புவான். பாட்டு நடை எதையும் சுருக்கமாகச் சொல்லும் நடை என்பதால் எக்காலத்திலும் இருக்கும்.

'பாவலர் பழமலை' இடையில் குறுக்கீடாக 'தலை எழுத்து' (த) இல்லாமல் இருப்பது சரிதான். தலை எழுத்து போடுவது நமது மரபன்று. ஊரென்ன, பெயரென்ன என்றுதானே கேட்பது? கேட்கிற வனுக்குப் புலவனின் அப்பனைப்பற்றி என்ன கவலை?

கேள்வி : எழுதியவர்கள் விட்டிருக்கிறார்கள். நீங்கள் சொல்வது பொருத்தமாகத்தான் இருக்கிறது. கவிஞர் என்ற முறையில் நீங்கள் உங்களைப் பற்றிப் பிற கவிஞர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதுண்டா?

பதில் : இப்போது இல்லை புகழ் என்பது விளம்பரம். அதிக ஆடைகள் உடம்பிற்கு அதிக விளம்பரம். ஆனால் நிருவாணந்தான் இயற்கை. இயற்கைக்கு மாறாகப் போகப் போக அமைதியின்மைதான்!

கேள்வி : தங்களுடைய 'தனித்தன்மை' என்று தாங்களே உணர்வது எதனை?

பதில் : தனிமை என்பது பிரிவின் சரித்திரம். தாய்மை என்பது கருவின் சரித்திரம்-என்று பாடியுள்ளேன். தனிமை-தாய்மை-என்பவைகளைப் பற்றிப் பொன் மொழி போல எத்துணைச் சுருக்கமாகச் சொல்லி யுள்ளேன். ஒருத்தியைப் பற்றி 'அகப்பொருள் ஆழமும், புறப்பொருள் மேடும்' என்று பாடினேன் எவன் இப்படிப் பாடினான்? நாம் தரையில்தான் படுக்க வேண்டும்.

கேள்வி : அழுத்தமான கரியமிலக் காற்று தரைக்கு வரும். பூச்சி, பொட்டு கடிக்கும்.

பதில் : அது இல்லை. கால் மண்ணில் படாமல் இருப்பவ னுக்கு மண்பற்று - நாட்டுப்பற்று - இருக்காது. கட்டிலில் இருப்பவர்களுக்கு மண்மீது உரிமை இல்லை. மண்ணில் நிற்பவனுக்குத்தான் மண் உரிமை. தரையில் படாமல் இருப்பவர்களுக்கு நாடே இல்லை.

கேள்வி : நெடும் பாட்டுகள் எழுதவில்லையே ஏன்?

பதில் : வந்தால் எழுதுவேன்! எனக்கும் வரவேண்டும்; தேவையும் வரவேண்டும்.

கேள்வி : தங்களுக்கு 51 வயது ஆகிறது. முன்னைக்கு இப்போது மன நிலையில் மாறுதல் தெரிகிறதா?

பதில் : நிறையப் படிக்கிறேன். வளர்ச்சி தெரிகிறது.

கேள்வி : சிலர் தங்கள் பாடல்களை முழுதாக நினைவில் வைத்திருந்து சொல்கிறார்களே?

பதில் : இது வளர்ச்சியைத் தடுக்கும். பிறருடையதை நினைவில் வைத்திருப்பதும் இப்படித்தான். நான் இப்போதெல்லாம் ஒன்றையும் மனதில் வைத்திருப் பதில்லை!

கேள்வி : தாங்கள் பகுத்தறிவைப் பாடி இருக்கிறீர்களா?

பதில் : பெரியாரைவிட நான் பகுத்தறிவுவாதி. கோயில் சாமிகள் பற்றி நான் நினைப்பதில்லையே! உண்மையில் கடவுள் இருந்து, கேட்டால்கொடுப்பதாக இருந்தால் நமக்கு உதவி தானே! கேட்டேன்; கொடுக்கவில்லை; நினைக்கவில்லை.

கேள்வி : பாட்டரங்கங்களில் தங்கள் பாட்டுச் சிறப்பாக இருப்பதில்லையே ஏன்? இன்று என் பாட்டைக் கவனித்தீர்களா?

பதில் : இல்லை;—கரவொலி எழுந்தால் நன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும். பேசிக்கொண்டிருந்து விட்டேன். என் பாட்டுச் சிறப்பாக இல்லை என்றால், கொடுக்கின்ற காசும் சிறப்பாக இல்லையே?

கேள்வி : தனித்தமிழில் ஈடுபாடில்லையா?

பதில் : சரித்திரம் என்றால் புரிகிறது. ஆனால் வரலாறு என்று எழுதவேண்டிய இடத்தில் சரித்திரம் என்று எழுதமாட்டேன். சொல்லுகிற செய்தி தான் கையாள வேண்டிய சொற்களைத் தீர்மானிக்கிறது. எளிதாக எழுதினால்தான் நாலுபேருக்கும் புரியும்.

கேள்வி : சுரதா எந்தவகையில் கவிஞர் என்பது புரிகிறது. இரவு மணி 12 ஆயிற்று. பிறருடைய தூக்கம் கெடுகிறது.

பதில் ; நன்றாகக் கேட்கிறீர்கள்! காலையில் வாருங்கள்.

சுரதாவைச் சந்தித்தவர் : த. பழமலை, எம்.ஏ.

இதழ் : மனம், அக்டோபர், 1974

## நோயினால் நான் சாக மாட்டேன்

என்னிடம் எந்த விதமான கெட்ட பழக்கமும் கிடையாது, பொடி போடுவதைத் தவிர. நோயினால் நான் சாக மாட்டேன். எனக்கு ஒரு பேராசை உண்டு. சாவு வந்தால் ஓடும் தண்ணீரில் சாக வேண்டும் என்பது. என் சவத்துக்குப் பின்னால் எத்தனை பெரிய கூட்டம் வந்தது என்று கணக்கிட முடியாமல் போகும். இரண்டாவது, போகிற காலத்தில் என்னைத் தூக்கிச் சுமக்கும் அந்த நாலு பேருக்கு நன்றி கூறவேண்டிய அவசியமும் இருக்காது.

சுரதாவைச் சந்தித்தவர் : பாவை
இதழ்: குங்குமம், 19-3-1978

□

## அண்ணாவிடமிருந்த தமிழ்ப்பற்றை புரட்சித் தலைவரிடத்தில் காண்கிறேன்

### பாவேந்தர் நினைவுவிருது பெற்ற உவமைக் கவிஞர் சுரதா சிறப்புப் பேட்டி

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களில், தலைமைக் கவிஞராக வாழ்பவர் கவிஞர் சுரதா. இவரது இயற்பெயர் இராசகோபால். இவர் பாவேந்தர் மேல் கொண்ட ஈடுபாட்டால் சுப்புரத்தினதாசன் என்று தன்னை அழைத்துக் கொண்டு "சுரதா" ஆனார்.

தமிழக அரசு 'பாவேந்தர் பாரதிதாசன் விரு'தினை வழங்கி கவிஞர்களை ஊக்குவிக்க தீர்மானித்ததன் பேரில்

முதலாவதாக 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' பெறுகின்ற பெருமைக்குரியவர் சுரதா ஆவார்.

பாவேந்தரின் பரம்பரைக் கவிஞரான சுரதாவைத் 'தென்னகம்' இதழுக்காகப் பேட்டி கண்டோம்.

இதுவரை எந்த அரசும் தனது இலக்கிய வாழ்வினை மெச்சி அளிக்காத பெருமையினை புரட்சித்தலைவரின் அரசு தந்தது என்கிறார் சுரதா.

பேட்டியைப் படியுங்கள் :-

கேள்வி : பாரதிதாசனை முதன்முதலாக எப்போது சந்தித்தீர்கள்?

பதில் : 1941-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று புதுவையிலுள்ள அவரது இல்லத்தில்.

கேள்வி : பாவேந்தரைப் பார்க்க உங்களைத் தூண்டியது எது?

பதில் : பழையனூர் தேநீர்க் கடை அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதையின் முதற் தொகுதியிலுள்ள "ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்—" என்று தொடங்கும் பாடலைப் பாடிக்காட்டி கவிதை எப்படி? என்று கேட்டார். அந்தக் கவிதையைச் சுவைத்த நான், அந்தக் கவிதையிலுள்ள புரட்சி வேகத்தால் கவரப் பட்டேன் அந்தப் புரட்சிவரிகளேபாரதிதாசனைப் பார்க்க என்னைத் தூண்டியது.

கேள்வி : பாவேந்தரைப் பார்த்த பிறகுஅவரைக் கொள்கை ரீதியாகவே ஏற்றுக் கொண்டீர்களா? இல்லை கவிதைப் பாணியை மட்டும் ஏற்றுக் கொண்டீர்களா?

பதில் : பெரியார் அவர்களின் 'குடியரசு' இதழ் வழியாக ஏற்கனவே பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றவனாக

இருந்து, சிறு சிறு கவிதைகள் எழுதி வந்த நான், பாவேந்தரைப் பார்த்த பிறகு, அவரது பாணியை மட்டும் பின்பற்றிக் கொண்டு, அவரை நான் வழிகாட்டி ஆக ஆக்கிக் கொண்டேன்.

கேள்வி : ஏன் 'சுரதா' என்று வைத்துக் கொண்டீர்கள்?

பதில் : பாவேந்தர், தன் பெயரை விட்டு விட்டு, பாரதிக்குத் தாசனாகி 'பாரதிதாசன்' ஆனார். அவர் விட்ட அந்தப் பெயரை (சுப்புரத்தினம்) எண்ணிப் பார்த்து, அவரது பெயருக்குத் தாசனாக, சுப்புரத்தினதாசன் என்று என்னை அழைத்துக் கொண்டேன். ஒருமுறை மாட்டுக் கொட்டிலில் இருந்து கடிதம் எழுதும்போது கையெழுத்துப் போட்டேன். கடிதத்தில் இடம் குறைச்சல் எனவே சு. ர. தா. என்று புள்ளியிட்டு சுருக்கி எழுதிப் பின்னாளில் சுரதா என்றே ஆக்கிக் கொண்டேன்.

கேள்வி : நீங்கள் சென்னைக்கு முதன் முதலாக வரக் காரணம் என்ன?

பதில் : 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பை பாவேந்தர் நண்பர்கள் ஏற்படுத்தி புரட்சிக்கவி, நாடகத்தை அரங்கேற்ற இருந்தபோது, அந்த நாடகத்தில் நடிப்பதற்காக பாவேந்தர் என்னைக் கடிதம் மூலம் அழைத்தார். அந்த நாடகத்தில் அமைச்சர் பாத்திரம் ஏற்று நடித்தேன். அதன் பின்னர் சென்னை வாசியானேன்.

கேள்வி : நீங்கள் திரைப்படத்துறைக்கு எப்படி வந்தீர்கள்?

பதில் : முத்தமிழ் நிலையத்தில் நாடக நடிகனாக அறிமுக மான நான், முத்தமிழ் நிலையம் நிறுத்தப்பட்ட போது புதுக்கோட்டையில் தங்கி இருந்தேன். நண்பர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி என்னை ஒரு

பட அதிபருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின் நான் எழுதிய ஒரு உரையாடல் பகுதியைப் பி. யு. சின்னப்பா படித்துப் பார்த்தார். அது அவருக்குப் பிடித்திருந்தது. அவர் எனக்குக் கொடுத்த வாய்ப்பினால் 'மங்கையர்க்கரசி' என்ற திரைப்படத்துக்குக் கதை—வசனம் எழுதி திரையுலகத்துக்கு அறிமுகமானேன்.

**கேள்வி :** நீங்கள் முதன் முதலாக எந்தத் திரைப்படத்துக்குப் பாடல் எழுதினீர்கள்?

**பதில் :** புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் நடித்த 'என் தங்கை' திரைப்படத்துக்காக முதன் முதலாக "ஆடும் ஊஞ்சலைப் போல—அலை ஆடுதே" என்று துவங்கும் பாடலை எழுதினேன்.

**கேள்வி :** புரட்சித்தலைவர் படத்தில், முதற்பாடல் எழுதியது பற்றியும், இப்போது பரிசு பெற்றது பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** நான் திரைப்படப் பாடலை முதன் முதலாக புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். படத்தில் எழுதினேன் இப்போது அவராலேயே 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' கிடைக்கப் பெற்றேன். அந்த விருதவைப் பெறுவதிலேயும் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப் பட்டேன். திரைப்படப்பாடல் எழுதுவதிலேயும், பரிசு பெறுவதிலேயும் எனக்கு முதன் முதலாக புரட்சித்தலைவர் கைகளாலேயே அந்த நல்ல காரியம் நடந்திருக்கிறது என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**கேள்வி :** புரட்சித் தலைவர் படத்துக்கு ஏதாவது திரைக் கதை வசனம் எழுதியுள்ளீர்களா?

**பதில் :** ஆமாம்; 'ஜெனோவா' படத்தில் முதன் முதலாகக் கதை வசனம் எழுதினேன். அந்தப் படத்துக்குப் பாடல்களையும் நான்தான் எழுதினேன்.

கேள்வி : இலக்கியத்துறையில் நீங்கள் இயற்றிய முதல் நூல் எது?

பதில் : 'சாவின் முத்தம்' என்கிற நூல்தான்.

கேள்வி : இப்படி தலைப்பு வைத்ததற்குக் காரணம் என்ன?

பதில் : பகுத்தறிவுக் கொள்கையிலுள்ள பற்றுதல் தான் இதற்குக் காரணம்.

கேள்வி : நீங்கள் எழுதிய பரிசுபெற்ற நூல் எது?

பதில் : 'தேன்மழை' புத்தகத்துக்குப் பரிசு முதன் முதலாகக் கிடைத்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழக அரசு பரிசு கொடுக்கத் தீர்மானித்த போது, முதல் பரிசு பெற்ற கவிதை நூல் எனது 'தேன்மழை' நூலாகும்.

கேள்வி: பாரதிதாசனின் படைப்புகளைப் பொதுவுடமை ஆக்குவதாக முதல்வர் அறிவித்ததைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : பொதுவுடமை ஆக்குவது தேவை தான். ஏனெனில் பணக்காரர்கள் வாங்குவதற்குரிய பாவேந்தர் படைப்பு நூற்கள் பாமர மக்களுக்கும் கிடைக்கும். அதனால் பாவேந்தரின் பகுத்தறிவுக் கொள்கைகள் இன்னும் விரைவாகப் பாமர மக்களிடம் பரவிட உதவி செய்யும்.

கேள்வி : பாரதிதாசனின் நினைவுச் சொற்பொழிவுத் திட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : பாரதிதாசன் நினைவுச் சொற்பொழிவு நல்ல ஏற்பாடுதான். ஆனால் நினைவுச் சொற்பொழிவு ஆற்றுபவர்கள் முழு பகுத்தறிவுவாதிகளாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து.

கேள்வி : பாரதிதாசனுக்குத் தமிழக அரசு இனியென்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

பதில் : பாரதிதாசனுக்கு அரசாங்க விழா எடுத்தது பாராட்டுக்கு உரியதாகும். ஆனால் இனிமேல் பாரதிதாசனுக்குப் பல்கலைக் கழகத்தில் தனி ஆராய்ச்சிப் பிரிவு (Chair on Bharadhidasan) ஏற்படுத்த வேண்டும். பாரதிதாசனுக்குச் சென்னையில் ஒரு நினைவு மண்டபம் கட்டி, அந்த மண்டபத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் கூறுவது போல 'பாரதிதாசன் கவிதா மண்டபம்' ஏற்படுத்தி செயல்பட அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி : தமிழக அரசின் தமிழ்ப்பணி குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில் : நீண்டகாலம் தொடர்பு அற்று இருந்த ஆஸ்தான கவிஞர் பதவி, முதல்வர் பற்றி வசை பாடிய கண்ணதாசனுக்குக் கொடுத்ததும், வசையோ இசையோ பாடாத எனக்குப் பணமுடிப்பும் பாராட்டும் கொடுத்திருப்பதும், 'பேரறிஞர் அண்ணா அவர்களிடம் இருந்த பெருந்தன்மைக் குணம் புரட்சித் தலைவர் அவர்களிடமும் இருக்கிறது' என்பதை படம் பிடித்துக் காட்டுகிறது.

சுரதாவைச் சந்தித்தவர் : மு. கோ. வசந்தன்
இதழ் : தென்னகம், 4—5—1978

## நடிகைகளைப் பற்றிப் பாடக் கூடாதா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில், கவிஞர் சுரதா குறிப்பிடத்தக்கவர். நறுக்குத் தெறிக்கும் வார்த்தைக் கணைகளால், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பறைசாற்றுவதில் வல்லவர்!

இதுவரை மூவாயிரம் கவிதைகள் எழுதியுள்ள அவர், தமிழ்க் கவிஞர்களை மட்டுமல்ல; தமிழ நடிகைகளைப் பற்றியும் ஏராளமாகப் பாடியுள்ளார். துணிச்சல்காரரான சுரதா, நாயன்மார்களைப் பற்றிப் பாடினால்தான் கவிதையா? நடிகைகளைப் பற்றிப் பாடினால் கவிதை இல்லையா?— என்று கேட்கிறார் இந்தப் பேட்டியில்!

குறைந்த வயதிலே அதிகமாகப்பாடியவர்களில் மகாகவி பாரதியார் குறிப்பிடத் தக்கவர்.

ஆனால் ஒரு கொள்கை வட்டத்துக்குள் நின்று அதிகமாக எழுதிய கவிஞர்களில் பாரதிதாசன் குறிப்பிடத் தக்கவர்.

பாரதியின் பாடல்களில், தேசிய எழுச்சி மேலோங்கி நின்றது! பாரதிதாசன் படைப்புகளில், சமுதாயப் புரட்சியே முதலிடம் வகிக்கிறது!

அந்த இரு பெரும் கவிஞர்களின், எழுத்தும்— கருத்தும் தான், பல நூறு கவிஞர்கள் உருவாவதற்குக் காரணமாக அமைந்தன!

பாரதியைப் பின்பற்றி, பல ஆயிரம் கவிஞர்கள் எழுதி யிருக்கக் கூடும்! அவருக்கு எத்தனையோ தாசர்கள் உருவானது உண்மை! என்றாலும், புரட்சிக் கவிஞர் பாரதி தாசனைப்போல், பாரதிக்கு ஒரு தாசனும் அமையவில்லை; பாரதியின் இடத்தை நிரப்ப, பாவேந்தர் பெற்ற தகுதியை வேறு எவரும் பெறவுமில்லை.

அத்தகைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பின் பற்றியும், ஒரு புலவர் கூட்டம் உருவானது! அந்தக் கூட்டம், தந்தை பெரியாரின் பகுத்தறிவு வேலிக்குள்ளி ருந்து, விடுபடாத கூட்டம்! அறிஞர் அண்ணாவின், சமுதாயச் சீர்திருத்த வட்டத்தைவிட்டும் விலகாத கூட்டம்!

இந்தக் கட்டுப்பாடுகளே அந்தக் கவிஞர்களின் படைப்புகள் பிரபலமாகாமல் போனதற்கு, முட்டுக்கட்டை களாக இருந்தன—என்பதும் உண்மை.

அந்த முட்டுக்கட்டைகள், இப்போதும் இருக்கத்தான் செய்கின்றன. ஆயினும் பாரதிதாசன் வழியில், தனக்குச் சரி என்று படுகின்ற கருத்தை பட்டவர்த்தனமாகச் சொல்ல அந்தக் கூட்டம் இப்போதும் தயங்குவதில்லை.

அப்படிப்பட்ட புலவர் கூட்டம், இன்று குறுகிக் கொண்டே வருகிறது. என்றாலும் எஞ்சியவர்களில் எத்தனைபேர் பாரதிதாசன் பெயரை நிலைநாட்ட வல்லவராக உள்ளார்கள் என்று பார்த்தால் கவிஞர் சுரதா வின் பெயரே முதலில் நினைவுக்கு வருகிறது.

சுரதாவின் படைப்புகள், சுயமரியாதைக் கருத்துக்கு உட்பட்ட பாடல்கள் மட்டுமல்ல! 'யாப்பிலக்கணம்' என்னும், தனித்தமிழின் பாட்டிலக்கணத்துக்கும் அவை உட்பட்டவையாகும்.

இலக்கண வரம்புக்கு உட்பட்டு, இலக்கியம் படைக்கும் அளவுக்குத் தகுதியுள்ள கவிஞர்கள், இன்று தமிழ்நாட்டில் மிகச் சிலரே உள்ளனர்; அந்தக் குறைந்த பட்டியலில்

அதிகப் படைப்புகளைப் படைத்தவர்களில் சுரதாவும் ஒருவர்.

இதுவரை 3 ஆயிரம் கவிதைகளை எழுதியுள்ள சுரதாவின் படைப்புகளில், பாரதிதாசன் பாடல்களைப் போல வேகமும் இருக்கும்! புகழேந்தியின் பாட்டல்களில் உள்ளது போல, சொல் அலங்காரமும் இருக்கும். வேறு எவருடைய படைப்பிலும் இல்லாத, ஒரு தனித்தன்மையான குத்தலும் குறும்பும் நிறைந்த வார்த்தைகள் அவர் படைப்பு களில் ஏராளமாக இருக்கும்.

இன்னொரு சிறப்பு: வரிக்கு வரி உவமைகளைக் கொட்டி எழுதக் கூடிய ஒரு கவிஞர் என்ற தனிச்சிறப்பும் சுரதாவுக்கு உண்டு அந்த உவமைகள், ஒரு வித்தியாச மான அழகையும், கற்பனை நயத்தையும் எடுத்துக் காட்டும். அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பெண்களின் கொண்டைகளைப் பற்றி எத்தனையோ உவமைகளைக் கேட்டிருப்போம்? இன்றைய பெண்களின் கொண்டையைப் பார்த்தால்,குதிரைவால்தான் நினைவுக்கு வரும்; ஆனால் சுரதாவின் கற்பனையில் இப்படி உதித்துள்ளது!

'விடுபடா அம்பு விழிபெற்ற மாதே!
கொடிபடு கிழங்குக் கொண்டை ஏன் அவிழ்ந்தது?'

ஒரு பெண்ணின் விழியை, விடுவிக்க முடியாத அதாவது, எய்யமுடியாத அம்பு என்று கூறி விட்டு, கொண்டையைக் 'கிழங்கு'க்கு ஒப்பிடுகிறார். எனவேதான், அது ஏன் அவிழ்ந்தது என்று கேள்விக்குறி எழுப்புகிறார்.

இளவேனில் காலத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிடு கிறார்:

'செந்தீ போன்ற சிறந்த மாந்தளிரை
குயிலின் கூட்டம் கோதிக் கோதி,

குறடுவாய் திறந்தே கூவிக் கூவி,
இசையமுது தளிக்கும் இளவேனிற் காலம்...'

மாந்தளிரைச் 'செந்தீ'—என்று குறிப்பிட்டிருக்கும் அழகை விட, குயிலின் வாயைக் 'குறடு' என்று குறிப்பிட்டிருக்கும் அழகு, தனித் தன்மையுடையதாகும்.

மூங்கிலிலிருந்து இசை கிளம்புவதற்கும் அவர் ஒரு உவமையைக் கூறுகிறார்:

'குட்டி யானைகள் கொட்டாவி விடுதல்போல்
இன்னிசை மூங்கிலில் எழுந்திடும் காலம்'

ஒரு பெண், நாணித் தலை குனிவதைப் பற்றிச் சொல்லும் போது:

''பிழிந்ததொரு புடவையைப் போல் குனிந்து
கொண்டாள்''

என்று குறிப்பிடுபவர் அதே பெண்ணைப் பற்றி இப்படியும் குறிப்பிடுகிறார்:

'எடுத்துக் கடிக்கும் இடமெலாம் இனிக்கும்
கரும்பே தேனே காமத்துப் பாலே'

கரும்பில், அடிக்கரும்பு இனிக்கும் ஆனால் இவளோ எங்கு கடித்தாலும் இனிக்கும் கரும்பாம்! என்ன கற்பனை! என்ன உவமை!...

இன்னும் சில உவமை வரிகள்:
''தண்ணீரின் ஏப்பம்தான் அலைகள்!''
''இலைக்குடையப் பிடித்தபடி மரங்கள் நிற்கும்''
''மழை வயிறு கிழிக்கும் மாடமாளிகை''

உவமைகளில் இப்படி எத்தனையோ அடுக்கிக் கொண்டு போகலாம். விரசமான விஷயங்களைக்கூட, ரசமாகச் சொல்வதிலும் சுரதா வல்லவர்.

மச்ச சாஸ்திரத்தைப் பற்றி ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அதிலே அவர் தன் பகுத்தறிவு முத்திரைகளை

எத்தனை அழுத்தமாக; அதே நேரத்தில் குத்தலாகப் பதித்திருக்கிறார் என்று பார்ப்போம்!

'கன்னி ஒருத்தியின் காமப் படத்திலே
மச்ச மிருப்பின் மயக்குவாள் என்றும்;
மார்பில் ஒருத்திக்கு மச்ச மிருப்பின்
அவளொரு பணக்காரி ஆவாள் என்றும்;
சொல்லுவ தெல்லாம் சுத்த மடத்தனம்!
'மக்கள் ஒருவனை மந்திரி யாக்கலாம்!
மச்சமா ஒருவனை மந்திரி யாக்கும்?
ஆக்கா தென்பதை அறிக! அசைவிலா
ஊக்கமே ஒருவனை உயர்த்துமென் றறிக!'

பகுத்தறிவுக் கருத்துகளானாலும் சுரதாவின் படைப்புகளில், நகைச்சுவைக்குப் பஞ்சமிருக்காது. நடிகை வாணிஸ்ரீ நாவல் படிப்பதாக வந்துள்ள ஒரு செய்தியை வைத்து சுரதா ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அந்தக் கவிதையில் தெளித்துள்ள நகைச்சுவை முத்துக்கள் இவை;

'காமராசர் கவிதை எழுதினால்
பக்தவத்சலம் பதவுரை எழுதினால்,
சிலம்புச் செல்வர் சிறுகதை எழுதினால்,
எடுபடும் என்றா எண்ணுகிறீர்கள்
அடிபடும் அத்துடன் அவர்கள் இதுவரை
பெற்ற செல்வாக்கும் பெருமூச்சு வாங்கும்!'

'தீக்குச்சி மருந்துபோல் தேகம் கறுத்துள
நடிகை வாணிஸ்ரீ நாள்தோறும் வீட்டில்
குடிப்பது பாலாம்! படிப்பது நாவலாம்!
பழைய புராணம் படிப்பதைக் காட்டிலும்
நாவல் படிப்பது நல்லதே எனினும்
திருக்குறள் படித்தால் திருந்தி வாழலாம்!
சாக்கடை நூல்களைச் சாத்திரம் என்போர்,
பூக்கடை நூலகளைப் புரட்டுவ தில்லையே!...

இப்படி ஒவ்வொரு நடிகையின் பழக்க வழக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு 'சுவரும் சுண்ணாம்பும்' என்ற தலைப்பில், பல நடிகைகளைப் பற்றி எழுதியுள்ளார் சுரதா.

அவரால் பாடல் பெறாத நட்சத்திர நடிகைகள் மட்டுமல்ல; குட்டி நடிகைகள் கூட இல்லை என்றே சொல்லலாம்.

வரலாற்று நாயகர்களையும், தமிழ் வளர்த்த அறிஞர்களையும் பற்றி ஏராளமாக எழுதியுள்ள சுரதா, நடிகைகளைப்பற்றியும் இவ்வளவு கவிதைகள் எழுதுவானேன்?

இந்த ஒரு நூலில் அவர் அளித்துள்ள விளக்கம். நாயன்மார்களைப் பற்றி எழுதுவதுதான் கவிதை என்பதல்ல, நடிகைகளைப்பற்றியும் எழுதுவதுதான் கவிதை.

நாட்டில் விளம்பரம் பெற்ற நடிகைகளைப்பற்றி நான் எழுதுவதற்குக் காரணம், இவர்கள் மூலம் கவிதைகள் விளக்கம் பெற்றுவிடும் என்பதற்காக அல்ல, விளம்பரம் பெறவேண்டும்; பெறும் என்பதற்காகத்தான்.

'கவிஞர்கள், முத்தமிழில் முதல் தமிழை வளர்ப்பது போல, நடிகைகள் மூன்றாம் தமிழாகிய நாடகத்தமிழை நாள் தோறும் வளர்க்கிறார்கள். அவர்களின் சிறந்த நடிப்பிற்குப் பாரும், பாராளுமன்றமும் பல பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பிக்கின்றன, அப்படி இருக்க அவர்களைப் பற்றி நான் ஏன் எழுதக்கூடாது?'

சுரதா இப்படிக் கேட்பது ஒருவகையில் நியாயமாக இருந்தாலும்; அவரை ஓர் உயர்ந்த கவிஞராக ஒத்துக் கொள்ள வைத்தது, அவருடைய கவிதைத் தொகுப்பான 'தேன்மழை' என்ற நூல்தான்!

அந்த நூல், அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது, 1964—65-ஆம் ஆண்டு வெளிவந்த 'சிறந்த இசைப் பாடல்கள்—கவிதைகள்' என்ற சிறப்புப்பரிசை 1967-ஆம் ஆண்டு பெற்றது.

அதன்பிறகு, கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது, சிறந்த கவிஞருக்கான கலைமாமணி விருதும் சுரதாவுக்குக் கிடைத்தது.

இப்போது முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் சுரதாவுக்கு ரூ 10 ஆயிரம் ரொக்கப்பரிசும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு, 'சிறந்த கவிஞர்' என்று கவுரவிக்கப்பட்டிருக்கிறார்.

இதையொட்டி, மாலை முரசுக்கு, சிறப்புப் பேட்டி அளித்த சுரதாவிடம், நமது நிருபர் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்துள்ள பதில்களும் வருமாறு :

கேள்வி : எந்த அடிப்படையில் தாங்கள் 'இந்த ஆண்டின் சிறந்த கவிஞர்'— என்று தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறீர்கள்?

பதில் : சிறந்த கவிஞர் என்று தேர்வு பெறவில்லை. அதற்காகவும் பண முடிப்பும், பாராட்டும் வழங்க வில்லை. அப்படிப் பார்த்தால் என்னை விடச் சிறந்த எத்தனையோ கவிஞர்கள் இன்று உண்டு. இந்த 78—ஆம் ஆண்டில் சிறுவன் கூட சிறந்த கவிஞனாக வந்துவிட முடியும்! பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில் ஒருவன் என்பதற்காகத்தான் இந்தப் பரிசு கிடைத்திருக் கிறது.

கேள்வி : பாரதிதாசன் பரம்பரை என்றால்?...

பதில் : அவர் கருத்தை ஏற்றுக்கொண்டு; அவர் கொள்கை களுக்கு உடன்பட்டு; அவர் மரபைப் பின்பற்றி எழுதுகின்ற கவிஞர்கள் என்பதுதான், பாரதி தாசன் பரம்பரை என்பதாகும்.

கேள்வி : இந்தப் பரிசு கிடைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : இது வரைக்கும் யாருக்கும் கிடைக்காத ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது என்று பெருமைப்

படுகிறேன். ஆனால் இது எனக்குக் கொடுக்கப் படுவதற்கு, மிகுந்த பெருந்தன்மை தேவைப் பட்டிருக்கிறது என்பதையும் உணர்கிறேன்.

எனக்கு இந்தப் பரிசு கொடுக்க வேண்டும் என்ற ஆசை பலருக்கும் இருந்திருக்கலாம். ஆனால் அதை செயல்படுத்தியது எம் ஜி.ஆர். தான்; அந்தப் பெருந்தன்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூவேந்தர்கள் ஆண்டார்கள். அவர்களுக்கும் வரலாறு இருக்கிறது. பாரிமன்னன், ஒரு சிற்றரசன் தான் அவனுக்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாறு கொடைத்தன்மையுடன் கூடியதாக இருப்பதால், பல விதங்களில் மூவேந்தர்களின் சிறப்பை விட அது உயர்ந்து நிற்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

**கேள்வி :** தாங்கள் ஏன் பாரதிதாசனுக்குத் 'தாசன்' ஆனீர்கள்? அவரை எப்போது சந்தித்தீர்கள்?

**பதில் :** முதல் முதலில், 1941-ஆம் ஆண்டு புதுவையில் பாவேந்தரைச் (பாரதிதாசனை) சந்தித்தேன். ஆனால் அதற்கு முன்பாக இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, அவர் பாடலுக்கு அடிமை யாகிவிட்டேன்.

1938-ஆம் ஆண்டில், பாவேந்தரின் முதல் கவிதை தொகுப்பு வெளிவந்திருந்தது. அதைத் தொகுத்து வெளியிட்டவர் குத்தூசி குருசாமி.

அந்தப் புத்தகத்தில் உள்ள சமுதாயச் சீர்திருத்தப் பாடல் ஒன்று என் மனதைத் தொட்டது. அன்று முதலே அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்து விட்டது.

**கேள்வி :** அது என்ன பாடல்?

**பதில் :** 'உலகப்பன்' என்ற தலைப்பில் உள்ள அந்தப் பாடல் இதுதான்:

‘ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உதையப்பர் எல்லாம் மாறி,
ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப் பாநீ!’

கேள்வி : பாரதியாரைவிட பாரதிதாசன் எந்த வகையி லாவது சிறந்தவர் என்று கருத முடியுமா?

பதில் : பல வகைகளில், பாரதியை விட பாவேந்தர் உயர்ந்து நிற்கிறார் என்பதே என் கருத்து. பாவேந்தரின் பாடல்களைச் சரியான முறையில் மொழி பெயர்த்தால், அவருடைய அறிவை மேல் நாட்டவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்பது உண்மை.

பாவேந்தரின் கவிதைகளை இப்போது தாகூர் உயிருடன் இருந்து அவரிடம் காட்டினால் கூட ‘என்னைப் போல் ஒருவன் எழுதியுள்ள கவிதை’ என்றுதான் தாகூர். குறிப்பிடுவார், இப்போது பாரதியாரே இருந்தால்கூட தன்னைவிட பாவேந்தர் உயர்ந்த கவிஞர் என்பதை அவர் ஒப்புக் கொள்வார்.

கேள்வி : ‘புதுக்கவிதைகள்’ என்ற பெயரில் வெளிவரும் வசன நடைக் கவிதைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : வரலாற்றில் வடிவம் இல்லாத எதுவும் மனிதனின் மனத்தில் நிற்பதில்லை. ஒரு பெண், அழகா யிருந்தால்தான் எவனுடைய மனத்திலாவது நிற்பாள்.

அவளிடம் உணர்வுகள் இருந்தால்தான் ஒருவனுடன் வாழப் பொருத்தமானவளாகவும் இருப்பாள்.

எல்லோருக்கும் புருவம் வளைந்துதான் இருக் கிறது. ஆனால் எது அழகாக இருக்கிறதோ, அதுதான் தனித் தன்மை பெறுகிறது.

இத்தகைய புதுக்கவிதைகளில் சுவையிருக்கலாம். அந்தச் சுவை கதையிலும் உண்டு. கட்டுரையிலும் இருக்கும். ஆனால் அது கவிதையிலும் இருக்கிறது என்று காட்ட, வட்டத்தைத் தாண்டி; வரம்பை விட்டு விட்டு, மரபுகளை உதறித்தள்ளிவிட்டு; வசன நடைகளை கவிதை என்று சொல்லி போனா போன வரையில் வரிகளை அளவுகளாக்கி எழுதுவது; பிற்காலத்தில் சிறந்த இடத்தைப் பெற முடியாது என்பதே என் கருத்து.

**கேள்வி :** தங்களின் படைப்புகளில் இதுவரை எத்தனை நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அடுத்து என்ன வெளிவர இருக்கிறது?

**பதில் :** இதுவரை 10 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அடுத்து ஒருபெரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். சினிமா தோன்றிய 1931-ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டுவரை உள்ள சினிமா கவிஞர்களைப் பற்றியும், அவர்களின் வரலாற்றையும், பாடல்களையும் ஆராய்ந்து ஒரு நூல் வெளியிட இருக்கிறேன்.

காரணம், இன்றைய அரசியல்வாதிகள் சொல்லும் புரட்சிக் கருத்துகளை 50 ஆண்டுகளுக்கு முன்பே சினிமா பாடல்களில் புகுத்திய வரலாறுகள் எனக்குக் கிடைத்து உள்ளன.

அடுத்தது, சுந்தரம் பிள்ளைக்குப் பிறகு, கவிதை நாடகம் எதுவும் சரியாக எழுதப்படவில்லை என்ற குறையைப் போக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளேன்.

மூன்றாவதாக, கவிதைக்குச் சிறந்த ஏடு எதுவுமில்லை என்ற குறையைப் போக்கும் வகையில், 'பாரதிதாசன் கவிதா மண்டலம்' என்ற கவிதை ஏட்டைத் துவக்க இருக்கிறேன்.

சுரதாவைச் சந்தித்தவர்: கருணைதாசன்
இதழ் : மாலை முரசு, 13-5-1978

## சிலப்பதிகாரம் தினத்தந்திச் செய்தியா?

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

இது குறள் என்பதும், இதற்கு விளக்கம், "தன்னைக் காத்து, தன் கணவனையும் காத்து, தகுதி வாய்ந்த புகழையும் காப்பதோடு எந்தச் சூழ் நிலையிலும் உறுதி தளராதவளே பெண்" என்பதும் நாம் தெரிந்தவையே. ஆனால், இதே குறளுக்கு உவமைக் கவிஞர் சுரதா தரும் விளக்கம் புதுமையானதாகவும், இன்றைய சூழலில் நம்மை அதிகம் சிந்திக்க வைப்பதாகவும் இருக்கிறது.

'புதிய சமுதாயம்' இதழுக்காகக் கவிஞர் சுரதாவைச் சிறப்புப் பேட்டி கண்டபோது, "படிக்கின்ற பழக்கம் இப்போது நம்மவர்களிடையே வெகுவாகக் குறைந்துவரக் காரணம் என்ன?" என்று கேட்ட கேள்விக்கு அவர் மேற்கண்ட குறளை விடையாகக் கூறி அதற்கு அரியதொரு விளக்கமும் தந்தார்.

"நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்பதன் மூலம் தன்னை – தன் மனத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்; தன் மனத்தைக் காத்துக் கொள்ள உதவும் நூல்களைச் செய்யும் எழுத்தாளர்களை— அவர்களின் நூல்களை ஓசியில் படிக்காமல் காசு கொடுத்து வாங்கிப் படிப்பதன் மூலம் காக்க வேண்டும். படித்த நூல்களில் உணர்ந்த கருத்துகளையும் சொற்களையும் மற்றவர்களிடம் கூறுவதன் வழி—நூலின் கருத்துக்களும், சொற்களும்

மறைந்து போகாமல் இருக்க உதவ வேண்டும். இந்த மூன்று செயல்களையும் செய்வதில் எப்போதும் உறுதி தளராமல் இருக்கவேண்டும். குறளில் 'பெண்' என்றிருக்கும் இடத்தில் வாசகன் எனப்போட்டுக் கொண்டு சிந்தித்தால் ஒரு வாசகனின் கடமையை அந்தக் குறள் மிகத் துல்லிய மாக விளக்குவதைக் காணலாம்.

அதே இடத்தில் எழுத்தாளன் என்று போட்டுக் கொண்டு சிந்தித்தால் ஒழுக்கமுள்ளவனாக ஓர் எழுத்தாளன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும், எழுத்தின் தரத்தை உயர்த்துவதன்வழி தன் எழுத்தை நம்பிப் படிக்கும் வாசகர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், புதிய புதிய சொற்களை உருவாக்கு வதன் மூலமும் பழைய சொற்களைப் பயன்படுத்துவதன் மூலமும் சொற்களை மறைந்து போகாமல் காக்க வேண்டும் என்றும், இந்த மூன்று பணிகளைச் சோர்வில்லாமல் அவன் செய்ய வேண்டும் என்றும் அந்தக் குறளுக்குப் பொருள் கூறலாம்.

எழுத்தாளனும் வாசகனும் மேற்குறித்த வழிகளி லிருந்து திசைமாறிச் சென்று கொண்டிருப்பதால்தான் படிக்கும் பழக்கமும், எழுத்துலகமும் இன்று நலிந்தும் மெலிந்தும் போய்க் கொண்டிருக்கின்றன.''

மேற்கண்டவாறு கவிஞர் சுரதா குறளுக்கு விளக்கம் கூறி இன்றைய சராசரி வாசகனும் எழுத்தாளனும் எப்படி உள்ளனர் என்பதையும் தெளிவுபடுத்தினார். மேலும் சில கேள்விகளுக்குச் சுரதா அளித்த பதில்கள் :

கேள்வி : உரை நடைக்கும் கவிதைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில் : உரைநடை சுவர்க் கடிகாரம் போன்றது. சுவர்க் கடிகாரம் பெரியதாயிருக்கும். நாம்தான் ஓடிப் போய் அதில் மணி பார்க்க வேண்டுமே தவிர, அது நம்மோடுவந்து மணி காண்பிக்காது. அதைப்

போல அளவில் பெரிதாக இருக்கும் உரைநடை வடிவங்களான சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை முதலானவை படிக்கும்போது இன்பம் தருபவை. மற்றநேரத்தில் பெரும்பாலும் அவை பயன்படுவதில்லை. ஆனால் கவிதை அவ்வாறல்ல. கைக்கடிகாரம் மாதிரி அளவில் சிறிதாக அமைந்து சுவர்க் கடிகாரம் தரும் அத்தனை பயன்களையும் தரும். அதுமட்டுமல்ல! கையில் இருந்துகொண்டு எந்த நேரத்திலும் பயன்படும். கைக்கடிகாரம் போல கவிதை நெஞ்சத்திற்குள் எந்த நேரமும் நின்று நிலைத்து இன்பம் தரும்.

கேள்வி : கவிஞன் பிறக்கிறான்; உருவாக்கப்படுவதில்லை என்னும் கருத்தை ஏன் மறுக்கிறீர்கள்?

பதில் : 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்னும் குறள் இதற்குத் தகுந்த சான்று என்று கருதுகிறேன். பிறப்பு எல்லோருக்கும் ஒன்றுதான். செய்கின்ற தொழில்களால்தான் அவரவர் சிறப்புகள் ஒன்று படுவதில்லை. கவிதை என்னும் தொழிலைச் செய்வதால் ஒருவன் கவிஞன் எனப்படுகிறான். 'எமக்குத் தொழில் கவிதை' என்ற பாரதியின் கருத்தை உணர வேண்டும். 'கவிஞன் பிறக்கிறான்' என்பது தன்னை உயர்த்துவதற்கு யாரோ ஒரு கவிஞன் விட்ட சரடாக அல்லது ஒரு கவிஞனை உயர்த்த அவனுடைய தீவிர ரசிகன் அள்ளிவிட்ட கதையாக இருக்க வேண்டும்.

கேள்வி : பாரதியார்தான் எளிமையான கவிதைக்கு முன்னோடி என்கிறார்களே?

பதில் : அதை நான் ஏற்கவில்லை. பத்தாவது நூற்றாண்டிலிருந்தே எளிமையான கவிதைகள் வரத் தொடங்க விட்டன. கவிதையை எளிமைப்

படுத்தியோர் பட்டியலைக் கூறவேண்டுமானால் பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கஅடிகள், குனங்குடி மஸ்தான், வேதநாயக சாஸ்திரி, வேதநாயகம் பிள்ளை, சென்னிகுளம் அண்ணா மலை ரெட்டியார், உடுமலை முத்து சாமிக் கவிராயர், செஞ்சி ஏகாம்பர முதலியார், பாரதியார், பாரதிதாசன் என்றுதான் பட்டியலிட வேண்டும். அதுமட்டுமல்ல சிந்துக்குத் தந்தை பாரதியல்ல 1861-ஆம் காலத்து அண்ணாமலை ரெட்டியார் தான். அவர்தான் காவடிச்சிந்து என்ற முதல் நூலை எழுதினார்...

கேள்வி : பாரதிதாசன்தானே 'சிந்துக்குத் தந்தை பாரதி' என்று கூறினார். தங்கள் ஆசானின் கூற்று....

பதில் : ஆசானின் கூற்றாயிருந்தாலும் அது ஆண்டவன் கூற்றாயிருந்தாலும் வரலாற்றை நான் மறைக்க விரும்பவில்லை.

கேள்வி : புதுக்கவிதை பற்றி...

பதில் : தற்போதைக்கு அது ஒரு குடும்பக் கடிதம் மாதிரி இருக்கிறது. குடும்பக் கடிதம் குடும்பத்தாரைத் தவிர மற்றவர்களுக்கும் சுவைக்காது. எதிர் காலத்தில் அது எப்படி ஆகப்போகிறது என்பது தெரியவில்லை. புதுக்கவிதை என்று அதற்குப் பெயர் சூட்டியிருப்பதனால் மரபுக் கவிதையைப் புதுக்கவிதை அவமானப்படுத்துவது போல் தோன்றுகிறது. வேறு ஒரு பொருத்தமான பெயரை புதுக்கவிதை எழுதுபவர்களும் படிப்பவர் களும் வைத்துக்கொள்ள வேண்டும். சாலை இளந்திரையன் புதுக்கவிதைக்கு ''உரை வீச்சு'' என்று பெயரிட்டிருப்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

கேள்வி : எடுத்தாள்வது, காப்பியடிப்பது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பதில் : ஒருவரது கருத்தைக் கூறி அந்தக் கருத்தின் மூலம் தனக்குத் தோன்றிய புதுக் கருத்துகளை கூறும்போது எழுத்தாளன் எடுத்தாள்கிறான் என்று பொருள். ஒருவரது கருத்தை அப்படியே கூறிவிட்டு அதைப் பற்றி வேறொன்றும் கூறாமல் இருக்கும்போது எழுத்தாளன் காப்பி அடித்திருக்கிறான் என்று பொருள். காப்பி அடிப்பது குறைய வேண்டுமானால் அதிகமாகப் படிப்பதோடு படிப்பதை நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் பெற்ற வாசகர்கள் உருவாக வேண்டும். இப்படிப்பட்ட வாசகர்களால்தான் ஒரு கதையோ கவிதையோ காப்பியடிக்கப்பட்டுள்ளதை உடனடியாகக் கண்டுபிடிக்க முடியும்.

கேள்வி : சிலப்பதிகாரத்தை 'தினத்தந்திக்குரிய ஒரு செய்தி' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே!

பதில் : ஆமாம், இன்று அந்தச் செய்தி நடந்தால் தினத்தந்திக்கு முதல் பக்கச் செய்தியாக இருக்கும். அந்தச் செய்தியையே அருமைமிக்க ஒரு காவியமாக்கியிருக்கும் போதுதான் இளங்கோவின் ஆற்றல் வெளிப்பட்டிருக்கிறது. என்னிடம் கூட சாதாரண செய்திகளைக் கவிதையாக்கும் பழக்கம் உண்டு.

கேள்வி : எங்கள் கவிஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது?

பதில் : கல்வி செழித்தால் கவிதை வரும். கவிஞர்கள் நூல்களைப் படிக்கக் கூடாது; கற்க வேண்டும். படித்தால் படித்ததை அப்படியே பரீட்சைக்கு எழுதுவது போல் காப்பி அடிக்கத்தான் முடியும்.

கற்றால் அதாவது ஆழமாகக் கற்றால் உண்டாகும் புதிய சிந்தனைகளைக் கவிதைகளாக்கலாம். இது அறிவுரையும் அல்ல. ஆலோசனையுமல்ல. எனது அனுபவத்தை உங்கள் கவிஞர்களிடம் பகிர்ந்து கொள்கிறேன் அவ்வளவுதான்!

சுரதாவைச் சந்தித்தவர் : கவிஞர் பாதாசன்
இதழ் : புதிய சமுதாயம்,(கோலாலம்பூர்,மலேசியா)
ஜூலை, 1979

□

## கவிஞன் பிறப்பதில்லை; உருவாகின்றான்

கவிஞர்கள் பிறப்பதில்லை; உருவாகிறார்கள் என்று உவமைக் கவிஞர் சுரதா கூறுகிறார்

எந்த எழுத்தாளனும் கவிஞனும் தான் கண்ட-கேட்ட-உணர்ந்த அனுபவ பூர்வமான விஷயங்களையே தேவைப் படும்போது தான் எடுத்துக் கொண்ட கருவுக்கு உருசேர்க்கிறான். மற்றபடி கவிஞன் பிறக்கிறான். என்பதெல்லாம் நம்ப முடியாதவை என்றும் அவர் ஆணித்தரமாகச் சொல்கிறார்.

வரும் ஞாயிற்றுக் கிழமை கோலாலம்பூர் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கவிஞர் அன்பானந்தனின் நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளவும் நண்பர்களைக் காணவும் வந்துள்ள கவிஞர் சுரதா மனித உணர்வுகள், இயற்கைத் தன்மைகள், சமுதாயம்,எழுத்துத் துறை இப்படிப் பல விஷயங்களை நேசனுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தன்னை ஒரு கவிஞராக்கிக் கொள்ள விரும்பும் ஒருவர் ஆழ்ந்த மொழி அறிவும் நூற்றுக் கணக்கான பாடல்களை மனனம் செய்து ஒப்புவிக்கும் திறனும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

உடுமலை நாராயணகவி தனக்கு 18-ஆயிரம் பாடல்கள் மனப்பாடம் என்று ஒருமுறை என்னிடம் கூறியுள்ளார்.

பாடல்களை மனப்பாடம் செய்து கொள்வதன் மூலம் பல பழம்பெரும் சொற்களைப் பொருள் புரிந்து கொள்ளவும் அவற்றைத் தங்கள் பாடல்களில் இடம் பெறச் செய்யவும் இயலும் என்றும்அவர் கூறுகிறார்.

எழுத்தாளன் ஒரு விஞ்ஞானியைப் போன்றவன். அவன் ஒரு மரத்தைப் பற்றிப் பாட நினைக்கும் போது அதன் தன்மை அதன் பயன் முதலான விஷயங்களை அறிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாது போனால் ஒரு கவிஞனால் அதன் பெருமைகளைத் தனது பாடல்களில் வடிக்க இயலாது.

சோறு வடிக்கும் இல்லத்தரசி ஆண்டாண்டுகாலமாகப் பதம் பார்க்க ஒரு பருக்கையை அழுத்திப் பார்க்கிறாள். அவள் சோற்றைப் பார்த்த மாத்திரத்தில் வடித்தெடுக்கும் பக்குவத்துக்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இதைப் போல் கவிஞர்களும் தங்களது உய்த்துணரும் அனுபவங்களால் ஒரு பொருளைப்பற்றி பாட இலகுவில் சொற்கோர்வைகளைத் திரட்ட வேண்டும்.

தெய்வ வழிபாட்டுக்கான கீர்த்தனைகளை மட்டுமே பெருமளவில் கொண்டிருந்த தமிழ் பாக்களுள் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள் ஒரு திருப்புமுனையாக அமைந்தன.

பாவேந்தரின் பாடல்கள் பல தலைமுறைகளுக்குப் பல கோணங்களில் சிந்திக்கத் தூண்டுபவையாக இருக்கும்.

தமிழகத்தின் முதல் தேசியக் கவி பாரதியார் என்று கூறுகிறார்கள். ஆனால் 1877-ஆம் ஆண்டு ராமசாமிராஜு என்பவர் எழுதிய பாக்களைக் கொண்டு அவரைத்தான் முதல் தேசியக்கவி என்று கூறலாம் என்றும் கவிஞர் சுரதா கூறுகிறார்.

கண்ணகியின் வரலாற்றைக் கூறும் சிலப்பதிகாரம் ஒரு தினசரி பத்திரிகைக்குத் தேவையான பரபரப்பான தகவலே தவிர வேறொன்றும் இல்லை என்றும் இவர் கூறுகிறார்.

ஒரு கவிஞன், தான் இயற்றும் பாடலுக்காக உழைத்து மன உணர்ச்சிகளை வெளிப்படுத்த வெண்டும். தெளிந்த அறிவும் கடின உழைப்பும் ஒழுக்கமும் இருந்தால் கவிஞன் வெளிப்படுத்தும் சொற்கள் காலத்தால் அழியாது நிற்கும்.

தெய்வப் பாடல்களைத் தவிர்த்து மற்ற விஷயங்களைப் பற்றிப் பாடிய முதல் கவிஞர் பூவை கல்யாண சுந்தரம் என்பாரைப் பற்றிக் குறிப்பிடலாம். சென்னைக்கும் செங்கற்பட்டுக்குமிடையில் தமிழகத்தில் முதலில் ஓடிய ரயிலைப் பற்றி இவர் பாடி இருக்கிறார்.

## ஆழமற்ற சிந்தனை

நம்மவர்கள் எந்த விஷயத்தையும் ஆழமாகப் பார்ப்பதில்லை. இது நமது சமூகத்தின் பெரிய குறையாகும். தொட்டனைத் தூறும் மணற்கேணி என்பதாகத்தான் இருக்கிறார்கள்.

'நமக்குக் குடிநீர் மட்டும் கிடைத்தால் போதும்' என்று திருப்தி அடைந்து விடுகிறோம். தண்ணீருக்கும் கீழே என்ன இருக்கும் என்று ஆராய்ந்தவன் பெட்ரோலைத் தோண்டி எடுத்து விட்டான் என்றும் இவர் கூறுகிறார்.

எழுத்தாளர்கள் பண்டைய இலக்கியங்களைப் படித்து அவற்றில் காணப்படும் வார்த்தைகளுக்குப் பொருள் புரிந்து கொண்டால் அவற்றைத் தங்கள் படைப்புகளில்

பயன்படுத்தி நடைமுறைத் தமிழாக்கலாம். இதனை எழுத்தாளர்கள் தங்கள் கடமையாகச் செய்ய வேண்டும்.

ஒருவர், தான் கவிபுனைய விரும்புவாரானால் அவருக்கு முதலில் 40 முதல் 50 பாடல்கள் மனப்பாடமாகத் தெரிய வேண்டும் என அவர் சொன்னார்.

## புதுக்கவிதைகள்

புதுக்கவிதைகள் என்ற பெயரில் இப்போது வெளியாகும் அம்சங்கள் கால ஓட்டத்தில் மறைந்துவிடும் என்று இவர் நிச்சயமாக நம்புகிறார்.

கலைஞர் கருணாநிதி கவிதைகளைப் போல் எழுதும் அம்சங்கள் கவிதைகள் அல்ல. அவை இலக்கண மரபற்றவை. புதுக்கவிதை பாணியிலான எளிய மொழியறிவாளர்கள் பொருள் புரிந்து கொள்ள உதவுமே தவிர வேறு வகையில் பயன்படாது என்றும் கவிஞர் சுரதா கூறுகிறார்.

## பத்திரிகைகள்

தமிழகத்தில் பிராமணர் அல்லாதார் நடத்தும் பத்திரிகைத் தொழில்கள் வளமற்றிருப்பதற்குக் காரணம் அவர்கள் இரண்டாந்தர அறிவுடையவர்களாக இருப்பதே என்றும் இவர் கூறுகிறார். போதிய முதலீடுகள் இல்லாமலும் திட்டமில்லாமலும் பிராமணர் அல்லாதார் பத்திரிகைகளைத் தொடங்குகின்றனர்.

மேலும் இவர்கள் எழுத்தாளனுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் எதுவும் இல்லாதவர்கள். இந்த நிலையில் பிராமணர்கள் நடத்தும் பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் அளவுக்குத் தரமான விஷயங்களைப் பெற முடிவதில்லை.

அதே நேரத்தில் பத்திரிகைத் தொழிலின் அனுபவம் இன்மை போன்றவையும் இவர்களது வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன.

ஒரு தொழிலைத் தொடங்கு முன்னதாக அதன் ஒவ்வொரு அம்சம் பற்றியும் ஆராய்ச்சி பூர்வமான அறிவு இன்றியமையாததாகும். இதன் காரணமாகவே நான் தொடங்கிய பல பத்திரிகைகளும் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்றும் கவிஞர் சுரதா ஒப்புக் கொள்கிறார்.

சுரதாவைச் சந்தித்தவர்: பழ. எ. அன்பழகன்
இதழ் : தமிழ்நேசன், (கோலாலம்பூர், மலேசியா)
1-6-1979

□

## உவமைக் கவிஞர் சுரதாவுடன் ஒரு சந்திப்பு

'புதுக் கவிதை' என்பது ஒருவனுக்கு ஆசை நாயகி போலாகும். மனைவிக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் எப்படி ஆசை நாயகிக்குக் கொடுப்பதில்லையோ அதுபோல், இலக்கியப் பூங்காவில் அவை மணமற்ற மலர்களே, என்கிறார் பிரபல தமிழக உவமைக் கவிஞர் சுரதா.

கோலாலம்பூர் நகர மண்டபத்தில் இன்று(3-6-79)காலை துவங்கி பல இலக்கிய நிகழ்ச்சிகளுடன் மலேசியாவின் முன்னணி எழுத்தாளர் திரு சா. ஆ. அன்பானந்தனின் 'திருப்பம்', 'மரவள்ளிக்கிழங்கு', 'நயனங்கள்', 'காலத்தின் விளக்கு' ஆகிய புத்தக வெளியீட்டு விழாவில் சிறப்பு அம்சமாக இலக்கியச் சொற்பொழிவாற்ற வருகை தந்துள்ள கவிஞர் அவர்களை நாம் சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவருடன் நாம் நடத்திய சிறு சந்திப்பு உரையாடலை இங்கு வழங்குகிறோம்.

கேள்வி : தமிழகத்திலிருந்து வருகை தரும் இலக்கிய வாதிகளைப் போல் நீங்களும், சொற்பொழிவு, இலக்கியக் கூட்டமென சென்று விடுவீரா அல்லது மாற்றுக் கருத்து ஏதும் கொண்டுள்ளீரா என்பதைச் சொல்லவியலுமா?

பதில் : இந்நாட்டு மக்களின் வாழ்வு முறைகளைக் கருத்தூன்றிக் கவனிப்பதோடு, இங்கு இதுகாரும் வெளிவந்துள்ள நாளேடுகள் மற்றும் இலக்கிய இதழ்களின் படைப்பினைக் கொண்டுபோய் ஒரு திறனாய்வு செய்கின்ற நோக்கம் உண்டு. பலர், நாளேடுகளைத் தவிர்த்து நூல்களை ஆய்வு செய்வதில் பெருநோக்கம் காட்டுவர். ஆனால் நான் அப்படியல்ல. அதற்குக் காரணம் ஏடுகளை நடத்தியவர்களே நூல் வெளியீட்டாளர்களைக் காட்டினும் நிறைய சாதித்துள்ளனர். அதில்தான் பல கவிஞர்களும், அறிஞர்களும், எழுதுகின்ற எழுத்துப் படிவங்கள் வெளிவருவதைக் காண முடிகிறது.

அத்தோடு இந்நாட்டில் வாழ்கின்ற- வாழ்ந்த கவிஞர்களின் பட்டியல் ஒன்றினையும் நான் எடுத்துச் செல்ல விருக்கிறேன்.

எந்த விருத்தத்தை தாங்கள் விரும்பிப் பாடுவீர் என்ற கேள்விக்கு திரு. சுரதா அவர்கள்:-

இன்ன விருத்தம் என்று பாகுபடுத்திப் பாடுவது கிடையாது என்கிறார்.

1941-ஆம் ஆண்டு துவங்கி கடந்த 38-ஆண்டுகளாகக் கவிதைகள் பாடிவரும் சுரதா அவர்கள் தனது பள்ளிப் பருவத்திலேயே பாட்டியற்றத் தொடங்கி விட்டதாகக் கூறுகிறார்.

கேள்வி : புதுக்கவிதைகளின் வரவால் முறைப்படி யாப்பிலக்கணங்களுடன் கூடிய கவிதைகளுக்கு வரவேற்பு குறைந்துள்ளதா? — அந்தப் புதுக்கவிதைகள் 'கவிதை' இலக்கணத்தை ஏற்க இயலுமா?

பதில் : புதுக்கவிதை என்று சொல்லப்படும் கவிதைகளின் வரவால் முறைப்படியான கவிதைகளுக்குப்பாதிப்பு தான் — ஏனெனில் இது புரியுது — அது புரியலை என்கின்றனரே!

இந்தப் புதுக்கவிதை என்பது ஒருவனுக்கு ஆசை நாயகி போன்றது. மனைவிக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் எப்படி ஆசைநாயகிக்கு இல்லையோ அதுபோல், இலக்கியப் பூங்காவில் அவை மணமற்ற மலர்களே!

கேள்வி: யாப்பிலக்கணங்களைப் படித்துக்கவிதை இயற்றும் கவிஞர்களும் உண்டு. அதேவேளை—அவற்றைப் படிக்காமல் ஓசை நயத்தை மட்டும் கருத்தில் கொண்டு பாடல் வடிப்போரும் பல்கிவிட்டனர். இது பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : படித்தவன் தானே மேதையாக முடியும்— படிக்காத ஒருவன் மேதையாவதில்லையே. முறைப் படியான கவிதைகளைத்தான் நான் மதிக்கிறேன்; வரவேற்கிறேன்.

கேள்வி : கவிஞன் பிறப்பதாகக் கூறுகிறார்களே?

பதில் : அதெல்லாம் சும்மா. கருவில் திருவென்பதெல்லாம் கிடையாது. அதை நம்புவது மூடத்தனத்தில் ஒன்று!

கேள்வி : புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றிச் சொல்வீர்களா?

பதில் : எழுச்சிக் கவிதைகளை இயற்றியவர் கவிஞர் பாரதிதாசன். தமிழ் உலகில் சாதாரண மக்களும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்குப் பாடல் இயற்றியவர் பாரதிதாசன்.

கேள்வி : தற்போதைய தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் ஆட்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : நல்லபடியே ஆள்கிறார். இவர் வந்த பிறகு கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் சிறப்பு என்று தான் சொல்ல வேண்டும்.

கேள்வி : முன்னாள் முதல்வரின் தமிழ்ப்புலமை-அரசியல் ஆற்றலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : அவரின் தமிழ்ப்புலமையும் அரசியல் ஆற்றலும் பாராட்டப்பட வேண்டிய அம்சங்களே. கலைஞர் ஒரு சிறந்த மனிதர். தமிழ்நாட்டுக்குத் தமிழர்க்குக் கிடைக்கப்பெற்றது அருமை.

சுரதாவைச் சந்தித்தவர் : பழ. எ. அன்பழகன்

இதழ் : தமிழ் மலர். (கோலாலம்பூர், மலேசியா) 3-6-1979

## சுரதாவிடம் சில கேள்விகள்

கேள்வி : கவிதைத் துறைதான் தங்களை இலக்கிய உலகிற்கு ஈர்த்ததா?

பதில் : எந்தத் துறையும் என்னை ஈர்க்கவில்லை. எனக்கு அதெல்லாம் பிடிப்பதில்லை. ஆனால், சரிதான் என்று கருதுவதைவிட மற்றபடி எனக்கு ஈடுபாடு எதிலும் கிடையாது.

கேள்வி : இளமையில் தங்களின் இலக்கியப்பிரவேசத்திற்குக் காரணமாய் அமைந்தவர்கள் யார்?

பதில் : டீக்கடை அழகப்பன்தான் கவிதை எழுதுவதற்குக் காரணமாய் இருந்தார். அவர்தான் பாரதிதாச னுடைய பாடல்களையெல்லாம் படித்துக் காட்டி ஊக்குவித்தார். கிருஷ்ணமாச்சாரி என்பவரும் உதவியாக இருந்தார். அப்புறம் சுயமரியாதை இயக்கமும் உதவியாக இருந்தது.

கேள்வி : ஓர் இளங்கவிஞனாக அறிமுகமான தருவாயில் தங்களுக்கு ஆதர்சமாய்க் கொள்கைகளோ, இலட்சியங்களோ இருந்திருக்கலாம். இப்போது அவை வேடிக்கையாகவும் தோன்றலாம் அல்லது நீடித்தும் இருக்கலாம், அவை என்ன?

பதில் : நான் ரொம்பவும் தெளிவாகவே இருக்கிறேன். எனக்கு அந்தச் சுயமரியாதைக்கொள்கையேதான்...

கேள்வி : கவிதையைப் படைப்பதென்பது சூல்கொண்டு பிரசவிப்பது போல் வேதனையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய ஒன்றென்று, ஒப்பு நோக்கப்படுவதில் தங்களுக்கு ஏதேனும் மாறுபட்ட கருத்து உண்டா?

பதில் : இல்லை நான்தான் இதையும் சொல்லிக்கொண்டு வருகிறேன். மீதிப் பேரெல்லாம் அயோக்கியத்தன மாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நல்ல கவிதை என்பது ஆய்வுக்குப் பிறகு வரவேண்டிய ஒன்று. அவசரமாக வருகிற தென்றால், ரொம்பக் குறைந்த அறிவுடைய மக்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்று பொருள். அவனுக்கு அவனே மறுநாள் உயர்ந் திருக்க வேண்டுமல்லவா? மற்றவனுக்கு இன்றைய என் கவிதை சிறந்ததாய் இருக்கலாம். ஆனால் மறுநாள் எனக்கு நானே அறிவுள்ளவனாக இருக்கவேண்டும். இன்னும் சிறந்ததைப் படைக்க வேண்டுமென்றால் குறைந்த அறிவுள்ளவனுக்குக் கெட்டிக்காரனாயிருக்கிறதைவிட இன்னும் சிந்தனையை உயர்த்திக்கொள்ள வேண்டு மென்று பார்க்கையில், இது பிரசவ வேதனை தான். என்னைப் பொறுத்தவரையில், நான்தானே தமிழகத்தில் ரொம்ப நுட்பமா, நுணுகி மெதுவாய் எழுதுபவன். அந்த விதத்தையும் மாற்றிக் கொண்டேன். பிரெஞ்சு நாட்டில் 16-ம் நூற்றாண்டில் 'லரோஸ் புக்கோ' என்ற ஒருவன் இருந்தான். அவன்தான் நானறிந்த அளவில் எட்டு ஒன்பது தடவை தானெழுதிய கவிதையைத் திருத்தியிருக்கின்றான். கவிதையை எழுதிய உடனேயே ஆறு அல்லது ஏழு தடவை அடித்துத் திருத்தி எழுதுவானாம். நான்தான் இதைச் செய்திருக்கிறேன் என்று பார்த்தால், அவன்தான் முன்னோடி என்று எனக்குத் தெரிகிறது.

கேள்வி : கவிதைக்குத் தாங்கள் தரும் விளக்கம்?

பதில் : கவிதை... எளிமையாக இருப்பது... ஒழுங்காக இருப்பது...விட்டுப்போனதைச் சொல்லுவது...! வடிவத்தில் சரியாக வந்துவிடவேண்டும். அதில் சந்தேகமில்லை. அதில் மற்றவர்கள் சொல்லாததைச் சொல்ல வேண்டும். அல்லது ஒழுங்காகச் சொல்லிவிட்டுப் போய்விட வேண்டும். திறமையிருந்தால் கூடுதலாகச்சொல். அழகாய் இருந்தால் அடிக்கடி கண்ணாடி பார்த்துக்கொள். இல்லையெனில் எப்போதாவது ஒரு தடவை பார்த்துக்கொள்.

கேள்வி : எப்போதுமே கவிஞர்களுக்கு வாழ்க்கையில் அவர்களது முதற் காதல் இலக்கிய ரீதியாகச் சில பாதிப்புகளை ஏற்படுத்துவதுண்டு. தங்களின் முதற்காதல் வெற்றியா? தோல்வியா?

பதில் : ஒரு மாதிரி வெற்றி தோல்விதான். ஆமாம்! ஒரு பெண்ணை அழைத்து வந்தேன். அப்புறம் விட்டுவிட்டேன்.

கேள்வி : நிச்சயமாகக் கவிதை ஈடுபாடு தங்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலைத்தன்மையைப் பாதித்திருக்கலாம். இருந்தாலும் சோர்ந்து போகாமல் இன்னும் தங்கள் இலக்கியப் பயணத்தைத் தொடர உத்வேகம் அளிப்பது யார்? அல்லது எது?

பதில் : யாருமே கிடையாது.

கேள்வி : பாரதிதாசனுக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பு, அப்போது உருவாகிக் கொண்டிருந்த தங்களின் சமகாலக் கவிஞர்கள், இன்று

அவர்களில் யார் யார் எழுதிக் கொண்டிருக் கிறார்கள்? சற்று விரிவாகக் கூற முடியுமா?

பதில் : அதாவது, பாரதிதாசன் காலத்திலே... வாணி தாசன், முடியரசன், கம்பதாசன், இன்னொரு வர் ராஜவேலு என்னும் நாவரசு.

கம்பதாசன் செத்துப் போய்விட்டார். வாணி தாசனும் செத்துப்போய் விட்டார். சில பேருக்குத் தெளிவில்லை. நான் ஒருவன் மட்டும் ஒரு தினுசாய் இருக்கிறேன். இப்போது நன்றாக எழுதுபவர்களில், பொன்னி வளவன் நன்றாக எழுதுகிறார். வேழவேந்தன், வல்லம் வேங்கடபதி, மின்னூர் சீனிவாசன் போன்றவர்களும் நன்றாக எழுதுகிறார்கள்.

கேள்வி : பாரதிதாசன் அணியினரில் ஒருவராகத் தாங்கள் கருதப்பட்டாலும், மற்றவர்களைப் போல் முழுக்க முழுக்க அவரின் தாக்கத்தில் மூழ்காமல், உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் அளவுக்கோ அல்லது அதற்கும் மேலோ தங்களின் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டதாக நம்புகிறீர்களா?

பதில் : நான் அவர்களைவிடப் புத்திசாலியாக இருப்பதால் தெளிவாக இருக்கிறேன்.

கேள்வி : பொதுவாகவே கவிஞன் தன் காலத்திலோ அல்லது பிறகோ தனது கவித்துவத்தினால் மட்டுமே விரைவில் மக்களின் அங்கீகரிப்பைப் பெறுவதில்லை.

உதாரணத்திற்கு ... பாரதியைப் பொறுத்தவரை அவரது தேசிய விடுதலையைத் தூண்டும் பாடல் களும், தியாக வாழ்வுமே, முதலில் ஈர்க்கும்

சக்திகளாக அமைந்தன. பின்னர்தான் அவரது கவித்துவம் வருகிறது.

பாரதிதாசனுக்கு... திராவிடர் இயக்கமும், சீர் திருத்தமும், மொழியுணர்வும், போராட்டமும்...! கண்ணதாசனுக்கு ... பிரபலமாகத் திரைப்படத் துறையும், அரசியலும்... ஏன், தாகூருக்குக்கூட ஆங்கிலக் கவிஞர் ஒய். பி. ஈட்சும் அவருடைய பரிந்துரையும், நோபல் பரிசுக்குத் தேவையாயி ருந்தது. இக்கருத்தைத் தாங்கள் ஆமோதிக்கி றீர்களா? ஆட்சேபிக்கிறீர்களா?

பதில் : ஆமோதிக்கிறேன். ஒவ்வொருவனுக்கும் உந்துதல் இது போலத்தானே.

கேள்வி : இந்த உந்துதல்தான் கவிஞர்கள் பிரபலமடையக் காரணமென்று கருதுகிறீர்களா?

பதில் : இல்லையில்லை! ஒரு பெண் பருவமடைந்தால் தானே திருமணம் பண்ணுகிறான். எல்லாம் மனிதனை விளம்பரப்படுத்திக் கொள்வதுதானே. இப்ப அழகு...சவரம் பண்ணிக் கொள்வதே கொஞ்சம் மதிக்க வேண்டும் என்பதற்காகத் தானே! இப்படிச் சட்டைப் போட்டு, அழகாய்ப் பேனா வைத்துக் கொள்வதுகூட மதிக்க வேண்டு மென்பதற்காகத் தானே, இல்லையென்றால் வீட்டில் நிர்வாணமாக நிற்கலாமே.

கேள்வி : மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை கவிதை ரசனை என்பது, துரிதமான பொருளாதார, சமூகவியல் மாற்றங்களால் குன்றி வருவதாகவும், அவ்வளவாக வளர்ச்சியடையாத கிழக்கத்திய நாடுகளில்தான் கவிதை உயிர் வாழ்கிறது என்றும் கருதப்படுகிறது. தமிழகத்தைக் கவனத்தில் கொண்டால் இது எந்த அளவிற்கு உண்மை?

பதில் : பொருளாதார வளர்ச்சியில்லை எனும் போது தான் இலக்கியமே பரவும். பொருளாதார வளர்ச்சி யிருந்தால் இலக்கியம் குறைந்து போகும். நீங்கள் வணிகனாகி விட்டால்கூட, அதை எப்போதாவது வைத்துக் கொள்வீர்களேயன்றி, எப்போதும் வைத்துக்கொள்ள மாட்டீர்கள். பொருளாதாரக் குறைவு ஏற்படும் போதுதான் நமக்கு இலக்கிய உணர்வு அதிகமாயிருக்கிறது.

கேள்வி : இன்றைய தமிழகப் பின்னணிக்கு இது எப்படிப் பொருந்தி வருகிறது?

பதில் : இது பொருந்துமென்றால் இவர்கள் இன்னும் கவிதைகள்தான் எழுதிக்கொண்டிருக்கிறார்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேரு. இவர் களுக்கு மூலதனம் இல்லை. இப்ப எழுத்தாளன் யாரு? அதிகம் வழி இல்லாதவன் எழுத்தை நம்பி வர்றான், அதைவைத்துப் பிழைக்கலாமென்று. அவனிடமே ஒருலட்சமோ, ஐம்பதினாயிரமோ, இருந்தால் வரவே மாட்டானே. இந்நேரம் பதிப்பகம் வைச்சுடுவான். மேற்கத்திய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியால் பொழுதுபோக்குச் சாதனங்கள் பெருக, மனிதர்களின் சந்திப்புகள் குறைந்து விட்டன. ஒரு தனி மனிதனுக்கே முழு அறிவோ, நிரம்ப செல்வாக்கோ இருக்க வேண்டிய தில்லை. அது உடைந்து விடும். முழுப்புகழ் என்பதும் இனி இருக்க முடியாது ஒரு பிராந்தியம், மாவட்டம், மாநிலம், நாட்டுக்குத் தான் அவனைப் பற்றித் தெரியும். பலாப் பழத்தில் இருக்கின்ற ஒரு சுளையின் மதிப்புதான் அவனுக் குக் கிடைக்கும்.

முழுப் பழத்தின் மதிப்பு கிடைக்காது; இனி அந்த நிலை வந்தால்தான் சமூக வளர்ச்சி என்று அர்த்

தம். நீண்ட காலத்திற்கு ஒருவனை மதிப்பதென்பது சரியல்ல. மதித்தால் நாமேசெய்ய முடிந்த ஒன்றை, அவனிடம் ஒப்படைத்து விட்டோம் என்று அர்த்தமல்லவா?

கேள்வி : சக்திமிக்க எந்தப் படைப்பாளனும் தனக்குப் பின், சிலரை நேரடியாகவோ, தனது படைப்புக்களின் வாயிலாகவோ உருவாக்கியே தீருவான். இந்தக் கண்ணோட்டத்தில் நீங்கள் ஊக்கமூட்டியோ, வளர்த்தோவிட்ட இளங்கவிஞர்களைப் பற்றியும், அவர்களின் இன்றைய வளர்ச்சியையும் தெரிவிக்க இயலுமா?

பதில் : இன்று இருக்கிற அத்தனை பேரும் என்னைப் பின் பற்றி எழுதுபவர்கள் மட்டுமல்ல, எனது ஊக்கத்தாலும் வளர்ந்தவர்கள். இப்போது இருக்கும் வல்லம் வேங்கடபதி, மின்னூர் சீனிவாசன், எழில் முதல்வன், பொன்னி வளவன், வேழவேந்தன், காமராசன், அப்துல் ரகுமான், இன்குலாப், இன்னும் பலர்...நான் நடத்திய வராந்திரக் கவிதை ஏட்டில் எழுதி அறிமுகமானவர்கள் தாம்.

கேள்வி : தமிழ்க் கவிஞன் காதல், தமிழ், வீரம், பக்தி, முக்தி என்ற கருப்பொருள்களில் பாடுபவன் என்ற பொது அபிப்பிராயம் நிலவுகிறது. உங்கள் படைப்புகள் வழியாக இவற்றைநீக்கி, உங்களுக்கே உரிய, தனிப்பட்ட வாழ்க்கைநோக்கு எதையும்இது வரை உணர்த்தியிருப்பதாக நம்புகிறீர்களா? அல்லது இனிமேல் வெளிப்படுத்த வேண்டுமா?

பதில் : எப்பொழுதும் எனக்குப்பட்டதையே சொல்லியிருக்கிறேன். 'நான் ஒரு கவிஞன். அதைவிட நான் ஒரு நல்லவன் இந்த நாட்டிலே' என்று எழுதியிருக்கிறேன். அதைக் கூட 'துறைமுகம்'

நூலில் எழுதியிருக்கிறேன். என் உயிலையே கவிதையில் எழுதப் போகிறேன். நான் எப்படிச் சாவுறது? செத்தால் எதை என் மீது வைப்பது என்பதை எழுதப்போகிறேன். வேற எவனும் எழுதல, பயப்படுவான்! நான் தான், கவிதையில் அழுத்தமாக அபிப்பிராயங்களையே சொல்லிக் கொண்டு வருபவன்.

கேள்வி : நீங்கள் ஏன் எழுதுகிறீர்கள்?

பதில் : ஏன் உயிரோடு இருக்கிறீர்கள் என்று கேட்பது போல் இருக்கின்றது. அதாவது, மற்றவர்களிடம் சில விஷயங்களைச் சொல்லலாமென்ற, பயிற்சியும் பக்குவமும் இருப்பதாலும், நான் மிக நீண்ட காலத்துக்கு அதைச் சொல்ல முடியும் என்பதாலும் எழுதுகிறேன். இல்லாவிட்டால், நான் புதிதாகவோ, மாறுதலாகவோ, சொல்ல முடியாது என்று என்றைக்குக் கருதுகிறேனோ, அன்றைக்கு நிறுத்திவிடுவேன்.

கேள்வி : புதுக்கவிதை; மரபுக்கவிதை; தங்கள் பார்வை...?

பதில் : புதுக்கவிதை பொன்கட்டிப் போன்றது. மரபுக் கவிதை வளையல் போன்றது. புதுக்கவிதை சிந்தனைக்கும் கருத்துக்கும் உள்ளது. கருத்துக்கு மட்டுமே புதுக்கவிதை வடிவம். மரபுக்கவிதை, அமைப்புக்கும் கருத்துக்கும் உள்ள வடிவம், அமைப்புக்கு வரும்போது கொஞ்சம் செயற்கையாய் வரும்.

கேள்வி : மரபுக்கவிதைகள் எழுதி, தற்போது புதுக் கவிதைத் துறைக்கு வந்திருக்கும் சிற்பி, மீரா, புவியரசு, காமராசன், இன்குலாப், மேத்தா போன்றோர்க்கும், யாப்புக் கவிதை படைக்கும் உணர்வு நிலை அனுபவமற்று, ஆங்கிலக்

கவிதைப் பரிச்சயமும், வெறும் அறிவு ஜீவித்தனமும் மட்டுமே கொண்டு கவிதை படைக்கும் (அன்றைய 'எழுத்து' இன்றைய 'கணையாழி') குழுவினருக்கும் என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?

பதில் : யாப்பனுவமுடையவன்தான் நிற்பான். அவனிடம் சில வடிவங்கள் இருக்கும், உணர்த்தும் முறையும் நம் மொழிக்கு ஏற்புடையதாய் அமையும். நம் பிச்சமூர்த்தி கூட யாப்போடு எழுதக்கூடியவர்தான். யாப்பில் சொன்னால் கொஞ்சம் கஷ்டமாய் இருக்கிறதே என்று இப்படிச் சொல்கிறார்கள். அதில் ஒன்றுமில்லை... சும்மா போயிட்டுப் போயிட்டு வர்றாங்க, அவ்வளவுதான்.

சுரதாவைச் சந்தித்தவர் : க. இளங்கோவன்

இதழ் : வானம்பாடி, (கோலாலம்பூர் மலேசியா) 21-7-1979

# கருணாநிதி மலேசியாவில் பிறந்திருந்தால்...

## டெலிவிஷனில் பேட்டி

"எனக்கு எந்தவிதக் கொள்கையும் இல்லை; பெரிய சாதனைகளைச் செய்யவேண்டும் என்ற திட்டமும் இல்லை" என்று தெரிவித்தபோது, "அப்படியானால் ஏன் எழுதுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"உயிர் இருப்பதால் மூச்சு விடுகிறேன். எழுதத் தெரிகிறது, எழுதுகிறேன்" என்று பதிலளித்தேன்.

தமிழ்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு இங்கே இருப்பதைவிடப்பல மடங்கு செல்வாக்கு அங்கே இருக்கிறது. இளைஞர்களிடம் தி. மு. க. சிந்தனையைத் தவிர பெரும்பாலும் வேறு சிந்தனை இல்லை.

கருணாநிதி மட்டும் மலேசிய நாட்டில் பிறந்திருந் தால் அந்த நாட்டுப் பிரதமராகவே ஆகியிருப்பார். அந்த அளவுக்கு இளைஞர்களிடம் அவர் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

அங்கே நல்ல தமிழார்வம் இருக்கிறது. 'ஜலசந்தி' என்பதை 'நீர் இணை' என்று மொழிமாற்றம் செய்திருக் கிறார்கள்.

சிறுகதை, கவிதை, நாவல் அதிகம் எழுதுகிறார்கள். எழுத்துத் துறையில் பெண்கள் அதிகமாக ஈடுபடு கிறார்கள்.

நான்தான் சுயமரியாதைக்காரனாகப் போய் சுய மரியாதைக்காரனாகத் திரும்பியிருக்கிறேன்.

என்னைப் பாராட்டிப் போர்த்தப்பட்ட சால்வைகள், பொன்னாடைகளைக்கூட எடுத்து வரவில்லை. பரிசுப் பொருள்களையும் அங்கேயே கொடுத்துவிட்டு வந்து விட்டேன்.

சுரதாவைச் சந்தித்தவர் : கிரிஜா
இதழ் : குங்குமம், 21-10-1979

## ஒரு பாடலை ஒருவரே எழுதுவது நியாயம் அல்ல!

சினிமாவில் பாட்டு எழுதுவதற்குப் பெண்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

சிந்தனை ஒரு சாதிக்குச் சொந்தமா? ஒரு ஊருக்குச் சொத்தா?

1931-ல் ஒரு படத்திற்கு ஒருவரே பாடல்கள் எழுதினார்.

பின் 1940-க்கும் 1950 க்கும் இடையில் ஒரு படத்திற்கு இருவர், மூவர் என்ற நிலை உருவாயிற்று.

பக்திப் பாடல் என்றால் பாபநாசம் சிவனையும், புதுமைப் பாடல் என்றால் கம்பதாசனையும், நகைச் சுவைப் பாடல் என்றால் உடுமலை நாராயண கவியையும் எழுதச் சொன்னார்கள்.

என்னைக் கேட்டால், ஒரு பாடலையே இருவர் மூவர் எழுதலாம்.

இது எப்படிச் சாத்தியப்படும் என்பீர்கள்? சாத்தியப் படும்!

ஒரு கவிஞனுக்குப் பல்லவி அழகாக வரும்; இன்னொரு கவிஞனுக்குச் சரணம் அற்புதமாக வரும்.

அப்போது, கவிஞர்களுக்கு வாய்ப்பு மட்டும் பெருக வில்லை. நல்ல பாடலும் மக்களுக்குக் கிடைக்கிறது.

வீட்டுக்குத் தேவையான பொருள்களை நாம் ஒரே கடையிலேயா வாங்குகிறோம்?

அரிசி ஓர் இடம், காய் ஓரிடம், கறி ஓரிடம், நாற்காலி ஓரிடம், பேனா ஓரிடம், மின்விசிறி ஓரிடம் இப்படித்தானே வாங்குகிறோம்!

நான் சொல்வது ஒன்றும் புதியதும் இல்லை.

'வெண்பா இரட்டையர்' என்று இருவர் இருந்து, முதல் அடி இரண்டை ஒருவரும், முடிவடி இரண்டை மற்றொருவரும் இதே மண்ணில்தான் பாடி இருக்கிறார்கள்.

அவ்வளவு தூரம் ஏன்?

'அபலை அஞ்சுகம்' என்று ஒரு படம். அதில் ஒரு பாடல்,

'வெண்ணிலா குடைபிடிக்க
வெள்ளிமீன் தலையசைக்க
விழிவாசல் வழி வந்து
இதயம் பேசுது...'

என்ற பாடல் இன்னும் தொடரும். இந்தப் பல்லவியை மட்டுமே நான் எழுதினேன்.

சரணங்களை உடுமலை நாராயணகவி எழுதினார்.

இந்தப் பாடல் சரியாக அமையவில்லையா? இல்லை, மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையா?

கதாநாயகிகளையும், கதாநாயகர்களையும் கல்லூரி வாசல்களிலும், கடைவீதிகளிலும், கோயில் படிகளிலும், கடற்கரை ஓரமும் ஓடி, ஓடி தேடிக் கண்டு பிடிக்கின்ற தயாரிப்பாளர்கள்-இயக்குனர்கள் நல்ல கவிஞர்களையும் தேடிப் பிடித்தால் தேய்ந்தா போவார்கள்?

சுரதாவைச் சந்தித்தவர்: பாபநாசம் குறள்பித்தன்.
இதழ் : தாய், 7-3-82

# மேகத்தின் நிழல் பாலைவனத்தின் மேலே!

தலைப்புத் தரும் போட்டியில் 'மேகத்தின் நிழல் பாலைவனத்தின் மேலே என்று கூறிய சேலம் கல்லூரி மாணவர் வெற்றி பெற்றார். அவருக்குக் கவிஞர் சுரதா பரிசு வழங்கினார்.

**திருமண விழா**

சேலம் குஜராத்தி கல்யாண மண்டபத்தில் கலெக்டர் அலுவலக உதவியாளர் விட்டல்தாஸ் தங்கை சாந்திக்கும் கோவிந்தனுக்கும் திருமணம் நடந்தது. மாவட்ட தி க. தலைவர் க. சண்முகம் தலைமை தாங்கினார். உவமைக் கவிஞர் சுரதா முன்னிலை வகித்தார்.

தி.க. பொதுச் செயலாளர் வீரமணி, எஸ். சி. வெங்கடாசலம், வலங்கை விசு, கவிஞர் நாமக்கல் நாதன் வாழ்த்திப் பேசினார்கள்.

**தலைப்புப் போட்டி**

இந்த விழாவில் உவமைக் கவிஞர் சுரதா பார்வையாளர்களுக்குத் தலைப்புத் தரும் போட்டியை நடத்தினார்.

இதில் பெண்கள் உள்பட 60க்கும் மேற்பட்டவர்கள் தலைப்புகளை எழுதிக் கொடுத்தனர்.

இதில் 'மேகத்தின் நிழல் பாலைவனத்தின் மேலே' என்ற தலைப்பை சுரதா தேர்ந்து எடுத்தார்.

இந்தத்தலைப்பை எழுதியவர் சேலம் கல்லூரி மாணவர் ஏ. பி. சண்முகம். அவருக்குச் சுரதா ரூ. 25 பரிசு வழங்கினார்.

இது பற்றி கவிஞர் சுரதா மாலைமுரசு நிருபரிடம் கூறியதாவது:—

தமிழ் மக்களிடையே குறிப்பாக இளயதலைமுறையினருக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்டவே இது போன்ற தலைப்புத் தரும் போட்டிகளில் நான் கலந்து கொள்கிறேன். இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. கோவிலோ வீடோ அழகான வாயில் இருந்தால் தான் சிறப்புப் பெறுகிறது. அது போல கவிதைக்கும் அழகிய தலைப்பு அவசியம்.

தலைப்புப் போடும் ஆர்வம் வந்து விட்டால் கதை—கவிதை எழுதும் துடிப்புத் தானாகவே வந்து விடும்.

புதுக்கவிதையைப் போல இது போன்ற தலைப்புகளும் மக்கள் இதயங்களைக் கவரத்தான் போகிறது.

சுரதாவைச் சந்தித்தவர் : மாலை முரசு நிருபர்
இதழ்: சேலம், மாலை முரசு, 1-7-1983

## இந்தப் பழக்கம்
## இப்படித்தான் வந்தது!

கால் கட்டை விரல் இடுக்கில் வைத்திருந்த எவர்சில்வர் பொடி டப்பியில் இருந்து எடுத்து பொடி போட்ட கவிஞர் சுரதா அவர்களிடம் கேட்டேன்:

"இந்தப் 'டப்பி' உங்க கைக்கு வந்து எத்தனை காலம் இருக்கும்?"

"இந்த பொடி டப்பி என் கைக்கு வந்து பதினைந்து ஆண்டாகிறது. பொடி போடும் பழக்கம் வந்து கால் நூற்றாண்டிற்கும் மேலாகி விட்டது.

உடற் சோர்வாக இருந்த போது பிறரிடம் ஓசியில் போட ஆரம்பித்தேன். அப்போது சிட்டிகையாகத் தொடர்ந்தது, இப்போது டப்பாவாகி விட்டது.

சுரதாவைச் சந்தித்தவர் : பாபநாசம் குறள் பித்தன்
இதழ் : தாய், 10-7-1983

## சுரதாவின் பொடி விஷயம்!

இரண்டாவது கம்பன் எனப் போற்றப்பட்ட மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சமயப் பாடல்களைச் சாராதவன், நான். எதையும் யாரையும் பார்த்துப் பின்பற்றாத நான், அவரைப் பொடி போடும் பழக்கத்தில் பின்பற்றியவன்.

சுரதாவைச் சந்தித்தவர் : பாகுபி
இதழ் : தேவி, 27-7-1983

# அந்த ஒரு நிகழ்ச்சி!

**சுரதா:**

எனது ஊரான பழையனூரில் திருவிழா காலங்களில் கோலாட்டம் ஆடும் பழக்கம் உண்டு. தேசிங்கு என்பவர் எங்கள் எல்லோருக்கும் ஆசிரியராக இருந்து கோலாட்டத்தின் பொழுது பாடிக் கொண்டே கோலட்டம் போட எங்களுக்குக் கற்றுத்தருவார். இன்று அவர் இருந்து, நாட்டுப்பாடல்கள் தொகுப்பதாகவோ, திறனாய்வு செய்பவராகவோ இருந்திருந்தால் அவரை விழ்த்தி விட எவராலும் முடியாது. அந்த அளவுக்குத் திறமை பெற்ற அவர் என்னையும் ஏதாகிலும் பாடச் சொல்லுவார். என் பாடல்களுக்குத் தூண்டுதல் ஏற்படுத்தியவர் அவர்தான்.

பெரியார் தலைமையில் விதவை ஒருவரைத் திருமணம் செய்து கொண்ட சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த டீக்கடை அழகப்பன் என்பவர் பாரதிதாசன் பாடல்களை யெல்லாம் பாடுவார். 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்' எனும் பாட்டை, "தம்பி நான் பாடும் பாட்டைக் கேள்" என்று டீயை ஆற்றிக் கொண்டே பாடுவார். அதை நான் கேட்டதும் நாமும் இதைப் போல் பாடல்கள் எழுத வேண்டும், இத்தகைய வடிவங்களில் பாடல் எழுத வேண்டும் என எண்ணினேன்.

மனிதன் மட்டுமே உலகம் இல்லை. அவனுக்காக மட்டுமே கவிதை எழுத வேண்டும் என்பது இல்லை. உலகத்தில் வாழுகின்ற ஜீவராசிகள் எல்லாவற்றுக்காகவும் கவிதை எழுத வேண்டும். எனவே சமுதாயத்துக்காக எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை, எனக்கு எந்த கொள்கையும் இல்லை; இருக்க வேண்டும் என்ற எண்ணமும் என்னிடம் இல்லை.

என்னைத் திசை திருப்பிடக் காரணமாக இருந்தவர் அழகப்பன்தான். பழையனூர் டீக்கடையில் இருந்து பாண்டிச்சேரிக்கு அவர் சுட்டிக் காட்டியதால்தான் நான் பகுத்தறிவு வாதியானேன்.

இனி நான் பங்கெடுக்கும் கவியரங்குகளில் அந்தச் சுட்டு விரலுக்குத்தான் முதல் வணக்கம் செலுத்துவேன். மொழி வணக்கம் இரண்டாவதுதான்.

*சுரதாவைச் சந்தித்தவர் : பாரதிசுகுமாரன்*
*இதழ் : மூக்குத்தி, 12-8-1983*

# இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று நீங்கள் எப்படி?

'மங்கையர்க்கரசி' படம் எடுத்துக் கொண்டு இருந்த நேரம் அது. ஏகப்பட்ட பணம் செலவு ஆகியும் படம் முடியாத நிலையில் இருந்தது.

படம் எடுப்பவர், தொழில் நுட்பக் கலைஞர்கள், கதை ஆசிரியர், பாடல் எழுதுபவர் எல்லாருமே அப்போது ஒன்றாகத் தங்கி இருப்பார்கள். அப்படித்தான் எங்கள் நாற்பது பேர்களை அன்று புரசைவாக்கத்தில் ஒரு வீடு எடுத்து அதிலேயே கம்பெனியையும் வைத்திருந்தார் தயாரிப்பாளர்.

படம் முடியாத நிலையில் மிகவும் கடன்பட்டு எங்கள் நாற்பது பேருக்கும் சோறு போட்டுக் கொண்டிருந்த நேரமது.

அன்று எவ்வளவோ முயன்றும் தயாரிப்பாளரால் பணம் புரட்ட முடியவில்லை. அன்று முழுதும் நாற்பது பேரும் பட்டினிதான்.

எதிர்கால இந்தியாவை நான் அன்றே கண்டவன்—கணித்தவன்.

சுரதாவைச் சந்தித்தவர் : பாபநாசம் குறள்பித்தன்
இதழ் : தாய், 21-8-1983

# கவிஞர் பார்வையில் அய்யா-அண்ணா

உலகத்து மனித வாழ்க்கைக்கு வேண்டிய கருத்து களைச் சொன்னவர் பெரியார் மட்டுமே. மற்றவர்கள் சில கருத்துகளைச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். மறந்து விட்டார்கள். ஆனால் எல்லாக் கருத்துகளையும் கூறியவர் பெரியார் மட்டுமே.

கடவுளை வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்ய எல்லோரும் முயன்ற போது 'கடவுள் இல்லாமல் சீர்திருத்தம் செய்தவர் பெரியார். காலத்தால் பிந்தியவராக இருந்தாலும் கருத்துகளால் எல்லோரையும் முந்தியவர்.

மற்றவர்களின் கருத்துகள் எல்லாம் இலக்கிய நயமாக இருந்தது. அதனில் அவர்களின் அறிவுதான் இருந்தது. ஆனால், பெரியாரின் கருத்துகள் மற்றவர் களையெல்லாம் அறிவாளியாக்கியது.

மற்றவர்களின் கருத்துகள் ஒருவனின் முதுகை மட்டும் தடவிக் கொடுப்பது போல் இருந்தது. ஆனால் பெரியாரின் கருத்துகள் நெஞ்சைத் தைப்பதுபோல் இருந்தது. தைப்பில் துன்பம் இருக்கலாம். ஆனால் அதில் தான் மாற்றம் உண்டு.

மற்றவர்கள் எல்லோரும் அணையில் இருக்கும் தண்ணீரை வெளியில் திறந்து விட்டவர்கள். பெரியார் மட்டுமே மறைந்திருந்த நிலத்தடி நீரை வெளியில் கொண்டு வந்தவர்.

உலக வரலாற்றில் கிரேட் என்ற பெயர் பட்டியலில் பார்க்கும் பொழுது, பெரியார் (கிரேட்) என்ற பெயர் ஈ.வெ.ராவுக்கு மட்டும்தான் உண்டு. மற்றவர்கள்

எல்லோரையும் பெயர்களைக் கூறித்தான் கிரேட் என்று அழைக்க வேண்டும்.

அரசியல் இலக்கியம் வளர்ந்தது— பேச்சுக் கலை வளர்ந்தது அண்ணாவினால் மட்டும்தான். அரசியல்வாதி களில் இவரை ஒரு ராமலிங்க அடிகள் என்றே கூறலாம்.

இளைஞர் சமுதாயம் வளரவேண்டி எல்லோரையும் வஞ்சகம் இல்லாமல் விளம்பரம் செய்தவர் அண்ணா. இத்தகைய எண்ணம், தான் மட்டுமே அறிவாளி என்று நினைத்துக் கொண்டு இருப்பவர்களிடம் வராது. தூய துறவிகளிடம் மட்டுமே தோன்றும்.

சுரதாவைச் சந்தித்தவர் : பாரதி சுகுமாரன்
இதழ் : வண்ணமயில், செப்டம்பர், 1983

# வெறும் வடிவம் மட்டுமே கவிதை ஆகிவிடாது

*வீரபாண்டியன் :* கவிதை எழுதவேண்டுமென்னும் ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?

*சுரதா :* பள்ளிக்கூடத்திலே இறைவணக்கம் பாடியதைக் கேட்டு, இன்னொருவர் பாட்டைப் பாடிக் கொண்டிருப்பதைவிட நாமே எழுதினால் என்ன என்னும் கேள்விதான் என்னைக் கவிதை எழுதத் தூண்டியது. அரசர் மடம் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதுதான் எனது முதல் கவிதை பிறந்தது.

*வீரபாண்டியன் :* உங்களுக்கு ஞானகுரு, ஆசான்... அப்படி என்று யாரையாவது வரித்துக் கொண்டிருக்கிறீர்களா?

*சுரதா :* நிரந்தரமாக யாரையும் குரு, தலைவன் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

*வீரபாண்டியன் :* கவிதைக்கு வடிவம் அவசியம் என்று நினைக்கிறீர்களா? புதுக்கவிதைச் சிந்தனைகளை மரபிலேயே கொடுக்கலாமே என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்களே?

*சுரதா :* முறுக்கு பார்ப்பதற்கு அழகாக இல்லையென்றாலும் தின்பதற்குச் சுவையாக இருந்தால் சரி. வடிவத்திலே அழகு இருந்தால் கவிதை மனசிலே நிற்கும் என்பது உண்மைதான். ஆனால் வெறும் வடிவம் மட்டுமே கவிதை ஆகிவிடாது. மரபுக் கவிஞர்கள் பெரும்பாலோர்

வெறும் வடிவத்தை மட்டுமே பிடித்துக் கொண்டு தொங்குகிறார்கள். சிந்தனை இல்லை. வடிவத்தையும், சிந்தனையையும் சேர்த்துக் கொடுக்க எல்லோராலும் முடியாது. அந்த வகையில் நான் தான் என்று எல்லோரும் சொல்வார்கள்.

வீரபாண்டியன் : தமிழ்க் கவிதை உலகத்தைப் பாரதி, பாரதிதாசன் என்று வரிசைப்படுத்துவதில், பாரதிதாசனுக்கு அடுத்த தலை முறை என்று யாரைக் குறிப்பிடலாம்?

சுரதா : என்னுடைய தலைமுறை என்று எல்லோரும் சொல்வார்கள். என்னைப் பின்பற்றி நிறையப் பேர் வந்திருக்கிறார்களே...

வீரபாண்டியன் : இன்றைய தமிழ்க் கவிதை வளர்ந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

சுரதா : இளைஞர்கள் நன்றாகச் சிந்திருக்கிறார்கள். புதுக்கவிதை வீரர்களின் எண்ண அலைகள் அற்புதமாய் இருக்கின்றன.

வீரபாண்டியன் : நடிகைகளைப் பற்றிய ஒரு புத்தகம் எழுதியிருக்கிறீர்களே... இது தேவைதானா?

சுரதா : ஒரு காலத்திலே கடவுளைப் பற்றிப் பாடினான். அப்புறம் அரசர்களைப் புகழ்ந்தான். அதிகாரிகளைப் பாடினான். இப்போது அரசியல்வாதிகளைப் பிடித்துக்கொண்டான். நடிகைகளை நான் பாடியிருக்கிறேன். இதிலென்ன தப்பு? காலத்துக்குக் காலம் கவிஞனின் பாடுபொருள் மாறிக்கொண்டே வருகிறது. மாறத்தான் வேண்டும். வெறுமனே தீபாவளிக்கு, பொங்கலுக்கு விளக்கம் எழுதிக் கொண்டிருந்தால் எப்படி? சமுதாயத்திலே உள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் கவிதை எழுதப்படலாம்.

*வீரபாண்டியன் :* சம காலத்திய இளையஎழுத்தாளர்களில் நம்பிக்கைக்குரிய கவிஞர்கள் என்று யார், யாரை நீங்கள் குறிப்பிட முடியும்?

*சுரதா :* வைரமுத்து நன்றாக எழுதுகிறார். மேத்தா, அறிவுமணி போல நிறையப் பேர் சாதித்துக் கொண்டு வருகிறார்கள்.

*வீரபாண்டியன் :* சமீபத்தில் நீங்கள் ஏதோ அரசியல் கட்சியிலே சேர்ந்துவிட்டீர்கள் என்று பேச்சு அடிபட்டதே...?

*சுரதா :* எந்த அரசியல் கட்சியிலேயும் நான் உறுப்பினர் இல்லை. எல்லாக் கட்சிகளிலும் எனக்கு வேண்டிய வர்கள் இருக்கிறார்கள். நட்பு முறையிலே நான் எங்கேயாவது போனால் அந்தக் கட்சியிலே நான் சேர்ந்துவிட்டேன் என்று அர்த்தமில்லை.

சுரதாவைச் சந்தித்தவர் : கவிஞர் தி. வீரபாண்டியன்
இதழ் : வரலாற்றின் குரல், மார்ச்சு, 1985

# சர்க்கரைப் பொங்கலை வெட்டும் இளங்கோவன்!

கவிஞர்கள் பொதுவாக சாமானிய மனிதர்களிடமிருந்து மாறுபட்டே துலங்குவார்கள்; கவிஞர் சுரதாவோ கவிஞர்களிடையேயும் கொஞ்சம் வேறுபட்ட அதிசய மனிதர்.

தன் பேரக்குழந்தையின் முதலாம் ஆண்டு பிறந்த நாளில் அவனைப் பற்றிக் கவிதை நூல் வெளியிட்டு கொண்டாடி 'கேக்' வெட்டுவதற்குப் பதில் சர்க்கரை பொங்கலை, சாப்பிடும் கரண்டியால் வெட்டச் சொல்லப் போகிறாராம்!

இந்த மாறுபட்ட பிறந்த நாள் பற்றிக் கேட்டதற்குச் சுரதா சொன்னார்:

'பிறந்தாய்' என்பதற்குத்தான் விழா—தகுதியை பெருக்கிக் கொள்ள, செல்வாக்கு ஏற்பட, தாழ்வு மனப் பான்மையை ஒழிக்க என் பேரனுக்குப் பிறந்த நாள் கொண்டாடி கவிதை நூல் வெளியிடவிருக்கிறேன்.

எனது தகப்பனார் திருவேங்கடம் கவிதை எழுதினார். எனது மகன் கல்லாடன் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறான். என் பேரனும் பின்னாளில் எழுதலாம். அதனால் இளங்கோவடிகளை மனத்தில்வைத்து அவனுக்கு 'இளங்கோவன்' என்று பெயர் சூட்டினேன். அவனுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவதன் மூலம் அவனும் தன் தகுதியை வளர்த்துக் கொள்வான்.

கவிதை நூலில் இளங்கோவன் 6-9-84-ல் பிறந்ததிலிருந்து ஒரு வயது முடியும்வரை அவனைப்பற்றி எழுதுகிறேன் காரைக்கால் அருகில் திருமலைராயன் பட்டினம் என்ற ஊரில் அதிகாலை 4.35-க்குப்பிறந்தான் என் பேரன். அங்கிருந்து சென்னைக்கு என் வீட்டிற்கு வந்தான். இரண்டு மாதம் பால் குடித்தான். பின்னர் கேழ்வரகுக் கஞ்சி, ரொட்டி கொடுத்து வருகிறோம்.

அவன் பேசிய முதல்வார்த்தையே 'என்ன?' என்பது தான். யாரைப்பார்த்தாலும்'என்ன?'என்ற வார்த்தைதான் அடிக்கடி அவன் நாவில் வருகிறது. அம்மா, அப்பா என்கிறான். நான் என் மனைவியை பாப்பா என்று அழைப்பதைக் கண்டு பாட்டியை அவனும் 'பாப்பா' என்கிறான்.

அலங்காரப் பொருட்கள், சிங்கம் போன்ற சிறிய சிற்பங்களை நீட்டி எடுத்துப் பார்க்கிறான். பார்த்துவிட்டு பத்திரமாக வைத்து விடுகிறான். எதற்காகவும் அடம் பிடிப்பதில்லை ஒன்பதாம் மாதத்திலிருந்து நடக்கிறான். என் அறைக்குள் போனால் முதலில் புத்தகங்களைத்தான் எடுக்கிறான். பக்கங்களைப் புரட்டிப் பார்த்து விட்டு வைத்து விடுகிறான். தாத்தாவான என்னை 'என்ன' என்றுதான் அழைக்கிறான்.

என் மகன் கல்லாடனின் ஐந்தாவது வயதில் அவனைப் பற்றி 'தேன்மழை' என்ற கவிதை நூலில் சில வரிகள் எழுதினேன். அவன் 'புற நானூறு' என்பதை 'புயநானூறு' என்று மழலையாகப் பேசினான். அது வேடிக்கையாக இருந்தாலும் 'புயம்' என்பது வீரத்தை விளக்குவது. அதனால் 'புயநானூறு' என்பதே சரியாக இருக்கும், என்று அவன் சொன்னது குறித்து 'தேன்மழை' கவிதை நூலில் எழுதினேன் – அந்த நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

எனது பேரனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதுடன், அமைச்சர்கள் கலந்து கொள்ள, அவனுக்கு கவிதை நூல் வெளியிடுவதுடன், அவனது பெயரால் தனித் தமிழில் பெயர் சூட்டப்பட்டுள்ள ஆண், பெண் குழந்தைகளுக்குப் பரிசு கொடுக்கலாமென்றிருக்கிறேன்.

சுரதாவைச் சந்தித்தவர்கள் : எஸ். விஜயன்,
ஞானதங்க பாரதி
இதழ் : தேவி, 21-8-1985

# விளம்பர வெளிச்சம்

நம் மக்கள் பெரும்பாலும் விளம்பர வெளிச்சத்தில் மின்னுகிறவர்களையே பெரியவர்கள்—திறமையானவர்கள்-அறிஞர்கள் என்று எண்ணி மயங்குகிறார்கள். அவர்களை விமரிசனம் செய்வதே பாவம் என்று கருதுகிறார்கள். இந்த நம்பிக்கையை உடைக்க வேண்டும் என்பதற்காகவே 'முன்னும் பின்னும்' என்று ஒரு நூலினை எழுதி வருகிறேன். இது தனிநபர் துதிகளை மட்டுப்படுத்தும்.

நான் பாரதிதாசனைப் பெரிதும் மதிக்கிறவன்தான்... ஆனால், அவரைவிட முற்போக்கானவர்கள்- சீர்த்திருத்த வாதிகள் அவருக்கு முன்பே இருந்திருக்கிறார்கள் என்று சொல்வதே தவறாகி விடாது.

பாரதிதாசன் ஆரம்பகாலத்தில் ஆஸ்திகவாதியாக இருந்தார். அவர் வெளியிட்ட முதல் நூலே 'மயிலம் சுப்ரமணிய துதியமுது' என்பதுதான். பல ஆண்டுகளுக்குப் பின்னால்தான் பகுத்தறிவு வெளிச்சம் அவருக்குக் கிடைக்கிறது. ஆனால், அவருக்கு முன்பே பாஸ்கரதாஸ் (வெள்ளைச்சாமி தேவர்) என்ற சினிமாப் பாடலாசிரியர் முற்போக்குச் சிந்தனை மிக்கவராக இருந்திருக்கிறார். 1921—ம் ஆண்டே, 'இந்து தேசாபிமானிகள் செந்தமிழ் திலகம்' என்ற தேசிய விடுதலைப் போராட்ட நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஆனால், சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்தச் சிந்தனையே இல்லாது சுப்ரமணிய துதி பாடிக் கொண்டிருந்த பாரதிதாசன் புரட்சிக் கவிஞராகக் கருதப்படுகிறார். இவரைவிடவும் காலத்தை முன்னுணர்ந்து புதிய புதிய சிந்தனைகள் தந்தவர்களை காலமும்—மக்களும் மறந்து விடுகிறார்கள். இந்தப் போக்கு ஒரு மனிதனைத் துதிபாடும் மூடநம்பிக்கைக்கு இட்டுச்

செல்கிறது... இவன் ஒருவனே இந்தச் சாதனைக்குக் காரணம் என்ற ஒரு தவறான பிரமை உருவாக வழி வகுத்து விடுகிறது.

இன்றைய கவிஞர்கள் புதுமை என்ற பேரில் சொல்கிற கருத்துகள் எல்லாம் பழைமையானவையே!

'தரிசனம் கிடைக்காதா...'

என்மேல் கரிசனம் கிடையாதா...' என்று வைரமுத்து 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் ஒரு பாடல் எழுதி உள்ளார். 1938—ம் ஆண்டு 'சிந்தாமணி' திரைப்படத்திற்காக பாபநாசம் சிவன் எழுதிய, 'கண்ணா நின் திவ்விய தரிசனம் தரலாகாதா...' என்ற பாடலின் தழுவலே இந்தப் பாடல்! அதே போல் 'அச்சமில்லை அச்சமில்லை' படத்தில் 'வானத்திலே ஒரு கல். அது என்ன கல்? வெற்றிலையிலே ஒரு கல்...' என்று ஒரு பாடல் வரி.... இது தமிழ்ப் பண்டிதர் கே. ஜே. வேதமுத்து தொகுத்த 'விடுகதைப் புதையல்' என்ற நூலில் உள்ளது— இப்படி இன்றைய கவிஞர்கள் எடுத்தாண்டே பெயர் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், இவர்களுக்கும் முன்பே இதே கருத்தைச் சொன்னவர்களை இவர்களுக்குக் கிடைக்கும் விளம்பர வெளிச்சம் மறைத்துவிடுகிறது. இப்படி இவர்கள் சொல்கிற புதுமைகளெல்லாம் புதுமையும் அல்ல; இந்தப் புதுமைகள் காலவெள்ளத்தை எதிர்த்து நின்று வெற்றி பெறுகிற சக்திமிக்கதும் அல்ல.

சுரதாவைச் சந்தித்தவர் : மா. முருகன்
இதழ் : இதயம் பேசுகிறது,
ஏப்ரல் 27—மே 3, 1986

## நான் இறந்த பின்?

தஞ்சை மாவட்டம் பழையனூரைச் சேர்ந்தவர் ஆர். டி. ராஜகோபாலன். கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் மீது இவருக்கு ஏற்பட்டிருந்த நாட்டம் காரணமாகவே, பாரதிதாசனின் உண்மைப் பெயரான சுப்புரத்தினம் என்பதுடன் 'சுப்புரத்தினதாசன்' ஆனார். கவிஞரான போது ராஜகோபாலன் 'சுரதா'வாகி விட்டார்!

சுரதாவின் தந்தை திருவேங்கடம் கவிதையில் நாட்டமுள்ளவர். அது மகனையும் பிடித்தது. தாயார் செண்பகம் அம்மையாருக்குப் புரியும் வண்ணம் பாடல் களை எழுதி, தன் கவிதைத் திறனை வளர்த்துக் கொண் டிருக்கிறார்—கவிஞர் சுரதா.

இதுவரை 310 கவிஞர்கள் சினிமாவுக்குப் பாடல் எழுதி யிருக்கிறார்கள் என்ற புள்ளி விபரத்தைப் பேணி வைத் திருக்கும் சுரதா, திரைப்படப் பாடல்களில் இலக்கிய நயத்தைக் கொண்டு வந்த பெருமைக்குரியவர்.

பொதுவாக சினிமாப் பாடல்களில் இலக்கியம் என்பது 'சின்ன வீடு' போல் ஆகிவிட்டதாக இவருக்கு வருத்தம் உண்டு.

1951-ல் வெளியான (எம். ஜி. ஆர். நடித்த) 'என் தங்கை' படத்தில் இடம் பெற்ற "ஆடும் ஊஞ்சலைப் போலவே அலை ஆடுதே"—என்ற பாடல்தான் கவிஞர் சுரதாவால் சினிமாவுக்காக எழுதப்பட்ட முதல் பாடல்.

"அப்போதெல்லாம் வரும் பாடல் வரிகளுக்குத் தகுந்தாற்போல் ஸ்டுடியோக்களில் செட்போட்டு படமாக்கு வது தான் வழக்கம். நான் தயாரிப்பாளரிடம் வழக்கத்தை

மாற்றுங்கள் என்று சொல்லி, சாந்தோம் பீச்சில் படமாக்கும்படிச் செய்தேன்.

“முதன் முதலாக அவுட்டோரில் படமாக்கப்பட்ட பாடல் அதுதான்” என்றார் சுரதா.

சுரதா எழுதிய பாடல்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாகப் புகழ் பெற்றவை: ‘நாடோடி மன்னன்’ படத்தில் வரும், “கண்ணில் வந்து மின்னல் போல்” என்ற பாடலும், ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ படத்தில் இடம் பெற்ற, “அமுதும் தேனும் எதற்கு,” என்ற பாடலும், ‘நீர்க்குமிழி’ படத்தில் “ஆடி அடங்கும் வாழ்க்கையடா” என்ற பாடலும், ‘மறக்க முடியுமா?’ படத்தில் “வசந்த காலம் வருமோ?” என்ற பாடலும், ‘நேற்று இன்று நாளை’ யில் வரும், “நெருங்கி நெருங்கிப் பழகும்போது” போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

சினிமாவுக்காகச் சுமார் அறுபது பாடல்கள் எழுதியிருக்கும் சுரதா, சினிமாவில் அவர் இலக்கிய நயத்தை எப்படிப் புகுத்தினார் என்பதற்கு ஓர் உதாரணம் காட்டினார்:

“‘நாடோடி மன்னன்’ படத்திற்காக நான் எழுதிய “கண்ணில் வந்து மின்னல் போல்” என்ற பாடலில், “மின்னல் கண்டு தாழை மலர்வது போல” என்ற வரிகளைப் படித்து எம். ஜி. ஆர். “மின்னல் கண்டு தாழம்பூ மலர்வதா? அது எப்படி சாத்தியம்?” என்று கேட்டார்.

“நான் அதற்குக் குறுந்தொகையில் உள்ள பாடல் ஒன்றிலிருந்து ஆதாரம் காட்டினேன். எம். ஜி. ஆர். உட்பட எல்லோரும் அது கண்டு வியந்தார்கள். ஏனென்றால் அதற்கு முன் சங்க இலக்கியங்களிலிருந்து யாரும் மேற்கோள் எடுத்ததில்லை.”

'திரைப்படப் பாடல்களின் முன்னும் பின்னும்' என்ற தலைப்பில் சுரதா கவிதை நூல் ஒன்றினைத் தொகுத்து வருகிறார்.

1977-ல் தொடங்கிய பணியை இப்போதுதான் முடித்திருக்கிறார்.

இந்த நூலில் எந்தெந்தப் பாடலாசிரியர், தாங்கள் எழுதிய பாடல்களில், பிற கவிஞர்களின் கருத்துகளை எங்கே கையாண்டு இருக்கிறார்கள் என்பதையும் சுரதா ஆதாரத்துடன் தொகுத்திருக்கிறாராம். அதில் தன்னையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்!

1953-ல் 'உதட்டோடு உதடு' என்ற சுரதாவின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட நாவலாசிரியர் ஜெகசிற்பியன், அவருக்கு 'உவமைக் கவிஞர்' என்று பட்டம் சூட்டினார். 1982-ல் சுரதாவின் மணிவிழா நடந்தது.

சுரதாவின் ஒரே மகன் கல்லாடனும் ஒரு பத்திரிகையாளர். அவரும் கவிதைகள் எழுதுகிறார். கவியரங்கங்களில் பாடுகிறார்.

சுரதாவின் இன்றைய பணி, ஆராய்ச்சி நூல் எழுதுவது, கல்லூரி மேடைகளில் பேசுவது.

சினிமாவின் இன்றைய பாடல்கள் பற்றி சுரதாவின் கருத்து இது :

"இன்றைய பாடல்களில் கருத்து அவசியமில்லை. திரைப்படப் பாடல்கள் சிற்றுண்டிபோல் இருக்க வேண்டும். முன்பு சமுதாயத்தைப் புரிய வைக்கப் பாடல்கள் தேவைப் பட்டன. பாடல்களில் கருத்துகளைத் திணிக்கக் கூடாது. வண்டியில் வைக்கோல் ஏற்றுவது போல் இப்போது பாடல்கள் எழுதப்படுகின்றன."

பிற கவிஞர்கள் எழுதியவற்றில் சுரதாவைக் கவர்ந்தது, 'பாலும் பழமும்' படத்தில் இடம் பெற்ற கவிஞர் கண்ணதாசனின், "பாலும் பழமும் கைகளில் ஏந்தி" என்ற பாடல்.

"பாட்டிலேயே படம் தெரிகிறது! கவிஞரின் எழுத்து வண்ணத்தை அதில் ரசித்தேன். பாட்டு எழுதுவது சுலபம். ஆனால் பாட்டினில் வடிவம் கொண்டு வருவது சிரமம்" என்கிறார் சுரதா.

சுரதாவின் விருப்பம் இது;

"நான் இறந்தபின் என் நினைவாக, முதல் பாடலாக "அமுதும் தேனும் எதற்கு?" என்ற பாடலையும், முடிவில் "ஆடி அடங்கும் வாழ்க்கையடா" என்ற பாடலையும் வானொலியல் ஒலிபரப்ப வேண்டும் "

சுரதாவைச் சந்தித்தவர் : எஸ். விஜயன்.
இதழ்: பேசும்படம், அக்டோபர், 1986

## பெண்களைப் பாட்டெழுத வைக்கக் கூடாதா?

சினிமாவிற்குள் நடிக்க, பாட பெண்கள் வரும்போது ஏன் பாட்டெழுத வரக்கூடாது? முன்பு மூன்று பேர்கள் வந்திருக்கிறார்கள். 1949-ல் வெளிவந்த கீதகாந்தி படத்தில் எஸ் வி. ரமணனின் தாயார் பட்டம்மாள் பாடல் எழுதியிருக்கிறார். பின் 'கற்கோட்டை' படத்தில் ராஜேஸ்வரி என்பவரும் மற்றும் ரோஷனா பேகம் என்பவரும் எழுதி இருக்கிறார்கள். பாட்டெழுதப் பெண்கள் வரவேண்டும் என்று தயாரிப்பாளர்கள் அறிக்கை விடவேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயம் வருவார்கள். ஆண்கள் மட்டுந்தான் எழுதக் கூடியது பாடல்கள் என்று நினைக்கிறார்களோ பெண்கள்? இதுவும் ஒரு மூடநம்பிக்கைதான்! வெளிவரும் ஒவ்வொரு படத்திலும் ஆண்களின் எண்ணிக்கைக்குச் சமமாகப் பெண்களும் பாடல் எழுதியிருக்கவேண்டும் என்று சட்டம் வரவேண்டும்.

பெண்களை எழுதவைப்பதில் சிரமம் இருக்கும் என்று சினிமாக்காரர்கள் சொன்னால் அது தவறு. நடிக்க வரும் பெண்களை மேக்கப் டெஸ்ட் செய்யவில்லையா? இதில் சிரமம் இருக்காதா...? மேக்கப் டெஸ்ட்டைப் போல் பாட்டு எழுத டெஸ்ட் வைக்கட்டுமே!

சுரதாவைச் சந்தித்தவர் : பு. வி. உமாசந்திரன்
இதழ் : தாய், 23-11-1986

## கவிஞர் சுரதாவின் எண்ண அலைகளில் முன்னும் பின்னும்

கவிஞர் சுரதாவை பாண்டிபஜார் பஸ் நிலையத்தில் தற்செயலாகச் சந்தித்தேன். தான் ஒரு பயனுள்ள ஆராய்ச்சி நூலைக் கடந்த பத்து ஆண்டுகளாக எழுத முயற்சி செய்து கொண்டிருந்த விஷயத்தைச் சொன்னார். அதன் தலைப்பு: முன்னும் பின்னும். 1931 முதல் 1987 வரை சினிமாவுக்குப் பாட்டெழுதிய கவிஞர்களைப் பற்றி ஆராய்ந்து அவர் சேகரித்துள்ள பயனுள்ள விவரங்களை எல்லாம் சொல்லிக் கொண்டே போனார். பஸ் எங்களுடைய செவிசாய்ப்புக்கு நேரம் ஒதுக்கித் தந்தது. (நன்றி)

''முதன் முதலாக 1931ல் வெளியான ''காளிதாஸ்'' படத்திற்குப் பாட்டமெழுதியவர்கள் இருவர். ஒருவர் டி.வி. நடராஜாச்சாரி. மற்றொருவர் பாஸ்கரதாஸ். முதல் சினிமாக் கவிஞர்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்துள்ளேன்.''

எனக்கு வியப்பு ஏற்பட்டது. ''அத்தனைக் கவிஞர்கள் பாட்டெழுதியிருக்கிறார்களா?'' என்றேன்.

''ஆமாம்! ஒரு பாட்டு எழுதியவரைக் கூட நான் விடவில்லை. 6 பெண்கள்கூட பாட்டெழுதியிருக்கிறார்கள்'' என்றார்.

''யார்... யார்? பெயர் சொல்லுங்கள்'' கேட்டேன்.

''முதன்முதலாகச் சினிமாவுக்குப் பாட்டு எழுதிய பெண்மணி. டைரக்டர் கே. சுப்பிரமணியத்தின் துணைவியாகிய மீனாட்சிசுப்பிரமணியம். இவருக்குப் பட்டம்மாள் என்கிற பெயரும் உண்டு. இவர் தன் கணவர்- டைரக்டர் கே. சுப்பிரமணியம் இயக்கித் தயாரித்த 'கீதகாந்தி'

படத்திற்குப் பாட்டெழுதியிருக்கிறார்...1949ம் ஆண்டாகும் அது.

அதற்குப் பிறகு "கற்கோட்டை" படத்திற்காக ராஜேஸ்வரி என்பவர் பாட்டெழுதினார். மூன்றாவதாக "குடியிருந்த கோயில்" படத்திற்காக ரோஷனாபேகம் என்கிற முகமதியப் பெண் "குங்குமப் பொட்டின் மங்கலம்" என்கிற பாட்டை எழுதினார். "சமர்ப்பணம்" படத்திற்காக ஜெயாரவியும், "மஞ்சள் முகமே வருக" படத்திற்காக லதா என்பவரும் "ருசி கண்ட பூனை" படத்திற்காக எஸ். ஜானகியும் பாட்டு எழுதியிருக்கிறார்கள்" என்றார்.

கவிஞர்கள் பற்றிய காலண்டர் ஒன்றையும் தொகுத்திருப்பதாகச் சொன்னார். எல்லாக் கவிஞர்களின் பிறந்த தேதிகளையும் இக்காலண்டர் குறிக்கும் என்றார். கவிஞர்களுள் பெரும்பாலோர் மே மாதத்தில் பிறந்திருப்பது தெரிந்தது.

குறிப்பில் பார்க்கும்போது இது சின்ன விஷயமாகத் தெரியும். காலஞ்சென்ற கவிஞர்களின் பிறந்த நாளைக் கண்டுபிடிக்க கால்கடுக்க அவர்களது உறவினர்கள் வீட்டிற்கு ஏறி இறங்கினேன். பலருடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டேன்.

இதை வைத்துக்கொண்டு சொல்ல வேண்டுமானால் சினிமாக் கவிஞர்களுக்குள்ளேயே வயதில் மூத்தவர் பரமக்குடி சிவராமலிங்க பிள்ளைதான். இவரது பிறந்த வருடம் 1876.

நமக்குத் தெரிந்த ஆஸ்தானக் கவிஞர்கள் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளையும்; கண்ணதாசனும், புலமைப்பித்தனும்தான். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக எட்டயபுரம் சமஸ்தானத்தில் 1941ல்ஆஸ்தானக் கவிஞராக இருந்த "மகாராஜ வாத்தியார்" என்பவர் பி.யு. சின்னப்பா

நடித்த "தயாளன்" படத்திற்குப் பாட்டெழுதி யுள்ளார். இவரை யாருக்கும் தெரியாது.

அந்த "தயாளன்" கதையை எழுதியவர் எட்டயபுரம் மகாராஜாவின் தம்பியாவார். அவர் தன் சமஸ்தானக் கவியைப் பாட்டெழுதச் சொல்லியிருக்கிறார். ஒரு இளவரசர் சினிமாவுக்குக் கதை எழுதியிருக்கும் விஷயமும் இந்த ஆராய்ச்சியின் மூலம் புரிந்தது.

படத்தில் கதாநாயகனாக நடித்துக் கொண்டே அப் படத்திற்குப் பாட்டு எழுதியவர் ஒருவர் இருக்கிறார்.

(இவர் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே அந்த பஸ் வந்து விட்டது. ஓடிப் பறந்து இருவரும் பஸ் ஏறி இடத்தைத் தேடினோம். ஒரு இடம்தான் கிடைத்தது. கவிஞரை உட்கார வைத்துவிட்டு நான் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றேன். பேச்சு தொடர்ந்தது).

"நான் என்ன சொன்னேன்... ம்... படத்தில் கதாநாயகனாக நடித்துக் கொண்டு பாட்டு எழுதியவர் பெயர் பி. டி. வி. கிருஷ்ணன். படத்தின் பெயர் மகாத்மா கபீர்தாஸ். 1936ல் வெளிவந்த படம்.

இப்ப நம்ம டி. ராஜேந்தர் மாதிரியே அந்தக் காலத்தி லேயும் அஷ்டாவதானியாக இன்னொரு கவிஞரும் இருந்திருக்கிறார். அவர் பெயர் அம்பாசமுத்திரம் ஏ. ரத்தினசபாபதி. இவர் ஒரு நாவல் ஆசிரியர், பேச்சாளர், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். "டேஞ்சர் சிக்னல்' என்கிற படத்தில் கதை, வசனம், பாடல்கள் எழுதியிருப்பதுடன் அதில் அவரே நடித்தும் படத்தை இயக்கியும் உள்ளார்.

"நடிகர்களுள்முதன் முதலாகப் பாட்டு எழுதியவர் யார் தெரியுமா?"

("யோவ்! யாரய்யா... கண்டக்டர் குரல் கொடுக்கறார். நானா நகருவேன்?)

"யார் என்று ஆவலோடு கேட்டேன்."

"எம். ஆர். சுவாமிநாதன் தான்! "சகுந்தலை" படத்தில் "காலையிலே எழுந்திருந்து கஞ்சி தண்ணீ இல்லாமலே கஷ்டப்படறேனே கடவுளே" என்ற பாட்டை இவரே எழுதிப் பாடியிருக்கிறார். அப்புறம் எஸ். எஸ். ஆர். எழுதியிருக்கிறார், இப்ப, டி, ராஜேந்தர் எழுதுகிறார்.

பாட்டெழுதும் கவிஞர்களுள் இரண்டு பாரம்பரியம் உண்டு. 1940க்கு முன்பு ஒரு பாரம்பரியம். 1940-ல் கம்பதாசன் வந்தபிறகு வேறு பாரம்பரியம்.

இலக்கியத்தில் முதன்முதலாக இனக்கவர்ச்சியைத் தோற்றுவித்தவர் உடுமலை முத்துச்சாமிக் கவிராயர்தான். இதைப் பற்றிச் சொல்லும்போது...

'பிச்சைக்குப் பாஸ்கரதாஸ்
பெருமைக்குச் சங்கரதாஸ்
இச்சைக்கு முத்துச்சமி
என்ற பழமொழியே ஏற்பட்டது.

பிச்சைக்காரர்கள் கூட பாஸ்கரதாஸ் இயற்றிய பாடல்களைப் பாடிப் பிழைத்தார்களாம். வீட்டிற்குள் அமர்ந்து கௌரமாகப் பாடும் வகையில் பாடல் எழுதியவர் சங்கரதாஸ். 'இச்சையைப் புகுத்தியவர் உடுமலை முத்துச்சாமி கவிராயர் என்பது இதன் பொருள்.

அதிகமாகச் சீடர்களைத்தோற்றுவித்து சினிமாவுக்குப் பாட்டெழுத வைத்த பெருமை கவிஞர் பாரதிதாசனுக்குத் தான் உண்டு அதில் நானும் ஒருவன். மொத்தம் 47 சீடர்கள் இவருக்கு. முத்துச்சாமி கவிராயரின் சீடர்கள் 15 பேர் பாட்டெழுத வந்தார்கள். அவர்களுள் முக்கியமான

வர்கள் லட்சுமணதாஸ், கே. வி. சந்தான கிருஷ்ண நாயுடு, உடுமலை நாராயணகவி, மதுரை பாலதாஸ், புதுகம்பன் பூமி பாலகதாஸ் ஆவார்கள்.

(''போஸ்டல் காலனியெல்லாம் இறங்குங்கோ'' கண்டக்டர் குரல் கொடுத்தார் நான் இறங்க வேண்டிய' இடம் அதுதான். ஆனால் இறங்கவில்லை; என்னுடைய பயணச்சீட்டை விரிவுபடுத்திக் கொண்டேன், கே. கே. நகர் வரை.)

வித்வான்களாக இருந்து யார் யார் பாட்டு எழுதி யிருக்கிறார்கள் என்பதையும் சொல்லஆரம்பித்தார் சுரதா. பரமக்குடி சிவராமலிங்கம்பிள்ளை போன்ற சில பெயர் களைச் சொன்னார். வித்வான் வெ. லட்சுமணன் புலவர் என்றார்.

அந்தக் காலத்திலேயே பாட்டில் சீர்திருத்தக் கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிற கவிஞர்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

'பக்தசேதா' படத்தில் பாபநாசம் ராஜகோபாலய்யர் இயற்றிய பாடலை உதாரணம் காட்டினார்.

''நட்ட கல்லைத் தெய்வமென்பார்
கெட்டிக்காரர் பொய்யடா
சுட்டகல்லை பேச்சியெனில்
சுவர்களின் பேர் என்னடா''

என வார்த்தைகளை அழுத்தமாகச் சொல்லியிருப் பதைச் சுட்டிக்காட்டினார்.

உடுமலை நாராயண கவி 'நல்ல தம்பி' படத்தில் ரயில், தீண்டாமையை ஒழிக்க எப்படி உதவியது என்பதைச் சொல்லும் வகையில் 'ரயிலே... ரயிலே பாட்டு' எழுதியிருப்பதையும் சொன்னார்.

பல கவிஞர்களுக்குக் கோபம் வரும்படியான சில விஷயங்களையும் சொன்னார். எந்தெந்தக் கவிஞர் சொன்ன கருத்துக்கள் அதற்கு முன்பாகவே எந்தெந்த பழங்கால இலக்கியங்களிலிருந்து எடுத்து கையாளப் பட்டுள்ளன என்பதைப் பல உதாரணங்களோடு விளக்கினார்.

''மேலே சொன்ன 'நட்டகல்லை தெய்வமென்பார்' பாடல் கருத்து 'சித்தர் ஞானக் கோவை' நூலில் சிவ வாக்கியர் பாடலிலிருந்து எடுக்கப்பட்டது என்றார்.

அடுத்து தன்னையே உதாரணமாக்கிக் கொண்டார்.

''நாடோடி மன்னன்'' படத்தில் ''மின்னல் கண்டு தாழை மலர்வது போல'' என்கிற ஒரு வரி எழுதி யிருந்தேன். எம்.ஜி. ஆரே இதைப் படித்துவிட்டு 'அற்புதமான கற்பனை' என்றார். அவரிடம் சொன்னேன்' இதை நான் சொல்லவில்லை. 'குறுந்தொகை'யில் வந்த அடியின் கருத்தைத்தான் நான் என்நடையில் எழுதி யுள்ளேன் என்று.

'கற்புக்கரசி' படத்தில் ''சந்திரனைக் கொஞ்சம் கிள்ளியெடுத்து'' என்கிற வரி வருகிறது. அதுவே சற்று தாமதமாக வேறு கவிஞரால் எழுதப்படும் போது ''வெள்ளி நிலாவை வெட்டி எடுத்து'' என வந்தது. கருத்து ஒன்று தான் வடிவம் வேறு.

மூத்தவரான வித்வான் பரமக்குடி சிவராமலிங்கம் பிள்ளையவர்களே ''ஒரு ரோமம் போனாலும் கவரிமான் உயிர் வாழாது'' என 1935-ல் வெளி வந்த 'நல்ல தங்காள்' படத்தில் எழுதியுள்ளார்.

இது வள்ளுவர் சொன்ன கருத்துத்தான்.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பின் மானம்வரின்' என்னும் குறளில் உள்ளது.

'செந்தாமரை' படத்தில் கவிஞர் கண்ணதாசன் ''கையிலே காசுமில்லை கடனும் கொடுப்பாரில்லை'' எனப் பாடியுள்ளார் இது 1876ல் வெளி வந்த 'ஸ்ரீகுசேல விலாசம்' நூலில் செங்காடு சேஷாத்திரி ஐயங்கார் பக்கம் 12ல் எழுதியுள்ளார்.

இந்த மாதிரி பல கவிஞர்கள் எழுதிய பாடல்களுக்கு மேற்கோள் காட்டியுள்ளேன். இதைக் 'கையாடல்' என்கிற கருத்தில் நான் எடுத்துக் கூறவில்லை. பின்னால் பிரபல மடைந்த கவிஞர்களின் மூலமாக முன்னால் பிரபலமடை யாத பல கவிஞர்களின் படைப்புகளை ஞாபகப்படுத்தி அவர்களின் பெயர்களையும் கற்பனைத் திறனையும் உலகறியச் செய்ய வேண்டும் என்பதால் சொல்லியிருக் கிறேன்.

தெரிந்தவர்களைக் கொண்டு தெரியாதவர்களையும் தெரிய வைக்கிறேன். இதுதான் என் நோக்கு

இதற்காக நான் பத்து ஆண்டுகளைச் செலவழித் துள்ளேன். 400 இலக்கிய நூல்களைத் தேடிப் பிடித்து படித்து ஆராய்ந்துள்ளேன். நூற்றுக்கணக்கான கவிஞர் களைச் சந்தித்துள்ளேன். சினிமாக் கவிஞர்கள் எழுதிய கவிதை நூல்கள் 96 இது வரை வெளிவந்துள்ளன என்பதைப் புரிந்து கொண்டு அவற்றைத் தேடி அலைந்தேன்.

நான் முதன் முதலாக எழுதிய சினிமாப் பாட்டு 'என் தங்கை' படத்திற்காக ''ஆடும் ஊஞ்சலைப் போல அலை ஆடுதே'' என்பது தான். கடைசியாக 'நேற்று இன்று நாளை' படத்திற்காக எழுதினேன். இது வரை சுமார் முப்பது பாடல்களே நான் எழுதியிருந்தாலும் இந்த ஆராய்ச்சிக்குப் பிறகு முன்னூறு பாடல்கள் எழுதிய உணர்வைப் பெறுகிறேன்.

பரிசுக்காக நான் இந்த அரிய நூலை எழுத முன் வரவில்லை. என் முன்னோர்களைப் பற்றியும் பின்னோர்

களைப் பற்றியும் வருங்காலம் தெரிந்து வைத்துக் கொள்ள ஒரு நூல் தேவை. அது என் சேவை என்பதாலேயே எழுத நினைத்துள்ளேன்.

குறிப்புகள் தயார். நூல் இனி மேல் தான் அச்சிட வேண்டும். நிறைய விஷயங்களைச் சேகரிக்க முடியுமா என இன்னும் அலைந்து விட்டு வருகிறேன்''

கவிஞர் சொல்லி முடிக்கும்போது பஸ்ஸை விட்டு இறங்கி அவரது இல்லத்தை நெருங்கி விட்டதைக் கூட நான் உணரவில்லை.

பத்து வருடங்கள் அவர் ஆராய்ந்த விவரங்களை பத்தே நிமிடங்களில் குறிப்பெடுத்துக் கொண்டு நான் திரும்பும் போது...

பஸ் நிற்காமல் போய் விட்டது. கோபமோ?

சுரதாவைச் சந்தித்தவர்: திரைஞானி
இதழ் : சினிமா எக்ஸ்பிரஸ், 1-2-1987

## வீட்டுக்கு ஒரு கல்வெட்டு

சாகப் போகும் அப்பாக்கள், தங்கள் சந்ததிகளுக்காக வீடு – வாசல், பணம், நகையெல்லாம் சேர்த்து வைத்து விட்டுச் செத்துப் போவது பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம் தன்னுடைய சிந்தனைகளைக்கல்வெட்டில்செதுக்கி வைத்து விட்டு, அதைப் பிற்காலச் சந்ததிகளுக்காக விட்டு விட்டுப் போவது நமக்குப் புதுசுதானே. அப்படி ஒரு புதுமையை இனி வரும் நாட்களில் நாம் தமிழகத்தில் எதிர்பார்க்கலாம்.

உவமைக் கவிஞர் சுரதாவிடமிருந்துதான் இந்த வித்தியாசமான ஐடியா கருக்கொண்டு, வளர்ந்து, குழந்தையாகப் பிறந்திருக்கிறது.

நாம் போய்ச் சந்தித்தபோது கவிஞர் சுரதா சொன்னார்: ''இந்தச் சமுதாயத்தின் மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள். இக்கால அரசியல் சூழ்நிலை எப்படி இருந்தது போன்ற விவரங்களைப் புத்தகங்களாக்கினால் அவை காலப்போக்கில் அழிந்துவிடும். ஆகையால், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கருத்துகளை மிகச் சுலபமான வார்த்தைகளில் எழுதி, அந்தச் சிறிய கல்வெட்டைத் தன் சொந்த வீட்டில் பதித்துவிட வேண்டும். பிற்காலத் தமிழர்களுக்கு இது ஒரு வரலாற்று ஆதாரமாக உதவும் என்பதனால்தான் நான் இப்படி முடிவெடுத்தேன்' என்றார்.

கடந்த 29-5-87 அன்று காட்டுமன்னார் கோவிலில் இப்படி ஒரு கல்வெட்டு நடப்பட்டு விட்டது. கடலூர் கதர் அ.வை. குப்புசாமி 'இல்லறம், அரசியல், பொருளாதாரம்' பற்றிய தன்னுடைய கருத்துகளை 3'×2' கல்வெட்டில்

எழுதித் தன் வீட்டில் பதித்துவிட்டார். விழாவுக்குத் தலைமையேற்றவர் சுரதா.

தனி மனித சிந்தனைகளை அந்த மனிதனே கல்வெட்டில் பொறிக்கும் வழக்கம் ஆரம்பித்து விட்டது. இனி வீட்டுக்கு ஒரு கல்வெட்டு எதிர்பார்க்கலாமா?

சுரதாவைச் சந்தித்தவர்: கே. அசோகன்
இதழ் : ஆனந்த விகடன், 14-6-1987

## கூல் டிரிங்க்ஸ் குடிக்கிற நேரத்தில்...!

ராஜராஜன் விருதுக்கான நடுவர் குழுவில் ஒரு உறுப்பினரான கவிஞர் சுரதாவைச் சந்தித்தோம். பரிசீலனையில் அவர் கலந்து கொள்ளவே இல்லை என்றாலும் சில விஷயங்களை மனம் திறந்து பேசினார்.

"இந்த விருது கொடுக்கற முறையே சரியில்லேன்னேன்! ராஜராஜன் பேரில் விருது கொடுக்கும் போது எப்படிப்பட்ட இலக்கியங்களுக்குக் கொடுக்கணும்? சிற்பக் கலையின் மகுடமாயிருக்கிற தஞ்சாவூர்க் கோயிலைக் கட்டியவன் ராஜராஜன். அதனால் சிற்பக் கலை பற்றிய சிறந்த புத்தகத்துக்கு ஒரு லட்சம் கொடுக்கலாம். வெளிநாடுகளில் வெற்றிக் கொடி நாட்டியவன் ராஜராஜன். அவன் பெயரில், பயண நூல்களுக்கு விருது கொடுக்கலாம். கோயில்களில் தேவரடியார்களை அறிமுகப் படுத்திப் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவன் அவன். அதனால், பெண்களைப் பற்றிய சிறந்த படைப்பிலக்கியத்துக்குப்பரிசுகொடுக்கலாம். அதை விட்டுவிட்டு விருதுக்குரிய இலக்கியங்களுக்கு வரையறையில்லாமல் விதிகளை நிர்ணயித்திருப்பது தவறு.

கோவி. மணிசேகரன் விருது வாங்கிவிட்டு, முதல்வர் காலில் ஏன் விழ வேண்டும்? 'இது முதல்வரே பார்த்துத் தந்த பரிசு!' என்று மற்றவர்கள் நினைத்துக் கொள்ள மாட்டார்களா?" என்று சூடாகப் பேசினார். அவரிடம், "ஏன் நீங்கள் பரிசீலனை தினத்தன்று கலந்து கொள்ள வில்லை?" என்று கேட்டோம்.

"எனக்கு வேற முக்கியமான வேலை இருந்திச்சு... போயிட்டேன்" என்றவர், "போன வருடத்துத் தேர்ந்

தெடுப்பில் நான் கலந்துகிட்டேன். இந்த வருட விவகாரம் பற்றியும் கேள்விப்பட்டேன்.'' என்றார்.

''போட்டிக்கு வந்திருக்கிற நூல்கள் எவை என்பது கூட நடுவர்களுக்குக் கடைசிவரை தெரியாது. பரிந்துரைக்கப்பட்ட நூல்களை நடுவர்களுக்கு அனுப்புவதும் இல்லை. கடைசி நாள் எல்லோரும் போய் உட்காருவோம். கூல் டிரிங்க்ஸ் குடிக்கிற நேரத்தில் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துடுவோம். விருதுக்குரிய புத்தகம் எதுன்னு முதலிலேயே முடிவான்தே! அங்கே எங்களுக்கு என்ன வேலை? நான் நடுவர் குழுவில் இருக்கிற விஷயமே எனக்குத் தேர்ந்தெடுப்பு தினத்துக்குப் பத்து நாள் முன்னாடிதான் தெரியும். மற்றபடி பரிசீலனைக்கு வர்ற நூலைப் பற்றி ஒருத்தருக்கொருத்தர் சொல்லிக் கேள்விப்படறதுதான். அதைப் படிச்சுப் பார்க்கிற விவகாரமெல்லாம் கிடையாது'' என்றார் சுரதா.

சுரதாவைச் சந்தித்தவர் : கே. அசோகன்
இதழ் : ஜூனியர் விகடன்,
17-6-1987

## உவமைக் கவிஞர் சுரதாவோடு சில நிமிடங்கள்

''அரசியல் என்பது எல்லோரும் பரவலாகப் பேசும், எழுதும், கேட்கும் கேள்விகள்.

அதையே ஏன் நாமும் அரைத்துக் கொண்டிருக்க வேண்டும். புதியதாக எதையாவது செய்வோமே''

இப்படி, நான் சந்தித்ததும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினார் உவமைக் கவிஞர் சுரதா.

அதனால்,

''சினிமாவைப் பற்றி ஏதாவது கேளுங்கள். அதை வாசகர்கள் படித்து மகிழ்வார்கள்'' என்றார்.

நல்ல நகைச்சுவை உணர்வோடு, எந்தத் தங்கு தடங்கலும் இன்றி அவர் சொன்ன சில செய்திகளைக் கீழே தருகிறேன்:-

முன்தையப் பாடல்களைப் போல் இன்றைய பாடல்கள் மனதில் நிற்பதில்லை என்று சொல்வதெல்லாம் பொய். முன்னகாலம் மாதிரியா இப்பத் துணி கட்டுறோம். இப்ப வெல்லாம் மேடு பள்ளம் நல்லாவே தெரியும்படிதானே துணி கட்டுறோம். அந்த மாதிரிதான் இதுவும். காலத்துக் கேற்ப கட்டுந் துணியைக் குறைச்சிட்டோம். அதேபோல், இசைக் கருவிகளை அதிகரித்துப் பாடல் வரிகளைக் குறைத்து விட்டார்கள்.

எப்படி ஒரு இதழை எடுத்ததும் முதலில் அதில் அடங்கியிருக்கும் துணுக்குகளைப் படித்துவிட்டு, நேரமும் காலமும் இருக்கும்போதுதான் பெரிய கதைகளையோ, செய்திகளையோ, படிக்கிறோம்'ல அப்படித்தான் இதுவும்.

இப்பவுள்ள நம்ம கவிஞர்கள் நல்லாவே பாட்டெழுத றாங்க உதாரணத்துக்கு, ரயிலில் திருமணத்தை வெச்சிக்குவோம்'னு ஒரு பாடலில் கவிஞர் கங்கை அமரன் குறிப்பிட்டுள்ளார். இது புதிய கருத்து. இப்படி கவிஞர் வைரமுத்துவிலிருந்து, இளங் கவிஞர்கள் சிறப்பாகவே பாடல் எழுதுகிறார்கள். அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வெறுமனே — அந்தக் காலத்துப் பாட்டு மாதிரி இப்பவெல்லாம் இல்லன்னு சொல்றதெல்லாம் சும்மா, கதை.

இன்னொன்றைக் கவனிக்கணும். இதுவும் புதுப்பாட்டு தான். 'வடக்கே இருக்கும் கங்கை எப்படியேனும் காட்டு வழியாகவாவது வளைந்து நெளிந்து காவிரியை மணந்தால் அதுதான் எனக்கு முதல் வசந்தம்' என்று தனது முதல் வசந்தத்தை ஒரு கவிஞன் மிக உயர்வாக இரு நதிகளும் இணைவதால் தமிழகத்துக்கு ஏற்படும் நன்மையை விவரிப்பது எத்தனை உயரிய கருத்து. இந்தக் கருத்தை நீட்டி நெளித்துச் சொல்லியிருந்தா தெளிவாப் புரிஞ் சிருக்கும். ஆனா டியூனை போட்டு, பாட்டோடு பாட்டா விரைவு படுத்தியதில் தெளிவாக் கேட்க முடியலையே தவிர, இன்றைய இளங்கவிஞர்கள் அரிய கருத்துக்களைச் சொல்றாங்கங்கறத நாம ஏத்துக்கத்தான் வேணும்.

பழைய மாதிரி, அதாவது தேவாரம் திருவாசகம் மாதிரி எழுதுனாத்தான் பாட்டுன்னு நெனைச்சுக்கிட்டி ருந்தா அது தப்புங்க.

திரைப்படப் பாடல் வேறு, கவிதை வேறு. திரைப் படத்தில் இடம்பெறும் பாடலும் கவிதைக்குரிய யாப்பிலக் கணத்தோடு இருக்கணும்'னு எதிர்பார்க்கிறது பைத்தியக் காரத்தனம்.

கவிஞன் வேறு-திரைப்படப் பாடல் வேறு. குளிக்கும் போது தானே நிர்வாணமா நிக்கிறோம், ரும்ல! அது

மாதிரிதான். இசை கலந்ததே திரைப் பாடல். ஆக, கவிதை வேறு, திரைப்பாடல் வேறு.

முதன் முதலில்

62 பாடல்களைக் கொண்ட முதல் படம் 1934ல் வெளிவந்த நல்ல தங்காள். அதில்தான் அதிக பாடல்கள் இடம் பெற்றன.

அதிகப் பாடல் எழுதிய – அதாவது திரைப்படத்துக்கு அதிகப் பாடல் எழுதியவர்-கவிஞர் கண்ணதாசன். 5 ஆயிரம் பாடல்கள். அதிகமா தொகை வாங்கினவரும் அவர்தான். ஒருபாட்டுக்கு சுமார் மூவாயிரம் வரை வாங்கினார் அதிகம். அதாவது தொடர்ந்து 25 ஆண்டு திரையுலகில் முடிசூடா மன்னனா இருந்தவரும் அவர்தான். பொண்டாட்டியும் அதிகம், புள்ளைங்களும் அதிகம், அயோக்கியத்தனமும் அதிகம். சரியோ தப்போ எல்லாமே மனுசங்கிட்ட அதிகம் தான்.

இந்த கண்ணதாசன் ஒருத்தர்தான் இருந்த போதும் ராஜா-இறந்த போதும் ராஜா. அதே எப்படிச்சொல்றேன்னா சிகிச்சைக்காக வெளி நாடு போன முதல் கவிஞன். இறந்த பின்னர் ஏழுலட்சம் ரூபாய்ச் செலவுல அவருடைய உடலை கொண்டுவர அரசு செலவு செஞ்ச வகையிலும் முதலிடம்.

நம்ம தலைமுறையில் திரைப்படப் பாடலாசிரியராக இருந்து முதல் அரசவைக் கவிஞரா ஆனதும் கண்ணதாசன்தான்!

இவருக்கு முன் மகாராஜ வாத்யார் என்பவர் அரசவைக் கவிஞராக இருந்திருக்கிறார். இது முன்னைய தலைமுறை.

பெண் பாடலாசிரியர்கள்

பெண்களும் திரைப்படப் பாடல்கள் எழுதியுள்ளார்கள். அதில் முதல்வர் கே. சுப்பிரமணியம் என்று சொல்லப்

படுபவரின் துணைவியார். அவுங்க நாகைப் பட்டணத்தைச் சேர்ந்த கே. பட்டம்மா என்ற மீனாட்சியம்மா. 1949லே பாட்டெழுதியுள்ளார்கள். பத்மா சுப்பிரமணியம் என்பவரின் தாய் பத்மா சுப்ரமணியம் ஒரு டான்சர். அதுவும் புரட்சிகர மான பாடல்கள். 'ஆறுமணி நேரத்திற்குமேல் வேலை செய்யோம்' என்ற பாடல் அது. 'கீத காந்தி' என்ற படத்தில் இடம் பெற்றுள்ளது அந்தப் பாடல்.

இப்போ-பாடகி எஸ். ஜானகிகூட பாடல் எழுதி யிருக்கா. ஒரே ஒரு பாட்டு. மொத்தம் ஏழு பெண்கள் பாட்டெழுதியிருக்காங்க. 416 திரைப்படப் பாடலாசிரியர் கள் பாடலெழுதியிருக்காங்க.

முன்னோடிகளை நினைவு கூர வேண்டும். அப்போது தான் ஒரு இனத்தின் வரலாறு அந்த இனத்தின் இளம் சந்ததிக்குத் தெரியும். இல்லை என்றால், தனது வரலாறு என்ன என்பதை இளந்தளிர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்காது என்கிறார் உவமைக் கவிஞர் சுரதா.

பெரியார் அதைச் சொன்னார்; இதைச் சொன்னார் என்று சொல்லியே நேரத்தையும், காலத்தையும் ஓட்டுவதை விட, அவர் அந்தக் கருத்துகளைச் சொல்ல முன்னோடி யாக இருந்தவர் யார்? அந்தக் கருத்துப் பிறப்பதற்குரிய அடிப்படையை ஆய்ந்துணர வேண்டும்- என்பதை வலியுறுத்தும் சுரதாவிடம்,

> "பார்ப்பன இயக்கம்-ஒழிப்பு அது இதுவென இன்றைய நவநாகரிகக் காலத்திலும் தேவை தானா?" எனக் கேட்டோம்

"அங்க கொஞ்சம் இலைமறைக்காயா இருக்கு. ஆனா, அது இல்லன்னா ஒருத்தன ஒருத்தன் தொட்டிருக்க முடியுமா?" என நாம் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தார் சுரதா.

இப்ப தி.க.காரன் மட்டும் சொல்லிக் கிட்டுருக்கான். மத்தவன் சொல்றதில்லை. நீங்களெல்லாம் இந்த நாட்டுல இருக்கீங்க-இருந்தாலும் நாமக்கல் சங்கத்தவங்க யாருன்னு தெரியுது. துரைராஜ் யாருன்னு தெரியுது. திருப்பத்தூர் கேஸ் என்னான்னுத் தெரியுது. ஆக, வெளிப்படையா இல்லாமப் போச்சு. அதுக்கு வெல இல்ல.

ஆனா, அதெல்லாம் கொறைஞ்சு போச்சுங்க!

இப்படிச் சொன்னவர்-நாம மீண்டும் சினிமாவப் பார்ப்போம்'னு திசை திருப்பினார்.

**பாஸ்கர தாஸ்**

முதன் முதலில் சினிமாபாடல் எழுதியது பாஸ்கரதாஸ். அவருக்கு இணையா எவரையும் சொல்ல முடியாது. அவர், யாருக்குச் சொந்தக்காரன்னா— ராமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தக்காரன்.

தான் கட்டிய வீட்டுக்கு முதன் முதலில் 'தமிழகம்' என்று பெயரிட்டவர். வெள்ளைச் சாமின்னு பேரு. அதெ பாஸ்கரதாஸ்னு மாத்திக் கிட்டார். மிகச் சிறந்த இவருடைய பாடலைப் பாடாதவரே இல்லை.

1958லே —'ஆடும் ஊஞ்சலைப் போலே அலை ஆடுதே' அதான் நான் எழுதின முதல் பாடல். இது 'என் தங்கை' என்ற படத்தில் இடம் பெற்றது. எம். ஜி. ஆர். நடிச்சது.

முப்பது ஆண்டுகள் தொடர்ச்சியா எவன் பாட்டும் ஒலிபரப்பப் பட்டதில்லை. ஆனா, நான் எழுதின 'அமுதும் தேனும் எதற்கு'என்ற பாடல்தான் இடைவிடாம ஒலி பரப்பாகிக்கிட்டு இருக்கு.

சீர்காழி கோவிந்தராஜன்தான் அந்தப் பாட்டப் பாடினார். தை பிறந்தா வழி பிறக்கும் படத்தில் இடம் பெற்றது அது.

1988லே அதுக்கு ஒரு விழா எடுக்க விருக்காங்க. சீர்காழி ஹீரோவுக்குப் பாடின முதல் பாட்டும் அதுதான்.

வப்பாட்டி!

வப்பாட்டியை வேற வீட்டில் வைக்கிற மாதிரி கவிதை களை வேறாகவும் திரைப் பாடப்பாடல்களை வேறாகவும் ஒதுக்கிட்டானுங்க. நான்தான் முதன் முதலா திரைப் பாடல் களையும்—கவிதைகளையும் ஒண்ணு படுத்தி பொத்தகம் போட்டிருக்கேன்.

அதாவது வப்பாட்டியை (சின்ன வீட்ட) மூத்தவ வீட்டிலேயே வெச்சமாதிரி திரைப்பாடலையும், கவிதையை யும் ஒண்ணாப்போட்டிருக்கேன்.

பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்டம்னு பேர் வெக்கச் சொன்னேன். கருணாநிதி இருக்கும் போதே சொன்னேன். அறிக்கை யைக் கொடுத்ததும் செய்யாலாம்'ல்ல—அந்தாளே நெனைச் சாதான் செய்வார். வேற ஆளு சொன்னா செய்யமாட்டார். ஆனா, அன்னைக்கு சொன்னதை எம்.ஜி ஆர். வந்ததும் கேப் விடாமச் செஞ்சிட்டார். என்னென்ன கருணாநிதி செய்ய மறந்தாரோ அத்தனையும் செஞ்சார் எம்.ஜி.ஆர்.

பாரதிதாசன் விருதுன்னு ஒண்ணு கொண்டாந்தபோது அந்த விருத எனக்குத்தான் கொடுத்தாங்க.

அப்புறம் கடற்கரையில பாரதிதாசனுடைய சிலையை வெக்கணும்னு 1955ல், முரசொலியில எழுதினேன். கவிதையா, சிலைவைப்போம்னு. 69ல் அண்ணா காலத்திலே சிலை வைக்கப்பட்டது.

குமுதம் இதழில் பேட்டிகண்ட போது-'திரைப்படப் பாடலும் இலக்கியம்தான்' என்று வெளியான அந்த பேட்டியில, பெண்கள் பாடல் எழுதணும்னு வலியுறுத்தினேன். அத்தோடு திரைப்படம் வெளிவந்ததும்

அதுபற்றிய ஒரு திறனாய்வு வெளிவர வேண்டும் என்பதை யும் அதில் வலியுறுத்தியிருந்தேன். அது 1958.

அப்புறம் இப்ப நேத்து நடந்து முடிஞ்ச ஒரு கூட்டத்துல, ஆரம்பிக்கும்போது கடவுள் வாழ்த்து அது இதுன்னு பாடாம,சங்க இலக்கியத்துல இருந்து ஒரு ரெண்டு வரியப்பாடுங்கன்னு சொன்னேன். இப்படிச் செய்யும்போது மறைஞ்சு போகாம இருக்கும். புதிய தலைமுறையினருக்கு சங்க இலக்கியம்னு சொன்னா அத நம்ம சரியா-இதுதான் சங்க இலக்கியம்னு சொல்லித் தரணுமில்ல.

நம்ம ஆளுங்க திரும்பத் திரும்ப பேசினதையே பேசி காலத்தெ விரையமாக்குகிறோம்-இது யாருக்கு லாபம்?

எழுத்துச் சீர்திருத்தம் தேவையா இல்லையான்னு சிந்திக்கறதுக்கு முன்னாடி, அதெ யாரு அறிமுகப் படுத்தினார்ங்கிறது மறந்து போச்சு. பெரியார் கொண்டு வந்தாருன்னு சொல்றதெல்லாம் தப்பு. பா. வே. மாணிக்க நாயக்கர்னு ஒருத்தர் இருந்தார். அவர் எஞ்சினியர். அவரை வெச்சுத்தான் இந்த சுயமரியாதை இயக்கத்தையும் தொடங்கினார். அவர் இந்த எஃப்'னு எழுதறதுக்கு ஆயுத எழுத்து போடுறோம் இல்ல. அதெல்லாம் அறிமுகப்படுத்தி இருப்பதைக்காட்டி, 'கை'யனான்னா கொம்பு வெச்சு'க'னா போடுறோம், அதைப்போல'ணை'யனானா கொம்பு வெச்சி'ண'னா போடணும்னு சொன்னார். ஆனா, அதை வார்ப்பு செய்றதுல தவறு ஏற்பட்டுப் போச்சு.

இப்ப, எளிதா நடமாடுறதுக்கு வேட்டியை மாத்தி கால் சட்டை போட்டுக்றோம்ல. அதுபோல காலம் மாறிக் கிட்டிருக்கு. நாம மாறறோம். எழுத்தையும் சுருக்கிக் கையாள வழி இருந்தா கையாள்வதி'ல தவறுல்ல அதெல்லாம் சரிதான்.

சுரதாவைச் சந்தித்தவர் : பழ. எ. அன்பழகன்
இதழ் : தினமணி (கோலாலம்பூர், மலேசியா)
6-12-1987

# காவியக் கவிஞனைக்காட்டிலும்...

காவியத்தைப் படைக்கின்ற கவிஞர்கள் மட்டுமே, இலக்கிய ராஜ்யத்தில் கொடிகட்டி ஆளக்கூடியவர்கள். அவர்களின் சிந்தனை மட்டுமே நின்று நிலை பெறக் கூடியது என்ற கருத்து மாறவேண்டும் என்று பிரபல கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான சுரதா கூறுகிறார்.

'அமுதும் தேனும் எதற்கு-நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு...?'
'ஆசையே அலைபோலே
நாமெல்லாம் அதன் மேலே...'

என்பது போன்ற இறவாப் பாடல்களை எழுதி தமிழ்த் திரைக்கு அளித்துள்ள உவமைக் கவிஞர் சுரதா திரைப் பாடல் துறை பற்றிய நீண்ட ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டு வருகிறார்,

இந்த ஆராய்ச்சி பற்றிக் குறிப்பிட்ட போது கடந்த 10 ஆண்டுகாலமாகத் தமிழ்த் திரையுலகப் பாடல்-பாடலாசிரியர்களைப் பற்றிய ஆய்வை மேற் கொண்டு வருவதாகக்கூறினார்.

முன்னும்-பின்னும் என்ற தலைப்பிலான கிட்டத்தட்ட 500 பக்கங்களைக் கொண்ட ஒரு நூலைத் தாம் தயாரித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் கூறியதாவது:-

திரைப்படப்பாடல் நீண்ட ஆராய்ச்சிக்குரிய அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றன.

பெரும்பாலோர் படப்பாடல்களை மிகச் சாதாரணமாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர்.

பெரிய பெரிய காவியங்களில் படைக்கப்படுகின்ற கருத்துகள் மட்டுமே சிறந்தவை என்கிற மனோபாவத்திற்கு எதிராகத் திரைப்பாடல் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைத் தெளிவு படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த ஆய்வை மேற்கொண்டு வருகிறேன்.

திரைப்படப் பாடலாசிரியர்கள் சாமானியர்கள் அல்ல; அவர்களது கருத்துகளும் சாதாரணமானது அல்ல.

தமிழ் உலகம் போற்றிப் புகழ்கின்ற பல கவிஞர்களை விட இந்தத் திரைப்பாடல் ஆசிரியர்கள் மேலானவர்கள்; சிறந்தவர்கள் என்பது என் கருத்து.

பாரதியார்-பாரதிதாசனைவிடத் திரைப் பாடல்கள் மூலம் கோடான கோடி மக்களைப் போய்ச் சேருகின்ற கவிஞர்களாக இந்தத் திரைப்படப் பாடலாசிரியர்கள் விளங்குகிறார்கள்.

போகிற போக்கில் மிகச் சாதாரணமாகப் பாட்டெழுதி பல அரிய கருத்துகளை அவர்கள் சொல்லிச் சென்றுள்ளனர்.

அந்தக் கருத்துகள் — காவியங்கள் தீட்டுகின்ற கவிஞனால் கூட சிந்திக்க முடியாதவையாக-அனுபவம் பொதிந்து கிடக்கும் கருத்துகளாக விளங்குகின்றன.

**திரைப்படப் பாடலுக்கு இலக்கியத் தகுதி**

குறிப்பாக-நாமெல்லாம் திரைப்பாடல்களைக் கேட்டதோடு சரி, மாறாக அந்தப் திரைப்பாடல்களுக்கிடையே ஆங்காங்கே மின்னலாய்த் தெறித்துப் போகும் கருத்துகளை நாம் உணர்ந்து பார்ப்பதில்லை.

திரைப்பாடலுக்குத் தாராளமாக இலக்கியத் தகுதியைத் தரலாம்.

இந்த அடிப்படையில் தான் கடந்த 10 ஆண்டுகாலமாக திரைப்படப் பாடல்கள் குறித்து ஆராய்ந்து வருகிறேன்.

எத்தகைய கருத்துகளை திரைப்படப் பாடல்கள் மூலம் மக்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள்.

அரசியல் சமுதாயச் சிந்தனைகளை அவர்கள் எப்படி யெல்லாம் திரைப்படப் பாடல்களில் புகுத்தி இருக்கிறார்கள்; எவ்வாறு கையாண்டுள்ளார்கள்.

**தத்தெடுத்த கவிஞர்கள்**

அதோடு, எங்கெங்கிருந்து கருத்துகளை தத்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போன்ற அம்சங்களை நூலில் ஆராய்ந்திருக்கின்றேன்.

1931-ம் ஆண்டு திரை உலகில் பேசும் படம் அறிமுக மானதற்குப் பின்னர் 416 பேர் திரைப்பாடல்களை எழுதியுள்ளனர்.

இவர்களில் 144 பேர் தமிழ் நாட்டவர்கள், இருவர் மலேசியர்கள். இந்தப் பட்டியலில் 7 பெண்களும் இடம் பெற்றுள்ளனர்.

திரைப்பாடல் ஆசிரியர்களின் பட்டியல் இன்னும் நாளுக்கு நாள் நீண்டு கொண்டே போகிறது.

கடல் கடந்து தமிழ்த் திரைக்குப் பாட்டெழுதியவர்கள் என்று சொன்னால் கவிஞர் காரைக் கிழாரையும் கவிஞர் கரு. வேலுச்சாமியையும் குறிப்பிடலாம்.

அதுமட்டுமல்ல திரைப்பாடல் எழுதியவர்களில் பெரிய பெரிய வித்வான்கள் கூட அடங்குவர்.

தருமபுர ஆதீனத்தில் தலைமைப் புலவராக விளங்கிய மாயவரம் தியாகராஜ தேசிகர் எட்டயபுரத்தின் முதல் ஆஸ்தான கவிஞருமான மகாராஜா வாத்தியார் முதலான பெரும் புலவர்கள் எல்லாம் திரைப்பாடல் எழுதியிருக்கிறார்கள்.

**இன்றைக்கும் பொருந்துபவை**

இன்றைக்கும் பொருந்தக் கூடிய பல முற்போக்குக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள் அவர்கள்.

1937-ஆம் ஆண்டிலேயே சத்துணவுத் திட்டம் பற்றிப் பாடிய திரைப்பாடல் ஆசிரியனாக அம்பா சமுத்திரம் ஏ. ரத்தின சபாபதி விளங்குகிறார்.

இன்றைக்குத் திரையுலகில் யார் யாரோ, கதை,வசனம்; பாட்டு, நடிப்பு, இசையமைப்பு, டைரக்ஷன் எல்லாம் நானே என்று பெயர் போட்டுக் கொள்வதோடு, பெருமையடித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் 35 ஆண்டுகளுக்கு முன்பே டேஞ்சர் சிக்னல் என்ற படத்திற்குக் கதை—வசனம் எழுதி, பாட்டெழுதி இசையமைத்து இயக்கி நடித்துச் சாதனை படைத்த சகலகலாவல்லவன் இந்த அம்பாசமுத்திரம் ரத்தின சபாபதி என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்திரையுலகிற்கு முதல் முறையாக அறிமுகமான பெண் திரைப்படப் பாடலாசிரியர் மீனாட்சி அம்மாள் என்பவர் ஆவார்.

இவர், 1949ல் 'கீதகாந்தி' என்ற படத்திற்கு பாட்டெழுதியுள்ளார்கள்.

1931ல் பேசும் படத்திற்கு முதலில் பாட்டெழுதிய பெருமை பாஸ்கரதாசைச் சேரும்.

அந்தக் காலத்திலேயே எல்லாக் காலகட்டத்திற்கும் பொருந்தும் வகையில் பலர் பாட்டெழுதியுள்ளனர்.

பாரதிதாசன் பட்டுக்கேட்டை கல்யாணசுந்தரம், கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன், உடுமலை நாராணகவி, கண்ணதாசன் ஆகியோரின் பாடல்கள் எல்லாம் கருத்துச் செழுமையுடன் விளங்குகின்றன.

குறிப்பாக மகாவித்வான் பாபநாசம் இராஜகோபால அய்யர் 1948ஆம் ஆண்டில் போஜன் என்ற படத்திற்கு எழுதியுள்ள பாட்டை உதாரணமாகச் சொல்லலாம்.

தத்தாரி அரசாளும்
தனிக்காட்டு ராச்சியத்தில்
கத்தரிக்கோல் மந்திரியாம்
கன்னக் கோல் காவலராம்!

கஞ்சிக் கலயத்திலே
கட்டெறும்பு மேயுதடா!
பஞ்சத்துக்குப் பஞ்சமில்லை
பாவிப்பயல் ராச்சியத்தில்!

வீதியெல்லாம் தூக்குமரம்
வீடெல்லாம் சிறைவாசம்
வாதனையும் சோதனையும்
மடி மாங்காய் தேடுதடா!

பக்கமெல்லாம் குள்ளநரி
பதுங்கித் திரியுதடா!
எக்காளம் போடுதடா எங்க நாட்டு சீமையிலே!

மேற்கண்ட பாட்டு 1948ல் எழுதப்பட்ட பாட்டு என்றாலும் அதன் கருத்து இன்றைக்கும் பொருந்தும்; இனி என்றைக்கும் பொருந்தும். இதுபோன்ற கருத்துச் செறிவு காவியங்களில் மட்டும்தான் கிடைக்கும் என்பதல்ல, திரைப்பாடல்களில் ஏராளமாக மண்டிக்கிடக்கிறது.

சுரதாவைச் சந்தித்தவர் : அக்கினி
இதழ் : தமிழ் ஓசை (மலேசியா) 6-12-1987

## தலைமுறை சந்திப்பு

நிர்மலா : கல்லூரியில் படிக்கும் போதே எனக்கு கவிதை களில் அதிகமா ஈடுபாடு உண்டு. உங்க 'சுரதா' பத்திரிகையை விரும்பிப் படிப்பேன். உங்களை மாதிரி மொழிப் பற்று உள்ளவங்க ரொம்ப குறைஞ்சுட்டாங்க என்பது என் அபிப்பிராயம்.

சுரதா : எனக்கு மொழிப்பற்றுக் கிடையாது. (நிர்மலா சுரேஷ் திகைப்பதைப் பார்த்து விட்டு) ஏன் சொல்றேன்னா பற்று என்றாலே இதைவிட ஒண்ணு உசத்தியா கிடைச்சுடுத்துன்னா அது பேரில தாவிடும். மொழிப் பொறுப்பு, மொழி மூச்சு எனக்கு உண்டுன்னு சொல்ல வர்றேன். (இருவரும் சிரிக்கிறார்கள்)

கேள்வி : சமீபத்தில் ஒருத்தர் சொன்னார்-பெயர் சொல்ல விரும்பல-விரைவில் கவிதை அழிந்து விடும்; உரை நடை ஆதிக்கம் தான் நிலைக்கும் என்று. உங்க கருத்தும் அதுதானா?

பதில் : நிச்சயமா கிடையாது. சுருக்கமா சொல்லறதைத் தான் இப்ப ஜனங்க ரசிக்கிறாங்க. ஓடற ஓட்டத்தில் எதையாவது படிச்சா, எதையாவது கேட்டா போதும்னு நினைக்கிற காலமாயிடுச்சு. சுருக்கமா சொல்லணும்னா கவிதை தான் சரிப்பட்டு வரும். உரை நடை சரிப்படாது. இல்லையா? (அப்போது ஆப்பிளை நறுக்கி ஒரு தட்டு முழுவதும் எடுத்து வந்து வைக்கிறார் அவர் மருமகள். அதைப் பார்த்து விட்டு சுரதா தொடர் கிறார்) இதையே எடுத்துக்குங்க. முன்பெல்லாம் முழுசா ஆப்பிளையோ ஒரு பழத்தையோ

தருவாங்க. இப்ப துண்டு துண்டா நறுக்கி வைக்குறாங்க; சாப்பிடறதுக்கும் பங்கு போடறதுக்கும் சுலபமா இருக்கு. முழுப் பழம் உரைநடை. துண்டுகள் கவிதை. இப்ப கவிதை எல்லாருக்கும் சட்டெனப் புரியற மாதிரி வந்துடுச்சே, அப்புறம் அது எப்படி நிலைக்காம போயிடும்?

கேள்வி : சரியா சொன்னீங்க. இப்பதான் எனக்கு நிம்மதி. இப்போது புதுக்கவிதைகள் தரமா இல்லைன்னு சொல்றாங்களே?

பதில் : வீட்டில ஐந்து பேர் இருக்கோம். சிலர் அசடா இருப்பாங்க. சிலருக்கு 'தான் புத்திசாலி' என்ற நினைப்பு இருக்கும், புத்தி இருக்காது. அப்படித் தான் சிலருடைய கவிதைகளும். ஒருத்தர் சமையலிலே எல்லா அயிட்டமும் நல்லா அமைஞ்சிடறதில்ல. அப்படித்தான் ஒருத்தர் எழுதுகிற கவிதைகள் எல்லாமே பிரமாதம்னும் சொல்ல முடியாது.

கேள்வி : சில பேர் என்னிடம், கவிதையெல்லாம் எழுதுறத விட்டுட்டுக் கதை எழுதுங்கன்னு சொல்றாங்க. நாவலாசிரியரால் வால்யூம் வால்யூமா எழுத முடியுது. கவிதை எழுதறவங்களால எத்தனை புத்தகம் போட்டீங்கன்னு சொல்ல முடியறதில்ல. ஒண்ணு எழுதினாலும் உருப்படியா இருக்கணும்னு நினைக்கிறேன். பலருக்கு இது திருப்தி தர்றதில்ல.

பதில் : தமிழருக்கு எல்லாமே விபரமாகச் சொன்னா தான் புரியும்னு ஆயிடுச்சு. எதைச் சொன்னாலும் கதைபோல சொல்ல நினைக்கிறாங்க. இப்ப காலம் மாறிடுச்சு. வளவளன்னு சொன்னா,

"ஏன்ய்யா அறுக்கிற. நீ சொல்ல வர்றதைச் சுருக்கமா சொல்லு" என்று கேட்க ஆரம்பிச்சுட்டாங்களே! திருக்குறள் போன்றவற்றை மொத்தமா தந்தா, "இதை வச்சுக்கிட்டு நான் என்ன செய்யப் போறேன்" என்கிறார்கள். அவர் அவருக்குத் தகுந்த மாதிரி பிரிச்சுக் கொடுத்தா மலைப்பா இல்லாம சுலபமா படிச்சுடுவாங்க.

கேள்வி : இப்ப எம்.ஏ., எம்.பில்., படிச்சிட்டு பிஎச்.டிக்காக 'ஹைக்கூ' கவிதைகளை ஆராய்ச்சி செய்யறேன்.

பதில் : வெரி குட். 'ஹைக்கூ' கவிதை புதுக்கவிதை போலத்தான். ஆனா சொல்ல வந்ததை மூணே வரியில சொல்லிடணும். அதுக்கு ரொம்ப சாமர்த்தியம் வேணும். அமுதோன் எழுதிய 'புள்ளிக் கோலங்கள்' ஹைக்கூ கவிதைத் தொகுப்பைப் படிச்சிருக்கேன். நல்லா இருந்தது.

கேள்வி : சமீபத்தில் உங்களைக் கவர்ந்த புதுக்கவிதை ஒண்ணு சொல்லுங்களேன்.

பதில் : தாரா பாரதின்னு ஒருத்தர் எழுதியிருந்தார்:
"வெறுங்கை என்பது மூடத்தனம்.
உன் விரல்கள் பத்தும் மூலதனம்"ன்னு பிரமாதமா, எவ்வளவோ விஷயங்களை இந்த இரண்டு வரியில சொல்லிட்டார். விரல் இல்லேன்னா பிரயோஜனமே இல்ல. அதனால தான் எல்லாத்தையும் சாதிக்க முடியும் இல்லையா?

கேள்வி : எனக்குக் கூட மீனாட்சி கல்லூரியிலே ஒரு தலைப்புத் தந்தாங்க. 'காலம் நமது கைக்குள்ளே' என்று. நான், "காலம் நமது கைக்குள்ளே அந்தக் கைகள் இரண்டும் நமக்குள்ளே" ன்னு சொன்னேன்.

பதில் : ஆஹா; என்னமா பளிச்சுன்னு இருக்கிறது இப்படிப்பட்ட கவிதைகளைக் கேட்டாலே தன்னம்பிக்கை தானே வந்து விடும். ஒவ்வொருத்த ரும் விசிட்டிங் கார்டில தன் போட்டோவையும் பிறந்த தேதியையும் போட்டுக் கொள்வது நல்லதுன்னு சொல்லி, முன்னோடியா நானும் என்னைச் சேர்ந்தவங்களும் போட ஆரம்பிச் சுட்டோம்.

விசிட்டிங் கார்டில இருக்கும் முகத்தைப் பார்த்து யார் தேடிக்கிட்டு வந்தாங்கன்னு குழப்பமில்லாம தெரிஞ்சுக்கலாம். இப்படி ஒவ்வொருவரும் ஒரு கவிதையைத் தங்கள் கார்டில் பிரிண்ட் செய்தால் நல்லா இருக்கும்.

கேள்வி : நல்ல ஐடியா. தங்கள் கருத்துகளை கவிதையா மத்தவங்களுக்கு விசிட்டிங் கார்டு மூலமா சொல்லிடலாம், இன்னொரு சந்தேகம், ஒருத்தர் மேடையில சொன்னார்: 'தமிழ்க் கவிஞர்கள் என்ன சாதித்துக் கிழிச்சீங்க? ஆங்கிலத்தில் உங்க கவிதைகள் மொழி பெயர்க்கப் பட்டிருக்கா?'ன்னு. இதிலென்ன நியாயம்? நம்ம மக்களுக்குச் சேருதான்னு கேட்பதை விட்டு விட்டு இப்படிப் பேசலாமா?

பதில் : இதைத்தான் மோகம் என்பது. ஒரு விஷயம் நினைவுக்கு வருது. ஒரு சமயம் மறைமலை அடிகள் (அவரது ஆரம்பகாலம்) பேச்சைக் கேட்கப் பெரியார்சென்றிருந்தாராம். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பல அயல்நாட்டு அறிஞர் களின் பொன் மொழிகளை மேற்கோள் காட்டிக் காட்டி சரளமா பேசினாராம் மறைமலை அடிகள். பெரியார் பேச எழுந்தவர், "நாங்க உங்க

பேச்சைத்தான் கேட்க வந்தோமே தவிர, அயல் நாட்டான் என்ன சொன்னான், சொல்கிறான் என்பதை அல்ல. நீ என்ன சொல்ல வர்ற அதைச் சொல்லு''ன்னு பளிச்சின்னு கேட்டுட் டாராம். அதிலிருந்து மறைமலை அடிகள், ''நான் என்ன சொல்றேன்னா'' என்று தன் கருத்தைச் சொல்ல ஆரம்பிச்சாராம். நமக்குள்ளே விஷயம் இருக்கும்போது, சிந்தனை செய்ய சக்தி இருக்கும் போது, ஏன் கடன் வாங்கணும்? சொத்து இருக் குன்னு நினைச்சா உழைக்கத் தோணாது. மத்தவன்தான் சொல்லிட்டானேன்னு அதையே சொன்னால் நாம் எப்படி யோசிக்க முடியும்? நாம் நம்ம மொழியில நம்ம கருத்தைச் சொல் லிடணும். மத்தவங்க வேணும்னா கடன் வாங்கிக் கொள்ளட்டும்.

கேள்வி : வீட்டுக்கு வீடு திருக்குறள்னு ஆரம்பிச்சீங்க போலிருக்கே?

பதில் : ஆமாம், மலேசியாவில். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு திருக்குறளை எழுதி வைக்கணும்னு சொன்னேன். இப்ப இங்கே ஒவ்வொரு வீட்டிலும் தன் கருத்தை, தன் மனைவி கருத்தை, குழந்தைகள் கருத்தை கல்வெட்டில் பதிக்கணும்னு சொல்றேன். நம்மால் பொன் மொழிகளைச் சொல்ல முடியாதா என்ன? சேலத்தில் தமிழ் அமுதன், கடலூரில கதர் குப்புசாமி, சேலத்தில் எழுஞாயிறு. இப்படி பல பேர் கல்வெட்டில் தம் கருத்துகளை வீடுகளில் பதித்து வைச்சிருக்காங்க.

(நிர்மலா சுரேஷ் விடைபெறத் தயாராக, மஞ்சள் குங்குமத்தைத் தந்து வழி அனுப்புகிறார்கள் சுரதா வீட்டினர்.)

சுரதா : ஒவ்வொருத்தரும் மஞ்சள், குங்குமம், ஜாக்கட் துணி இப்படி தர்றதைப் போல, சுயமான சிந்தனையை, ஒரு கவிதையைச் சந்திக்கும் போதெல்லாம் தந்தால் நல்லா இருக்கும். சிந்தனைப் போட்டி வரும்.

சுரதாவைச் சந்தித்தவர் : நிர்மலா சுரேஷ்
இதழ் : சுபமங்களா, 1-4-1989

## மண்ணை மதிக்கும் கவிஞர்

கவிஞர்கள் வீட்டு வரவேற்பு அறையிலுள்ள அலமாரிகள் புத்தகங்களால் நிரம்பியிருக்கும். ஆனால் கவிஞர் சுரதா வீட்டு வரவேற்பறை அலமாரியில் பிளாஸ்டிக் டப்பாக்கள் நிரம்பி இருக்கின்றன. நாட்டு வைத்தியர் வீட்டைப் போல், லேகிய வியாபாரி வீட்டைப் போலக் காட்சியளிக்கிறது.

டப்பாக்களில் என்ன இருக்கிறது?

சுரதா: 1982-ஆம் வருடம் பொங்கல் விழாவிற்காக மலேசியா சென்றிருந்தேன். கோலாலம்பூரிலிருந்து கடா மாநிலத்துக்கு காரில் போய்க் கொண்டிருந்தேன். வழியில் கார் நின்றது.

'இந்த இடத்தில்தான் ராஜராஜேந்திர சோழன் கேம்ப் போட்டுத் தங்கியிருந்தான். பின்புதான் படையெடுக்கச் சென்றான்,' என்று சொன்னார்கள். 1100 ஆண்டுகளுக்கு முன் சென்று அந்த இடத்தில் ஒரு தமிழ் மன்னன் தங்கிய இடத்தைப் பார்த்ததும் நமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்! அது எனக்கு அப்போது ஏற்பட்டது. உடனே காரிலிருந்து இறங்கிப்போய் அந்த இடத்தில் ஒரு கிலோ அளவுக்கு மண்ணை அள்ளிக் கொண்டு காரில் ஏறிப் பயணத்தைத் தொடங்கினேன்.

நான் பள்ளியில் விருப்பப் பாடமாக வரலாறு எடுத்துப் படித்தவன். வரலாற்றில் கொஞ்சம் ஆர்வம் உண்டு.

அதனால் ஒரு புதிய வரலாற்று முறையை உண்டாக்க நினைத்தேன். மண் சேகரிப்பதன் மூலம் அந்த மண்ணின் பெருமை-அங்கு பிறந்த பேராளர்களின் பெருமை-நமக்குக் கிடைக்கிறது.

இப்போதெலாம் மண்ணை நான் மட்டும் போய் அள்ளிக் கொண்டு வருவது இல்லை. சாட்சிக்குச் சான்றோர்களை வைத்து, சம்பந்தப்பட்டவர்களின் மண்ணை எடுக்கும்போது அவரது உறவினரை அழைத்துப் போய், சம்பந்தப்பட்ட சான்றோர் பிறந்த மண் உள்ள இடத்தைக் காட்டச் சொல்லி, அவர் கையாலே ஒரு பிடி மண்ணை எடுத்துக் கொடுக்கச் சொல்லி, கொண்டு வருகிறேன். இப்படி இதுவரை ஐம்பது சான்றோர்கள் அவதரித்த மண்ணைச் சேகரித்து வரலாறு கண்டு பிடித்திருக்கிறேன். 2,000 இடத்தில் மண்சேகரித்து வரலாறு தெரிய வைக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்.

ஒவ்வொரு மண் டப்பாவுக்கும் நான்கு பக்க வரலாறு அச்சடித்தும் வைக்கிறேன்.''

சுரதாவைச் சந்தித்தவர் : துரை. ராமச்சந்திரன்
இதழ் : குமுதம், 20-7-1989

## தமிழ்த் தாய் பட்டினியா கிடக்கிறாள்?

'இதுவரை தமிழ்எனக்குச் சோறு போட்டது. இனிநான் தமிழுக்குச் சோறு போடப் போகிறேன்' என்று கண்ணதாசனுக்குப் பிறகு கவியரசு பட்டம் சுமந்து கொண்டிருக்கும் வைரமுத்து ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார். இது குறித்து நாம் உவமைக் கவிஞர் சுரதாவைச் சந்தித்துக் கேட்டோம்.

"இது போல கம்பர் சொல்லியிருந்தாலும், வள்ளுவரே சொல்லியிருந்தாலும் குற்றம் குற்றம்தான். இது ஒரு ஆணவமான சிந்தனை. இப்படி ஒவ்வொரு துறையில் இருப்பவர்களும் சொல்லிக் கொண்டு போனால் என்ன ஆகும்! என்று யோசித்துப் பார்க்க வேண்டும்."

தமிழ்த் தாய் என்ன பட்டினியாகவா கிடக்கிறாள்? இது எப்படி இருக்கிறது என்றால், கனிக்கு உள்ளே இருக்கிற விதைக்குக் கனி சோறு போடுவது போல இருக்கிறது. கடலுக்கு அலைகளை அன்பளிப்பது போல் இருக்கிறது.

இவரே தமிழை எழுதித்தான் கூலி வாங்கிக் கொண்டு இருக்கிறார். தமிழை வைத்துப் பிழைக்கிற இவரே இப்படிச் சொல்வது சரியில்லை. ஏழைத் திரைப்படக் கவிஞனுக்குச் சோறு போடுகிறேன் என்று சொல்! தமிழுக்குச் சோறு போடுகிறேன் என்று சொல்லாதே!

தமிழ் என்பதே தேன். தேனுக்கு உணவு தேனா? சோறுக்குச் சோறு ஊட்ட நினைக்காதே! தமிழுக்கு அமுதென்று பேர் என்று பாரதிதாசன் சொல்லி யிருக்கிறார். அதை உணர்ந்து கொள்.

கவிஞனை அழைத்து விருந்து வை; தமிழை அழைத்து விருந்து வைக்காதே. அதுவே விருந்து.

எவனும் தமிழுக்குச் சோறு போட முடியாது. எழுத்தாளர் சங்கம், தமிழ் மன்றம் எல்லாம் இதைக் கண்டிக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறது? இதை ஏன் எதிர்க்கவில்லை? இப்படிப்பட்டவர்களை எதிர்ப்பவன் நானாகத்தான் இருப்பேன் என்ற குரல் தமிழகத்தில் எழும்பியாக வேண்டும்'' என்று பொரிந்து தள்ளி விட்டார்.

சுரதாவைச் சந்தித்தவர்: நாரதர் நிருபர்
இதழ்: நாரதர், 15-10-1989

## அந்த அனுபவத்தை மறக்க முடியுமா?

என்னுடைய நாற்பதாவது வயதில் நடந்த சம்பவம் இது. மந்தைவெளியிலிருந்து தி. நகருக்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு பெட்ரோல் பங்க் அருகே காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டிருந்த தயாரிப்பாளர் ஏ. கே. வேலன் என்னைக் கூப்பிட்டார். போனேன். 'பாரதிதாசன் பாடல் எழுத ரெக்கார்டிங் ரெடி பண்ணிட்டேன். அவர் பாண்டிச்சேரி போய்விட்டார். அவரை அழைத்து வந்து இன்றைக்குள் பாட்டு எழுதி ரெக்கார்டு பண்ண முடியாது. ஆகவே அந்தப் பாட்டை நீ எழுது,' என்றார். தை பிறந்தால் வழி பிறக்கும் படத்தில் 'அமுதும் தேனும்' என்று நான் எழுதிய சினிமா பாடலுக்கு வாய்ப்புக் கிடைத்தது இப்படித்தான்.

சுரதாவைச் சந்தித்தவர் : ராம்சந்த்
இதழ் : குமுதம், 19-10-1989

## புதுக்கவிதை அலை ஓய்ந்து விட்டது

புதுக்கவிதை என்ற பெயரில் தோன்றிய அலை ஓய்ந்துவிட்டது என்பதே உண்மை. முதலில் புதுக்கவிதை என்று அதனை அழைப்பதே தவறு. கவிதைக்கான வடிவமே இல்லாத, உரைநடையை ஒடித்து எழுதும் முறையை வேறு எந்தப் பெயரில் வேண்டுமானாலும் அழைக்கலாம், கவிதை என்பதைத் தவிர. ஏனெனில் கவிதைக்கு என்று ஒரு வடிவமைப்பு உண்டு. குறளடி, சிந்து, வெண்பா, விருத்தம் என்று ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு இலக்கணம், வரையறை இருக்கிறது. அந்த வடிவத்துக்குள் கவிதையின் கருத்தைச் சொல்வதே சிறப்பு. அப்படிச் சொன்னவர்களே சிறந்த கவிஞர்களாக விளங்கினார்கள். விளங்குகிறார்கள்.

புதுக்கவிதை என்று சொல்லப்படுவதில் எந்த வடிவமும் கிடையாது. எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். கருத்து இருந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். முதலில் அது கவிதையாக இருக்க வேண்டும். பிறகல்லவா கருத்தைப் பற்றிக் கேள்வி வரும். கவிதைக்கான வடிவமே இல்லாத ஒன்றை, எவ்வளவு சிறந்த கருத்து இருந்தாலும் எப்படி கவிதை என்று ஏற்றுக் கொள்ள முடியும்? ஒருவர் ஆணா, பெண்ணா என்பதை அங்கத்தை வைத்துத்தான் தீர்மானிக்க முடியுமே தவிர அழகை வைத்தல்ல.

மரபுக் கவிதைகளை நாம் படித்தால் எளிதில் நினைவு வைத்துக் கொள்ள முடியும். நமக்குப் பிடித்த கவிதைகளை நாம் எப்போதும் கூற முடியும். ஆனால் இந்தக் கண்றாவியைப் படித்தால் நினைவில் வைத்துக்கொள்ள முடியுமோ? அதன் கருத்தை வேண்டுமானால் மேலோட்டமாகக் கூறலாம். வார்த்தைகள் நினைவில் நிற்காது. இதற்குக் காரணம் ஒழுங்கான வடிவம் இல்லாததுதான்.

சுரதாவைச் சந்தித்தவர் : சி. கண்ணன்
இதழ் : குங்குமம், 10-11-1989

## ஆகாய விமானத்திற்குள் கட்டை வண்டி ஓட்டுகிறார் அமரன்

கங்கை அமரன் பெயரைப் பாருங்கள்! முதலில் இந்தப் பச்சைப் பாடகன் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் அப்போதுதான் நாட்டுப் பற்று வரும். மொழிப் புலமை வரும். 'காவிரி அமரன்' என்று பெயர் மாற்றிக் கொண்டு தமிழ்ப் பாடல் எழுதட்டும், அதை விட்டு விட்டு கங்கை அமரன் என்று பெயர் வைத்துக் கொண்டு தமிழ்ப் பாடல் எழுதுகிறார் இவர்.

அண்ணன் செல்வாக்கால் முன்னணிக்கு வருகிறார். தனித்து இயங்க முடியாதவர்.

ராசா, ரோசா, வாடி, போடி, ஆயா பாயா, கப்பங் கிழங்கு போன்ற வார்த்தைகளையே அடிக்கடி பயன் படுத்தக் கூடியவர். பாடல்களில் கொச்சைப் புரட்சி பண்ணியவர். பசுமைப் புரட்சி பண்ணினால் பெருமை இருக்கிறது. கொச்சைப் புரட்சியில் அசிங்கம்தான் இருக்கும்.

ஹை கிளாஸ் காரில் போகும் இவர், லோ கிளாஸ் பாடல் எழுதி மக்களைக் கெடுக்கிறார். ஆகாய விமானத் திற்குள் கட்டை வண்டி ஓட்டுகிறார் கங்கை அமரன்.

சுரதாவைச் சந்தித்தவர் : துரை. ராமச்சந்திரன்
இதழ் : குமுதம்; 23-11-1989

## சவுதி அரேபியாவில் சுரதா!

சவுதி அரேபிய நாட்டிலுள்ள சார்ஜாவில் 'தமிழ்நாடு பண்பாட்டுக் கழகம்' என்ற ஓர் அமைப்பு இருக்கிறது.

இந்த அமைப்பு ஆண்டு தோறும் 'குடும்ப விழா' என்ற பெயரில் அங்குள்ள தமிழர்களைஎல்லாம் ஒன்றுகூட்டி ஒரு விழாவினை நடத்துகிறது அப்படி நடத்தும்போது தமிழ் நாட்டில் இருந்து ஒரு சிறந்த கவிஞரை அழைத்து ஆண்டு தோறும் சிறப்பிக்கிறது.

இந்த ஆண்டு அந்த எண்ணெய் நிலத்திற்குச் சென்று வந்திருப்பவர் உவமைக் கவிஞர் சுரதா.

அவர் சொல்கிறார்...

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நம்மவர்கள் எப்படி ஒற்றுமையோடு தமிழைப் போற்றுகிறார்கள் என்பதை நேரில் நான் கண்டேன்.

முன்பு மலேசியாவிற்குச் சென்றிருந்தபோது வீட்டுக்கொரு கல்வெட்டு வைக்க வேண்டும் என்று சொன்னேன் ஒரு சில வீடுகளில் அப்படி கல்வெட்டையும் திறந்து வைத்தேன்.

இதே போல சார்ஜாவில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இ.ரெ. சாமிநாதன் என்பவர் நடத்தும் சஃபையர் உணவகத்தில்,

'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது!'

என்ற குறளைத் திறந்து வைத்தேன்.

இத்திட்டத்தின்படி வீட்டுக்கொரு திருக்குறள் என்ற அடிப்படையில் செயல்படத் தொடங்கி விட்டார்கள்.

என்னை விழாவிற்கு அழைத்த நண்பர்களிடம் சொன்னேன், பாரதிதாசனின் நூற்றாண்டு வருகிறதே அதனால் தற்போது அவரைக் குறித்து 'நான் கண்ட பாரதி தாசன்' என்ற பெயரில் கவியரங்கம் ஒன்று தொடங்கினால் என்ன என்றேன்.

உடனே அவர்களும் என் தலைமையில் நாளையே நடத்தலாம் என்று ஒப்புக் கொண்டனர்

மண்டபத்திலும், தரையிலும்தானே கவியரங்கம் மேடை போட்டு நடத்தியிருக்கிறோம். இங்கே அதை மாற்றினால் என்ன என்று சிந்தித்தபடியே நண்பர்களுடன் சென்ற என் கண்ணில் நீரிலேயே மிதந்து சென்ற விசைப் படகு தென்படவே – 'நீரில் மிதக்கும் இந்த விசைப் படகிலேயே கவியரங்கத்தை நடத்தலாம்' என்ற எண்ணத்தைச் சொன்னேன்.

அதன்படியே இரண்டு விசைப்படகு மறுநாள் வாடகைக்குத்தயாரானது. ஒன்றில் கவிஞர்களும், மற்றதில் சுவைஞர்களும் ஏறி நீரில் வலம் வந்தபடியே கவியரங்கம் நடத்தினோம்.

உலகத்தில் முதன் முதலாக நீரில்— படகில் நடந்த கவியரங்கம் இது.

பாரதிதாசனைப் பற்றி ஔபது ஆண் கவிஞர்களும், மூன்று பெண் கவிஞர்களும் பங்கு பெற்றார்கள். இதில் விஜயலெட்சுமி என்ற கவிஞர் பட்டுக்கோட்டையாரின்

உறவினர். அங்கு பணி புரியும் மு. கா. ஷரிப் என்பவர் கவி கா. மு. ஷரிப்பின் மகன்.

இந்த நிகழ்ச்சியை விடியோ படமாக எடுத்திருக்கிறார்கள். படகில் பாடிய அந்தக் கவிதைகளெல்லாம் நூலாகவே வர இருக்கிறது.

இந்த அமைப்பு மேலும் ஒரு வியப்பான காரியத்தைச் செய்ய இருக்கிறது.

அதாவது, பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை ஒட்டி அவரைப் பற்றி ஒரு கவிதைப் போட்டி ஏற்பாடு செய்திருக்கிறது... இதில் உலகத்தில் உள்ள தமிழ்க் கவிஞர்கள் யார் வேண்டுமானாலும் பங்கு பெறலாம்.

பரிசுத் தொகையோ பத்தாயிரம். இத்தோடு மீண்டும் படகுக் கவியரங்கத்தைத் தொடர்ந்து ஒரு முறைக்குப் பத்து பேர் வீதம் நூறு கவிஞர்களைப் பாட வைக்கப்போகிறாராம் இவ்வமைப்பின் தலைவர் ஜெகநாதன்.

சுரதாவைச் சந்தித்தவர் : பாபநாசம் குறள்பித்தன்
இதழ் : தாய், 31-12-1989

## உவமைக் கவிஞர் சுரதாவுடன்

தமிழகத்தில் பல துறைகளில் புரட்சிக்கனலை வளர விட்டு மூட நம்பிக்கைகளுக்குச் சாட்டையடி கொடுத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிப்பாசறையில் பாடம் பயின்று இன்றும் அவரது கொள்கைகளுக்கு அணிசெய்யும் 'உவமைக்கவிஞர் சுரதா' அவர்களை அவர்களது இல்லத்தில் சந்தித்தோம். நம் வாழ்வு, வார இதழுக்குப் பேட்டி காண வந்துள்ளதைக் கூறியதும் அன்புடன் வரவேற்று நமது கேள்விகளுக்குச் சற்றும் சலிக்காமல் பதிலளித்தார்.

கேள்வி : நீங்கள் கவியுலகில் காலடி வைத்த காலமும், சூழலும் பற்றிச் சொல்லுங்களேன்?

பதில் : 1940-லேயே கவியுலகிற்கு நான் வந்து விட்டேன். அப்போதிருந்தே பல்வேறு இதழ்களில் எழுதினேன். கவியுலகைவிட திரையுலகில் எனக்கு ஆர்வம் இருந்தது. அதற்கேற்றாற் போல் வாய்ப்பும் கிடைத்தது. என்னுடைய சின்ன வயதிலேயே மங்கையர்க்கரசி படத்திற்கு வசனம் எழுதினேன். என்னுடைய முதல் திரைப்படப் பாடல், "ஆடும் ஊஞ்சலைப் போலே" எனத் தொடங்கும் பாடலாகும். அதற்கு முன்பே 'சாவின் முத்தம்' என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. அந்த காலச்சூழ்நிலை பற்றிச் சொல்ல வேண்டுமானால் இப்போது உள்ளதுபோல அன்று அதிகமான

கவிஞர்கள் இல்லை. வாய்ப்பு எளிதாக கிடைக்கும் சூழல் அன்றிருந்தது.

கேள்வி : பாரதிதாசனுக்கும் உங்களுக்கும் இடையே என்ன தொடர்பு?

பதில் : 1938-ல்'பாரதிதாசனின்கவிதை'எனும் நூல்வெளி வந்தது. அதை நான் படித்தபோது வெகுவாகக் கவரப்பட்டேன். அதிலிருந்து அவரைப் பின் தொடர்ந்தேன். பிறகு 1941-ல் பொங்கல் திருநாளில் அவரை நேரில் போய் வாழ்த்தினேன். அதிலிருந்து தொடர்பு ஏற்பட்டது. பாரதிதாசன் பரம்பரையென்று 47 பேரு இருக்காங்க. அவர்கள் இருந்த போதும் அவருடைய பெயரை வச்சிக் கணும்கிற எண்ணம் என்னைத்தவிர வேறு யாருக்கும் வரவில்லை. சுப்பு ரத்தின தாசன் என்பதைச் சுருக்கி 'சுரதா' என்று ஆக்கிக் கொண்டேன். எனது இயற்பெயர் இராச கோபாலன்.

கேள்வி : பாரதிதாசனின் கொள்கையை எந்த அளவில் இன்று கைக்கொண்டுள்ளீர்கள்?

பதில் . புரட்சிக் கவிஞர் ஏற்படுத்திய புரட்சித் தீயை இன்று எனது கவிதைகள் வழியாக அணையாமல் காத்து வருகிறேன். சாதி, மத, இன வேறுபாடு களுக்கு அப்பாற்பட்டு நிற்கிறேன். கடவுள் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். காரணம் அது எனக்குத் தேவை இல்லை என்பதால்.

கேள்வி : சரி, நீங்கள் சமூக அநீதிகளுக்குச் சாட்டையடி கொடுத்தவற்றில் ஒரு சான்றைக் குறிப்பிடுங்கள்?

பதில் : எத்தனையோ கவிதைகள் புனைந்துள்ளேன். அதில் சான்று என்று எதனைக் குறிப்பிடுவது?

எனக்கு அதுதானே வேலை, எனது படைப்புகள் எல்லாம் அதற்குச் சான்றுகள் தாம்.

கேள்வி : உங்களை 'உவமைக் கவிஞர்' என அழைக்கக் காரணம்?

பதில் : எனது கவிதையாற்றில் பல உவமைத் தோணிகள் பவனி வரும். ஜெகசிற்பியன் தான் 'உவமைக் கவிஞர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

கேள்வி : இன்றைய திரைப்படப்பாடல்கள்-திரைப் படங்கள் பற்றி உங்கள் கருத்து?

பதில் : நன்முறையில் வளர்ந்திருக்கிறது. சிலர் ஒப்பிட்டுக் கூறும்போது குறைத்து மதிப்பிடக் கூடும். இதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நீங்க நினைக்கிற மாதிரி நாம் நினைக்கும் கருத்தை திரைப்படத்திலோ அல்லது திரைப்படப் பாடல் களிலோ வெளிப்படுத்த முடியாது. சொந்த நூலில் என்றால் விரும்பும் கருத்தை வலியுறுத்தலாம். திரைப்படம் என்றால் அவர்கள் கேட்பதைத் தான் எழுத வேண்டும். எனவே திரைப்படக் கருத்துகள் கவிஞனின் சுய சிந்தனை என்று மதிப்பிட இயலாது.

கேள்வி : இன்று இசையாற்றில் ஆபாச சாக்கடை கலக்கப் படுவது உங்களை உறுத்தவில்லையா?

பதில் : அன்று பக்தியைப் பற்றி எழுதினார்கள். அது மட்டும் சரியா? ஆபாசம் என்று சொல்லும்போது அதை விரும்பும் மக்களைப் பொறுத்தது. இன்று மக்கள் அதனை விரும்புகிறார்கள். அதனால் கவிஞர்கள் எழுதுகிறார்கள். திரைப் படம் என்பது பொழுது போக்குத் தானே. எனவே குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை. கவர்ச்சி என்பது எல்லாகாலத்திலும் எல்லாதரத்தினராலும்

விரும்பப்படுகின்ற ஒன்று. ஆகையினாலே ஆபாசம் பாடல்களில் இல்லை, மக்களின் மனதில் தான் உள்ளது. முகத்தில் புண் இருக்கிறது என்பதற்காக முகமே நன்றாக இல்லை என்று சொல்லிவிட முடியுமா?

**கேள்வி :** அக்கால திரையுலகத்தையும் இக்கால திரையுலகத்தையும் ஓர் ஒப்பாய்வு செய்கிற போது இக்காலம் தரம் குறைந்துள்ளதே?

**பதில் :** அப்படிச் சொல்லி விட முடியாது காலத்தின் தேவைகளுக்கும், கட்டாயத்திற்கும் ஏற்ப மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். எனவே ஒப்பாய்வு என்பது தேவையற்றது. ஒவ்வொரு காலத்திலும் அந்தந்தகாலத்துசுவைக்கு ஏற்ப படைக்கிறார்கள்.

**கேள்வி :** இப்போது உங்களைத் திரையுலகில் பார்க்க முடியவில்லையே?

**பதில் :** அரசியலில் முன்னாடி வேட்பாளராக நின்னவரு இன்று நிற்க மாட்டாரு. அது போலத்தான் நானாக நிறுத்திக் கொள்ளவில்லை. அழைப்பு வந்தால் இன்றும் தயாராக உள்ளேன். வருங்கால இளந்தலைமுறைகளுக்கு வழிவிடுவோம் என்னும் எண்ணமும் என்னுள் இருக்கிறது.

**கேள்வி :** இன்று உங்களுக்கு வாய்ப்பு இல்லாமைக்குக் காரணம் உங்கள் கருத்து அவர்களுக்குப் பிடிக்க வில்லையா? அல்லது அவர்களின் விருப்பத்திற்கு நீங்கள் எழுதாததாலா?

**பதில் :** அப்படியொன்றுமில்லை. நாலு பேர் இருந்தால் நாலுபேரையும் கூப்பிடுவார்கள். நூறு பேர் இருக்கும் போது எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்க வாய்ப்பில்லை.

கேள்வி : மரபுக் கவிதைகள் மட்டுமே புனைகிறீர்கள். இன்று மரபுக் கவிதைகள் பெரும்பாலான மக்களை அடைய வாய்ப்பில்லையே?

பதில் : எனக்கு மரபுக் கவிதை தெரியும்; அதனால் மரபுக் கவிதை புனைகிறேன். புதுக்கவிதை எனக்குப் புனைந்து பழக்கமில்லை. கவிதை எல்லோரையும் அடையும் என்று சொல்லிவிட முடியாது. கவிதை என்பது ஒரு மனிதனின் அன்றாட முக்கிய தேவையில்லையே!

கேள்வி : இலக்கியம் படைப்பதற்கும் திரைப்படத்திற்குப் பாடல் எழுதுவதற்கும் என்ன வேறுபாடு?

பதில் : என்னைப் பொறுத்தவரையில் இரண்டுமே இலக்கியம்தான். திரைப்படம் என்பது ஓர் எளிய இலக்கியம். எளிய மக்களை அடையும் இலக்கியம்.

கேள்வி : இன்றைய இலக்கியம் வியாபார நோக்கமாகி விட்டதே?

பதில் : இலக்கியம் என்றும் வியாபார நோக்கு கொண்டது தான். பழங்கால புலவர்கள் பாட்டெழுதிவிட்டு மன்னன் மாளிகை நோக்கி நடந்தது ஏன்? இலக்கியத்தைப் பொருளாக்கித்தான். பரிசாகக் கொடுக்கப்பட்டது என்றாலும் அது இலக்கியத்துக்கு அளிக்கப்பட்ட விலைதான். எனவே எல்லாமே விலைக்காகத்தான்.

கேள்வி : சமுதாய மாற்றத்திற்குக் கவிஞர்களின் பங்கு எத்தகையது?

பதில் : இன்றைய சூழலில் எந்தப் பங்கும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இன்று பலரும் கவிதை அலங்காரத்தையும் வார்த்தை ஜாலங்களையும் ரசிக்கின்றனர். கருத்தை யாரும் ரசிப்பதில்லை.

பிறகு எப்படி சமுதாயத்தை மாற்றமுடியும். எனவே மக்கள் கவிதையின் கருத்தை ரசிக்காத பட்சத்தில் இலக்கியவாதியால் எந்தப் பாதிப்பை யும் சமுதாயத்தில் ஏற்படுத்த முடியாது.

**கேள்வி :** வாசகர்களுக்குக் கூற விழைவது?

**பதில் :** வாசகர்களுக்கு என்ன கூறுவது? அவர்கள் நான் சொல்லி எதையும் பின்பற்றப் போவதில்லை. படிப்பார்கள். தெரிந்து கொண்டிருப்பார்களே தவிர எதையும் செய்யமாட்டார்கள். மூட நம்பிக்கை இருக்கும் தேசத்தில் நான் எதையும் கூற விரும்பவில்லை. மக்களுக்குச் சிந்தித்து செயல்படுகிற மனப்பக்குவம் இன்னும் வர வில்லை என்பதே என் வேதனை.

சுரதாவைச் சந்தித்தவர் : எம். டேவிட் மைக்கேல்,
இதழ் : நம் வாழ்வு, 4-2-1990

## கவிஞருக்குப் பிடித்த கவிதை

ராமலிங்க அடிகளுக்குப் பிறகு, பாமர மக்களுக்கும் புரியும்படி கவிதை எழுதிய சித்தன் கண்ணதாசன். ஒன்றிரண்டு அல்ல; ஐயாயிரம் கவிதையை எழுதிய படைப்பாளி.

இதை பயிற்சியிலும், முயற்சியிலும் பெற்று வெற்றி யடைய முடியாது. கருவிலேயே கருத்துடையவனாக இருந்த தால்தான் நினைவில் நிற்கிறார் கண்ணதாசன்.

'தென்றல் வீசும்' என்ற படத்தில் வருகிற பாட்டில்—

"எல்லோரும் வாழ்கவென்று
உலகம் பிறந்தது—இதில்
ஏழையென்றும் செல்வனென்றும்
கலகம் வளர்ந்தது
நல்ல மனதில் பொன்னும் பொருளும்
நஞ்சும் கலந்தது—வெறும்
நாடகம் போல் வாழ்க்கையெல்லாம்
வேஷம் நிறைந்தது..."

கற்காலத்துக்குப் பிறகு, இலக்கிய காலத்தில் இருந்து இந்த விஞ்ஞான காலம் வரை இந்தக் கருத்து இங்கும், எங்கும்; இன்றும், என்றும் பொருத்தமானது; பொருத்த மாகவும் இருக்கிறது.

மகாத்மாவாக இருந்தாலும் வேஷத்தில் இருந்து மாறப் போவதில்லை. இதைப் பாடிய கவிஞனும் குற்றவாளிதான். இந்தப் பாடலுக்குக் கருத்துச் சொல்கிற நானும் குற்றவாளி தான்.

ஆக-

இந்தக் கவிதை அரிய நீதிபதியாக இருந்து உலகில் உள்ள அனைவரையும் தண்டித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

*சுரதாவைச் சந்தித்தவர் : நாகராஜகுமார்.*
*இதழ் : சுபமங்களா, 15-3-1990*

## காசு கொடுத்தால்
## நீ கூட கவியரசுதான்!

'கண்ணில் வந்து
மின்னல் போல் தோணுதே
இன்ப காவிய கலையே ஓவியமே'

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா'

'அமுதும் தேனும் எதற்கு—நீ
அருகினிலே இருக்கையில் எனக்கு...'

'நெருங்கி, நெருங்கி பழகும் போது
நெஞ்சம் ஒன்றாகும்.'

என்பன போன்ற பல திரைப்படப் பாடல்களைப் பாடிய உவமைக் கவிஞர் சுரதா அவர்களை இளமையான ஒரு பகல் பொழுதில் சந்தித்த போது —

**கேள்வி :** இன்றைய திரைப்படப் பாடல்களின் தரம் எப்படியிருக்கிறது?

பதில் : தரத்தைச் சொல்லக் கூடிய அளவில் இன்றைய பாடல்கள் இல்லை. அன்றைய பாடல்கள் பொன்னால் செய்யப்பட்ட நகையைப் போன்றது. இன்றைய பாடல்கள் கவரிங் நகையைப் போல...

**கேள்வி :** கண்ணதாசன் பல பாடல்களை காப்பி அடித்து எழுதி இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்... வைரமுத்து, காமராசன் போன்றவர்கள் எப்படி?

பதில் : வைரமுத்து, காமராசன் போன்றவர்களும் காப்பி அடித்து எழுதியிருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது.

கண்ணதாசன் அதிகமான பாடல்களை எழுதினார். அதனால் அதிகமாக காப்பி அடித்தார். ''கடவுள் மனிதனாக பிறக்க வேண்டும்'' — என்று 1956-ல் கே. பி. காமாட்சி என்பவர் எழுதினார். இதே பாடலை 1966-ல்கண்ணதாசன் எழுதியிருக்கிறார். இப்படி கண்ணதாசன் காப்பி அடித்த விபரங்களை நூறுபக்கம் வரை எழுதியிருக்கிறேன் காப்பி அடித்து எழுதுவதில் கண்ணதாசன் முதன்மையானவர். அவருக்கு அடுத்தது 'மருத காசி'. இப்படி ஒரு நீண்ட பட்டியலே இருக்கு...இதுல இந்த வைரமுத்து, காமராசன் கொஞ்சம் தான் எழுதியிருக்காங்க. அதனாலே கொஞ்சமாகதான் காப்பி அடிச்சிருக்காங்க....

கேள்வி : இன்றைய பாடல்களில் இலக்கிய தரம் இருக்கிறதா?

பதில் : இன்றைய பாடல்களில் இலக்கியம் கிடையாது. அன்றைய பாடல்கள் வீட்டுச் சாப்பாடு மாதிரி. இன்றைய பாடல்கள் ஓட்டலில் எடுப்பு சாப்பாடு மாதிரி. சோழர் காலத்து பொற் பதக்கம் இந்தக் காலத்தில் யாரும் எதிர்பார்க்க முடியாது.

கேள்வி : தற்போது நீங்கள் சினிமாவில் பாடல் எழுதுவது இல்லையே... ஏன்?

பதில் : நான் எழுத மாட்டேன் என்று சொல்லவில்லை. புதிய தலைமுறைக்கு என்னைத் தெரியவில்லை போலும். அன்றைய கால கட்டத்திலேயே நான் யாரையும் தேடிப்போய் ஐஸ் வைத்து காக்காய் பிடித்து அலையவில்லையே.

கேள்வி : பல இனிய பாடல்களை எழுதியிருக்கிறீர்கள் நீங்கள் எழுதிய அத்தனை பாடல்களும் 'சூப்பர்ஹிட்' ஆக இருந்தும் உங்களுக்கு வாய்ப்புகள் அதிகப்படியாகக் கிட்டாமல் போனது ஏன்?

பதில் : சினிமா பட வாய்ப்பு என்பது செல்வாக்கைப் பொறுத்தே இருக்கு, கண்ணதாசன் மாதிரி செல்வாக்கு, பேக் ரவுண்ட் ஏ.வி எம். செட்டியார்? ஏ. எல். எஸ், செட்டியார்னு பல பேர் சாதிக்காரங்க இருந்தாங்க. எனக்கும்இப்படி செல்வாக்கு இருந்திருந்தா நானும் திரைபடத் துறையிலே இன்றளவும் நிலைத்திருப்பேன். இதுல இன்னொரு விஷயம். வடநாட்டுக்காரன் நல்ல திறமையுள்ளவனா என்று பார்க்கிறான். நம்ம நாட்டுக்காரன் நம்ம ஜாதிக்காரனா இவன்னுபார்க்கிறான். எப்படி அடுத்தவன் வாழுறது.

கேள்வி : உங்கள் முன்னேற்றத்துக்கு நிறைய முட்டுக்கட்டை இருந்ததுன்னு சொல்றீங்களா?...

பதில் : என்ன அப்படி மெதுவா கேட்டுட்டே, நிறைய பொறாமைப் பிடிச்சவங்க தமிழர்கள். எனக்கு வந்த பட வாய்ப்பை இந்த கண்ணதாசனே பறிச்சிருக்கிறார்.

"அம்பிகாபதி" படத்தை கண்ணதாசனின் அண்ணன் ஏ.எல். சீனிவாசன் எடுத்தார். அப்போ அந்தப்படத்துக்கு என்னை ஒரு பாடல் எழுதச் சொன்னார் நானும் எழுதிக் கொடுத்தேன். அடுத்த நாள் 'ரிகார்டிங்'. இந்த கண்ணதாசன் என்ன செஞ்சார் தெரியுமா...நேரா ஏ. எல். சீனிவாசன்கிட்டே போய், நீ எனக்கு அண்ணன், உன்னுடைய படத்துல உன் தம்பியான என்னை விட்டுட்டு யாரையோ பாடல் எழுத சொல்லலாமா என்று சண்டை போட்டு அந்த வாய்ப்பையும் பறிச்சிட்டார்.

கேள்வி : வைரமுத்துவுக்கு கவியரசு பட்டம் தந்தது பற்றி?...

பதில் : காசு கொடுத்தா உன்னையும் கவியரசு ஆக்கி விடுவாங்க.

கேள்வி : இளைய ராஜாவைப் பற்றி உங்கள் கருத்து?

பதில் : இளையராஜா நல்ல திறமையான இசையமைப்பாளர்தான். ஆனால் ஒரு சில கவிஞர்களுக்கு மட்டும் அழைத்து பாடல் எழுத சொல்றது சரியில்லே...திறமையுள்ள கவிஞர்களைக் கூப்பிட்டு ஒரு படத்துக்கு நாலு பாட்டுன்னா நாலு கவிஞர்களுக்கும் வாய்ப்பு தரலாமே...பாரதிதாசன் நூற்றாண்டான இந்த சமயத்திலாவது பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களைத் திரையுலகம் பயன்படுத்திக் கொள்வது பாரதிதாசனுக்குச் செலுத்தக் கூடிய மரியாதையாக இருக்கும்.

சுரதாவைச் சந்தித்தவர் : இ. சபீதாஜோசப்
இதழ் : திரைச்சிற்பி ரஜினி, ஏப்ரல், 1990

# வேண்டாம் தலைவன் வழிபாடு!

மகிழ்ச்சியான மனம் உடையவர்களுக்குத்தான் ஆரோக்கியமான உடல் இருக்கும் என்பார்கள்.

"உங்கள் அனுபவத்தில் மனமகிழ்ச்சிக்கு என்ன வழி?" என்று சில கலைஞர்களிடம் கேட்டபோது....

**கவிஞர் சுரதா :**

"அதிகமாகச் சிந்திக்க முடியாதவர்கள் வாழும் சமுதாயத்தில் 'தலைவன் வழிபாடு' (Hero Worship) புகுந்துவிடுகிறது. ஒருவனுக்கே எல்லாம் தெரியும் என்ற எண்ணக்கேடுகள், மற்றவர்களின் சிந்தனா சக்தியை வற்றச் செய்துவிடுகின்றன. சுயசிந்தனைச் சக்தியை இழந்தவனுக்கு மன அமைதி இருக்க முடியாது. எதையோ நினைத்துக் கனவு கண்டு கொண்டிருக்கும் மனம் சிறு சிறு ஏமாற்றங்களைக்கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விடுவதுதான் இதற்குக் காரணம்.

வாழ்க்கையில் நமக்கு வேண்டிய தேவைகளை முன் கூட்டியே நிர்ணயித்துக் கொண்டுவிட்டால் மன மகிழ்ச்சி கெடாது. மகாத்மா காந்தி தன் உடைகளையும் உணவு

வகைகளையும் கூட முன் கூட்டியே நிர்ணயித்துக் கொண்டு விட்டதால், தெளிவாகச் சிந்தித்துப் பெரும் வெற்றி காண முடிந்தது.

சலன புத்தி மன அமைதியைக் கெடுத்து விடுகிறது. ஒப்பிட்டுப் பார்க்கும் குணமுள்ளவர்கள் மன அமைதியை இழக்கிறார்கள். நமக்குக் கிடைத்ததை வைத்துத் திருப்தி யடையாமல், மற்றவனுக்குக் கிடைத்ததை நினைத்து மனப்புழுக்கம் அடைபவன் சந்தோஷத்தை இழக்கிறான்.

நல்ல கருத்துகளைத் தேர்ந்தெடுத்து 'இதுவாழ்க்கைக்குப் போதும்...' நல்ல பொருட்களைத் தேர்ந்தெடுத்து 'இது வீட்டுக்குப் போதும்...' நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து இவர்கள் நம் சிந்தனைக்குப் போதும்...' என்று முன் கூட்டியே தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டால் குழப்பம் நீங்கி மன மகிழ்ச்சி நிச்சயம் கிடைக்கும்.''

சுஜாதாவைச் சந்தித்தவர் : எஸ். ராமன்
இதழ் : ஆனந்தவிகடன், 13-5-1990

## பிறந்த நாள்! சிறந்த நாள்!

வழக்கமாக அறிமுக அட்டையில் (விசிட்டிங்கார்டு) அவரவர் பெயர்களை மட்டுமே அச்சிடுவார்கள். ஆனால், உவமைக் கவிஞர் சுரதா அவரது அட்டையில் தனது பிறந்த நாளை (23-11-1921) அச்சிட்டுள்ளார்! அதோடு "சிறந்த நாள்" (14-1-1941) என்றும் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்!

---



**தொலைபேசி : 428508**

உவமைக் கவிஞர் **சுரதா**
**தலைவர்**
**உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை**

56 அ, இலட்சுமணசாமி சாலை
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை-600078

பிறந்த நாள்
**23-11-1921**
சிறந்த நாள்
**14-1-1941** பாவேந்தரை நான் சந்தித்த நாள்

---

"அது என்ன 'சிறந்த நாள்'" என்று கேட்டதற்கு,

"என் வாழ்க்கையிலேயே சிறந்த நாள் அதுதான். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை அன்றுதான் (14-1-1941) நான் சந்தித்தேன்" என்று சுரதா சொன்னார்.

5 வயது ஆகும் தன்னுடைய பேரன் இளங்கோவனுக்கும் இதேபோல் அட்டை அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார், சுரதா. அதிலும் பிறந்த நாள் (6-9-1984), சிறந்த நாள் (8-1-1989) என்று குறிப்பிட்டுள்ளார். இளங்கோவன் தொலைக்காட்சியில் தோன்றிய நாள்—8-1-1989.

சுரதாவைச் சந்தித்தவர் : ராணி நிருபர்
இதழ் : ராணி, 16-12-1990

## மலரும் நினைவுகள்

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள், நாடறிந்த நற்கவிஞர். புரட்சிக் கவிஞர் பூஞ்சோலையில் பூத்த நறுமலர். 'சுவரும் சுண்ணாம்பும்' போல் புரட்சிக் கவிஞரோடு இணைந்து, அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டியவர். 'தேன் மழை'யாய் தெள்ளுத்தமிழ்க் கவிதையால், கவிதை உலகின் மகுடமாய் விளங்குபவர். 'வாழையடி வாழையாக' வந்த திருக்கூட்டம் என்பது போல, பாரம்பரியம் மிக்க பாவேந்தர் பரம்பரையிலே வந்த பாட்டுப் புலவன்.

பாரதிக்கு ஒரு தாசன்-பாரதிதாசன்; அந்தப் பாரதி தாசனுக்கு ஒரு தாசனாக விளங்கும் சுப்புரத்தின தாசனுக்கு-சுரதா-உவமைக் கவிஞர் சுரதாவுக்கு-தமிழக அரசின் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கிச் சிறப்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைச் சந்தித்தோம். அந்தச் சந்திப்பில் ஏற்பட்ட சிந்தனைச் சிதறல்களே இவை...

தமிழ்ப்பூக்காட்டில், புரட்சி மலர்க்கவிதைகள் பூத்துக் குலுங்கிய புதுவை மண்ணில் தோன்றிய விடிவெள்ளிதான் பாவேந்தர் பாரதிதாசன்.

### எளிமையும் புதுமை நோக்கும்

மகாவித்துவான் பெரியசாமிப் பிள்ளை மாணவர்கள் 19 பேர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான் நம்முடைய

பாவேந்தர்; மகாவித்துவான் பெரியசாமிப் பிள்ளைக்குப் பெரும்புகழ் தந்தவரே பாவேந்தர்தாம். பெரியசாமிப் பிள்ளையின் மாணவர்களுள் பங்காரு பத்தர் என்பவரும் ஒருவர் அவரிடமும் பாவேந்தர் பாடங்கேட்டார். பங்காரு பத்தரின் எளிமையும், பாரதியாரின் புதுமை நோக்கும் பாவேந்தரைக் கவர்ந்தன. அவற்றை வாழ்க்கையில் இறுதி வரை கடைப்பிடித்தும் வந்தார்.

பாவேந்தர், தம் கவிதையைப் போலவே எளிமையாக வாழ்ந்தார், வாழ்ந்தும் காட்டினார். 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்' என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க, அவர் எல்லாரையும் மதித்தார். அந்தஸ்து பார்க்க மாட்டார். தெருவில் போகிற வனையும், 'இவனே....' என்று கூப்பிட்டு, தம் பாட்டைப் பாடிக் காட்டி, 'நல்லா இருக்கா?' என்று கேட்பார். அவன் 'நல்லா இருக்கு' என்று சொன்னதும் மகிழ்ச்சிகொள்வார். இப்படி இவரது பாடல் தெருவிலேயே அரங்கேற்றம் ஆகும்!

பாவேந்தர், யானையைப் போல கம்பீரமாக நடப்பார். நிதானம் தவறமாட்டார். அவசரப்பட மாட்டார்.

அவரது உணர்வு தமிழ் உணர்வு. இறுதிவரை அந்த உணர்வே அவருக்கு உணவாகியது. 'தமிழன் நாட்டை ஆளவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். 'எல்லாத் துறைகளிலும் தமிழனே வரவேண்டும்' என்பது அவரது தணியாத தாகம்.

## பாட்டுலகில் ஒரு புரட்சி

அவருக்குப் பேசும் மேடையே வீட்டுத் திண்ணைதான். திண்ணையில் உட்கார்ந்துகொண்டு எல்லாரிடமும் மனம் விட்டுப் பேசுவார். தம் சிந்தனையையும் கூறுவார். பிறகு அதைக் கவிதையாக்குவார்.

ரிக்ஷாக்காரன், விறகு வெட்டி எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுவார். அவர்களுடைய பெயர் வடமொழியில்

இருந்தால், அதைத் தமிழில் வைத்துக் கொள்ளும்படி கூறுவார். தமிழ் உணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும்.

அதேபோல, மொழிப் பற்றும் அவரது உயிரில் கலந்திருந்தது. பாரதிதாசன் பரம்பரையை உருவாக்கிய 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு, அந்தப் பெயரை வைத்தவரே பாவேந்தர்தாம்.

எல்லாச் சொல்லும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று கூறுவார். நூல் தலைப்புங்கூட தமிழில் இருக்க வேண்டும் என்பார்.

கீர்த்தனைகள் என்பது இறைவனையும், மன்னனையும் புகழ்ந்து பாடவுமே அன்று இருந்தது. அதை மாற்றியமைத்தவர் பாவேந்தர். அவர் வண்டிக்காரனுக்கும், தபால்காரனுக்கும், பூப்பறிப்பவனுக்கும் கீர்த்தனைகள் பாடி பாட்டுலகில் ஒரு புரட்சியையே உண்டாக்கினார். ஆம். எல்லாத் தொழில் துறைக்கும் கீர்த்தனை-இசைப்பாடல்கள் கொண்டு வந்த பெருமை இவருக்கு உண்டு. இது ஒரு பெரிய திருப்பம். 'இசையமுது' என்னும் நூலில்,

> "அதோ பாரடி அவரே என் கணவர்
> புதுமாட்டு வண்டி ஓட்டி
> போகின்றார் என்னை வாட்டி"

—என்று மாட்டு வண்டிக்காரனைப் பாடுகிறார்.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளுக்குப் பிறகு, கவிதைகளில் தமிழே கோலோச்ச வேண்டும் என்று நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்தவர் பாவேந்தர்தாம்.

**கவிதையிலேயே நாடகம்!**

'எதிர்பாராத முத்தம்' தான் 'பொன்முடி' என்னும் நெடுங்காவியம். இது திரைப்படமாக வெளிவந்தது. இதற்கு முன் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின்

'மனோன்மணீயம்' திரைப்படமாகியுள்ளது. ஆனால் அப்போது அவர் இல்லை. ஒரு காவியம், முதன் முதலில் வாழும் காலத்திலேயே - திரைப்படமாகியது பாவேந்தருடையதுதான் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

பாவேந்தர் அவர்கள் தனிப்பாடல்கள் நிறைய எழுதியுள்ளார். பாவேந்தர் உணவகத்திற்குச் செல்வார். அங்கு யாரேனும் இவரைப் பார்த்து, 'ஐயா, ஒரு பாட்டு தாங்க!' என்று கேட்பார்கள். உடனே அங்கேயே ஒரு பாட்டை எழுதித் தருவார். இப்படி ஏராளமான பாடல்கள் சேர்ந்தன.

தமிழ் நாட்டில் உரையாடலின்றி, முழுக்க முழுக்க கவிதையிலேயே நாடகம் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசன்தாம். அதுதான் 'புரட்சிக் கவி' என்னும் கவிதை நாடகம். 1944-இல் சேலத்திலும், நாமக்கல்லிலும் ஆறு நாட்கள் இந்த நாடகம் நடந்தது. இந்திய வரலாற்றில், இலக்கிய உலகில் கவிதையிலேயே 2 மணி நேரம் நாடகம் நடந்தது அதுவே முதல் தடவை. இந்த நாடகத்துக்குத் தந்தை பெரியார் அவர்கள் தலைமை வகித்துப் பாராட்டினார். இதேபோல, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், சேலம் அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் இராமசாமி கவுண்டர் ஆகியோர் இந்த நாடகத்துக்கு ஒவ்வொரு நாளும் தலைமை வகித்து வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள் இந்த நாடகத்தில்நானும் நடித்திருக்கிறேன் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

இந்நாடகத்தில் வரும் ஒரு உரையாடல்:-

தோழி : கன்னம் சிவக்கக் காரணம் என்ன?

தலைவி : புன்னை மலர்கள் இன்னல் புரிந்தன!

தோழி : ஆடை அவிழக் காரணம் என்ன?

தலைவி : ஓடும் மான் கொம்பால் ஈட்பிழிந்தது.

— இவ்வாறு இந்தக் கவிதை உரையாடல் தொடரும்.

## பன்மொழியில் பாடல்கள்

பாவேந்தர் காலத்திலேயே அவரது படைப்புகள் பன்மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. தெலுங்கு, பிரெஞ்சு ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவை மொழி பெயர்க்கப் பட்டு இருக்கின்றன. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களும், எஸ். வேதரத்தினம் அவர் களும் பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். கமில்சுவலபில் என்னும் செக்கோஸ்லோவேகியா தமிழறிஞர் தம் மொழியில், பாவேந்தர் கவிதைகளை மொழி பெயர்த்து உலகறியச் செய்துள்ளார்.

தம் நூலுக்கு 'அணிந்துரை' வேண்டும் என்று யார் வந்து கேட்டாலும், அதற்குத் தடை சொல்லாமல் எழுதித் தருவார். 'நிறைய படியுங்கள்' என்று ஊக்கப்படுத்துவார். கடற்கரைக்கு அழைத்துப் போய், 'நிலவுப் பாட்டு எழுதப் போறேன், நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்பார்,

'பத்திரிகைக்குத் தலைப்பு என்ன வைக்கலாம்?' என்று கேட்பார். 'இந்தக் கவிதைக்கு என்ன தலைப்பு வைத்தால் நல்லா இருக்கும்?' என்றும் யோசனை கேட்பார். அதற்கு அவர்கள் சொன்ன தலைப்புகள் நன்றாக இருந்தால், அதையே வைத்து விடுவார். திறமையை, தகுதியை மதிக்கும் பண்பு அவரிடம் மிகுதி யாக இருந்தது.

ஒருசமயம், திரு. முருகு சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கவிதையைக் கொடுத்து அதற்குத் தலைப்பு வைக்கும் படி கேட்டார். அவர் அதற்கு 'ஒரே குறை' என்ற தலைப்புத் தந்தார். அதையே அவர் அந்தக் கவிதைக்குத் தலைப்பாக வைத்தார்.

## அறிவியல் நோக்கு படைத்தவர்

பாவேந்தர் பாடல்களில் அறிவியல் நோக்கு மிகுதியாக இருந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும், புதுமைகள் மலரவேண்டும் என்று கனவு கண்டு, அந்தக் கனவு நனவாகும் வகையிலே கவிதைகள் படைத்திட்ட பாவேந்தர், அறிவியல் கருத்துகளையும் கவிதைகளிலே இழைய விட்டிருக்கிறார்.

சூரியனும், சந்திரனும் தனித்தனி என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அப்படியல்ல என்பதை,

''காலை வந்த செம்பரிதி-
கடலில் மூழ்கி
கனல் மாறி குளிரடைந்த
ஒளிப் பிழம்போ?''

—என்று அவை இரண்டும் ஒன்று என்று தெளிவு படுத்துகிறார்.

இந்தியாவிலேயே முதல் தடவையாக 1930-லேயே குடும்பநலம் குறித்த செய்தியை-கவிதையை எழுதியவரும் பாவேந்தரேதாம்.

''காதலுக்கு வழி வைத்துக்
கருப்பாதை சாத்த
கதவொன்று கண்டறிவோம்''

—என்று அன்றே சொன்னார். அவர் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்துள்ளது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

**சிந்தனையே எழுப்பிவிடும்!**

பாவேந்தர் அவர்கள் நன்றாக உடுத்துவார். அதைப் போல நன்றாகச் சாப்பிடவும் செய்வார். அதுமட்டுமல்ல, தன்னுடன் இருப்பவர்களை, 'நீயும் நன்றாகச் சாப்பிடு' என்பார். சுவையாக இல்லையென்றால், 'அதை வைச்சிடு' என்பார். பாவேந்தர் புலால் உணவைச் சுவைத்து உண்பார்.

ஒருவன் உள்ளத்தை-உணர்வைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்தவர் பாவேந்தர். அவர் புறா வளர்த்தார். பூவின்

அழகை ரசிப்பார். எதையும் கூர்ந்து பார்ப்பார். இவையெல்லாம் அவரது இனிய இயல்புகள்.

இராமலிங்க அடிகள் நள்ளிரவில்தான் படிப்பார்; எழுதுவார். அதைப்போல, பாவேந்தர் நள்ளிரவில்தான் அதிகம் படிப்பார். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கிற வேளையில், இவர் விழித்திருந்து எழுதுவார்.

படுக்கையில், தலையணையின்கீழ், தாள்கள் வைத்திருப்பார். சிந்தனை வந்ததும் எழுந்து உட்கார்ந்து கொண்டு எழுதுவார். பொழுது விடிந்ததும், 'ஐயா' என்று சத்தம் போட்டு அவரை யாரும் எழுப்ப வேண்டியதில்லை. சிந்தனையே அவரை எழுப்பிவிடும்.

**கடற்கரையில் கவிதை வரும்!**

ஒரு கவிஞன், கடற்கரைக்குப் போய் நிலவைப் பார்த்து விட்டு எழுதுவானாம்.

பாரதியார், கடலைப் பார்த்துவிட்டு, எழுதுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஓடுகிற தண்ணீரை, வெள்ளத்தைப் பார்த்துவிட்டு எழுதுவாராம்.

பாவேந்தர் பாரதிதாசன் கடற்கரையில், நிழல் சார்ந்த குயில் தோப்பில் எழுதுவார்,

கவிதை வந்ததும், "இருப்பா, வந்துடுத்து, கவிதை எழுதிக்கோ" என்பார்.

பாவேந்தர் கையெழுத்து நன்றாக இருக்கும். கையெழுத்து நன்றாக இருந்தால்தான் உதவிக்கு ஆளை வைத்துக்கொள்வார். அவரிடம் இருந்த அத்தனை பேருக்கும் கையெழுத்து நன்றாக இருக்கும்.

பாவேந்தர் 200 பக்க அளவில் மூன்று நோட்டுப் புத்தகங்கள் வைத்திருப்பார். ஒன்றில் தம் கைப்பட எழுதுவார். மற்ற இரண்டில் எழுதச் சொல்வார். இந்த முறையை எழுத்தாளர்கள் பின்பற்றலாமே!

சுரதாவைச் சந்தித்தவர்: பி.வி.கிரி.
இதழ்: தமிழரசு, 16-12-1990

# பறக்கும் விமானத்தில் பாவேந்தர் விழா!

தமிழ்நாடு முதல் துபாய் வரை இன்று பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அரசாங்கம் செய்யாதவற்றை, அரசாங்கம் செய்ய மறுத்த வற்றை உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை செய்கிறது. பாரதிதாசன் நினைவை போற்ற படகு கவியரங்கம், அஞ்சல்வழி கவியரங்கம், கட்டில் கவியரங்கம், பேருந்து கவியரங்கம் போன்ற பல கவியரங்கங்களை செய்தோம். இன்னும் இரயில் கவியரங்கம், விமான கவியரங்கம் நடை பெற இருக்கிறது. ஆனால் மக்கள் மத்தியில் நூற்றாண்டு விழா பற்றிய செய்திகள் அதிகமாகப் போகவில்லை.

அரசாங்கம் பெரிய அளவில் நூற்றாண்டு விழா தொடக்கத்தைச் செய்யவில்லை. தொலைக்காட்சியில் கூட அதிகமாகச்செய்தி வரவில்லை. பாரதியாருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடியபோது காங்கிரஸ்காரன் மத்தியிலே ஆட்சியிலே இருந்தான். பாரதி காங்கிரஸ்காரன் என்பதாலே அதிகமா செய்தி போட்டு இருப்பான். பாரதிதாசன் அப்படி இல்லை. பகுத்தறிவு கருத்துகளை அதிகமா சொன்னதாலே அவரைப் பற்றி அதிகமா செய்தி போடல போல இருக்கு.

பாரதிதாசன் இறந்தபோது கூட மக்கள் மத்தியிலே அதிகமாகப் பேசப்படவில்லை. காரணம்; அப்போ, நேரு செத்துப் போய்விட்டார். இப்போ, நூற்றாண்டு விழா கொண்டாடுகிற நேரத்திலே ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது

ஏதாவது கட்சிக்காரன் ஆட்சியிலே இருந்தா நல்லா விழாவை செய்வாங்க. பாரதிக்கு இல்லாத பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. முதன் முதலில் பாரதிதாசனுக்கு தான் கவிதையிலே வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டு இருக் கிறது. இது இந்த நூற்றாண்டு விழாவில் மிகப் பெரிய சிறப்பு. இந்த ஆண்டு இலக்கியத்தில் யார் நோபல் பரிசு பெற்று இருக்கிறார்களோ அவர்கள் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

சுரதாவைச் சந்தித்தவர் : அ. ர. குணசீலன்

இதழ் : தாய், 28-4-1991

## இன்றைய கவிஞர்கள் இஸ்திரி போடுகிறார்கள்

உவமைக் கவிஞர் சுரதாவைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் நாடறிந்த நல்ல கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர். புதுமையான உவமைகளால் தமிழ் மரபுக் கவிதைக்கு கம்பீரம் தந்தவர். பாவேந்தரை நன்கறிந்தவர்.

**கேள்வி :** தற்போது யானை மீது, குதிரை மீதெல்லாம் சில பேர் தங்கள் படைப்புகளை அரங்கேற்று கிறார்களே?....

**பதில் :** அந்தக் காலத்தில் நடந்தது வேந்தராட்சி, மிருகங்களின் மீது அவர்களுக்கு ஒரு மோக மிருந்தது. அதனால், அவர்களைத் தாஜா செய்ய அப்போது புலவர்கள் யானை மீதும் தேர் மீதும் தங்கள் பாடல் தொகுதியை அரங்கேற்றினார்கள். இப்போது நடப்பதோ விஞ்ஞான ஆட்சி. இன்னும் கூடவா இந்த மிருகங்களின் தயவு? வேண்டு மானால் வானூர்தியை (விமானம்) நாடலாமே...?

**கேள்வி :** நீங்கள் முதன் முதலாக எழுதிய கவிதை, நினைவிருக்கிறதா?

**பதில் :** வரிகள் நினைவில்லை. சூழல் நினைவிருக்கிறது. ஆண்டு 1930. அப்போது என் வயது10. மணலில், முதன் முதலாக நான் மேய்த்த எருமையைப் பற்றி ஒரு கவிதை எழுதினேன். அப்போதெல்லாம் பதிற்றுப் பத்து, கிளிப்பத்து, எருதுப்பத்து.... என்று ஏதாவதொரு பொருள் குறித்து பத்துப் பாடல்கள் புனைவது பெருமைக்குரியதாக இருந்தது. நானோ 'எருமை பாடல் ஒன்று...' எழுதியுள்ளேன். எல்லோரும் என்னை அருமைக் கவிஞரே என்று அழைக்கிறார்கள். முதன் முதலாக நான் மேய்த்த எருமையைப் பற்றிப் பாடியதால் என்னை இனிமேல் 'எருமைக் கவிஞன்' என்றுதான் அழைக்கட்டுமே...! (சொல்லிவிட்டு நகைக்கிறார்)

கேள்வி : தற்போது நடத்தப்படும் பட்டிமன்றங்கள் கவியரங்கங்கள்....பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

பதில் : இதுவரை நடந்தது, நடப்பது....அலுப்பு தரும் விஷயங்கள், இவற்றையெல்லாம் தள்ளி வைத்து விட்டு புதிதாக சிந்திக்க வேண்டும். புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடித்துப் பாடவேணும்!

கேள்வி : அரசு நடத்திய பாவேந்தர் விழா குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : இதற்கு முன் நடந்த ஆட்சிகள் கட்சி ரீதியானவை. தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பாவேந்தர் பெயரால் பட்டமும், பாராட்டும் அளித்தார்கள். இன்று நடப்பது கவர்னரின் ஆட்சி. இதில் கூடவா பாரபட்சம்? பாரதிதாசன் பகுத்தறிவுக் கொள்கைகளை இலட்சியமாக, குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். அவரது பெயரால் வழங்கப் படும் பட்டங்கள், பரிசுகளை அவரது கொள்கை களை உறுதியாகப் பின்பற்றுபவர்க்கு அளிப்பது தான் சரியானது. ஆனால் நடப்பது என்ன? அவரது பாதைக்கு முரண்பட்ட, பக்திப் பெருக்குள்ள, மதப்பற்றுள்ளவர்களுக்கும், அவரது நினைவுக்கு சிறிது கூடப் பொருத்தம் இல்லாதவர்க் கெல்லாம் பாராட்டு! இது தவறான அணுகுமுறை. விழாவில் கலந்து கொண்ட பாவேந்தரது மகனோ, மகளோ கூட இது குறித்துக் கண்டித்து ஒரு வார்த்தை கூடப் பேசாதது வருத்தப்படத் தக்கது. அவ்வளவேன்?... அவருடன் நெருங்கிப் பழகிய என்னையே மறந்துட்டாங்களே! நீ வேறு எந்தப் பெயர்லயாவது இலக்கியத்துக்குப் பரிசு வழங்கு. பரவாயில்லை. ஆனா பாவேந்தர் பேர்ல இப்படி வழங்கறது சரியில்லென்னேன்...!

**கேள்வி :** நீங்கள் நடத்திய கவியரங்கங்கள்?

**பதில் :** 1989-ல் துபாய்-ஷார்ஜாவுல 'கடல்' கவியரங்கம் நடத்தினேன். ஏற்காட்டின் ஏரியில் படகுக் கவியரங்கம். பிறகு வேலூர்ல 'பேருந்துக்'குள் பயணித்தபடி பேருந்துக் கவியரங்கம்! எட்டுக் குடியில (திருக்குவளை பக்கம்) தெப்பக் கவியரங்கம் நடத்தினேன். அடுத்த ஜூன் 15-ல் 'ரயில்'ல கவியரங்கம் நடத்தப் போறேன். இன்னும், விமானத்துல, ஊஞ்சல்ல...எனப் புதிய இடங்களில் புதிய முறைகளில் என் கவியரங்கப் பணிகள் தொடரும்...!

'தூண்டில் கவியரங்கம்' என்ற புதுமைக் கவியரங்கம் ஒன்றை விரைவில் நடத்தப் போகிறேன். அதாவது 18-ம் நூற்றாண்டில் கூவத்து நாரணன் என்றொரு வள்ளல். அவனைப் பற்றி ஒரு புலவர் 'நீ தியாக சமுத்திரமாய் இருக்கிறாய்' எனப் புகழ்ந்து பாடியதால் அவருக்கு தூண்டிலில் 'தங்க மீன்' பொருத்திப் பரிசாகத் தந்தானாம் அது போல் இந்தத் 'தூண்டில்' கவியரங்கில் சிறப்பாகக் கவிதை வழங்குபவருக்கு 'தங்கமீன்' பரிசளிக்கப் போகிறேன்.

அனேகமாக வரலாற்றில் இதுபோன்ற கவியரங்கம் இதுதான் முதல் முறை என நினைக்கிறேன். கலந்து. கொள்ள விரும்புபவர்கள் என்னைத் தொடர்புகொள்ளலாம்.

**கேள்வி :** இன்றைய புதுக் கவிஞர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?...

**பதில் :** சொல்லப்போனால், துவைத்து உலர்த்திய துணிகளுக்கு இவர்கள் இஸ்திரி போடுகிறார்கள்...!

சுரதாவைச் சந்தித்தவர் : அனலேந்தி
இதழ் : மங்களம், 27-5-1991

## சுரதாவைப் பற்றி...

□ இரண்டு காரணங்களால் சுரதாவின் எழுத்துக்குச் சுரதா எழுத்தே நிகர் முதற் காரணம்; அவர் பிறர் எழுதியதிலிருந்து திருடுவதில்லை; கருத்தையோ! தொடரையோ! தானே தோன்றிய சொற்றொடர் ஒவ்வொன்றும் இனிக்கும் கவிதைத் துணிக்கை!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

□ சுரதாவின் எழுத்துக்களால் பயன் பெற்ற பலரில் நானும் ஒருவன்.

—பேரறிஞர் அண்ணா

□ என்னரும் நண்பர் சுரதா, நான் பிறந்த நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தின் சொற்களஞ்சியமாய்த் தோன்றியவர். ஆழமும் அழுத்தமும் வேகமும் விறுவிறுப்பும் வாய்ந்த அவரது சொற்கள் அச்சந் தயை தாட்சண்யமின்றி அம்புபோல குறிவைத்த இடத்துப் பாய்ந்து தைக்கும் வலிவுடையன.

—டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

□ பாவேந்தருக்குப் பிறகு மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும் ஊட்டுகின்ற கருத்துள்ள கவிதைகளைப் படைத்து வருபவர் கவிஞர் சுரதா.

—டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்

□ கவிஞர் சுரதாவின் கவிதைகளில் எனக்கு அளவு கடந்த காதலே உண்டு. ஒவ்வொரு எழுத்தையும் எண்ணிப் பார்த்து எண்ணம் சேர்ப்பவர் அவர்.

—டாக்டர் மு. வரதராசனார்

□ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்க்குப் பின் அவர் வழி நின்று கவிதை மழை பொழியும் கவிஞர் சிலரில் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர் சுரதா. இதைத் தமிழ்நாடு நன்கறியும்.

—பரலி சு. நெல்லையப்பர்

□ சுரதாவின் திறமையை அவருடைய ஒரு பாட்டின் மூலமாகவே அறிந்து கொண்டு விட்டேன்.

—பேராசிரியர் கல்கி

சுரதா